ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 4 விக்கிரம௵ புரட்டாசி௴ கதிர் 3

அக்டோபர்-1940

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—		1
அன்றுட உலகம்	—		4
அ. இ. கா. காரியக்கமிட்டித் தீர்மானம்			8
காந்தீயம் ஒரு தத்துவம்	—	கிஷோரிலால் மஷ்ருவாலா	10
"முதலிய"	—	"தேசிகன்"	18
ஜப்பான் பாடசாலை	—	ச. மு.	23
சமயாநுஷ்டானம்	—	நிர்வேத சைதன்யர்	25
வார்த்தைகளின் சத்தி	—	பண்டித ஜவஹர்லால் நேரு	34
தமயனின் கடிதம்—13	—	"தேவி தாசன்"	41
சரோஜினி நாயுடு	—	"ஒரு காங்கிரஸ் வாதி"	43

அளவுக்கு மிஞ்சினால்
அமிர்தமும் விஷம் — "நாராயண சிவன்" 47
சிலப்பதிகாரம்-இந்திர விழா — மா. சர்மா, B.A.(Hons) 51
நம்முடைய கிராமங்களும்
அதன் மக்களும் — "சிவ குமாரன்" 58
ஆதிமனிதர்கள் நெருப்பைக்
கண்டு பிடித்தது எப்படி? — "கமலநாதன்" 62

"ஜோதி" கிடைக்குமிடங்கள்

1 என். மாணிக்கம் பிள்ளை
நியூஸ் ஏஜெண்ட்,
தென்பாதி, சீகாழி.

2 கே. மகாதேவ ஐயர்.
நியூஸ் ஏஜண்ட்,
பேரளம், தஞ்சை ஜில்லா.

3 பாரதி பிக்சர் பாலேஸ்,
கல்லுக் கட்டி, காரைக்குடி.

4 'சக்தி' காரியாலயம்,
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

5 ஆர். வி. பதிராவ்
நியூஸ் ஏஜண்ட்,
திருநெல்வேலி ஜங்ஷன்

6 தி. ஈசன் பிரிண்டிங் ஒர்க்ஸ்,
48, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை.

ஜோதி

சுடர் 4 அக்டோபர்-1940 கதிர் 3



மகாத்மா.

"அஹிம்சை, சத்தியம் இவையிரண்டும் என்னுடைய வாழ்க்கையின் லட்சியமாயிருக்கின்றன. யாருக்கு இவைகளில் நம்பிக்கையில்லையோ, இவற்றைத் தனதாக்கிக் கொள்ள முடியாதவர்கள் யாரோ அவர்கள் தயவு செய்து என்னை விட்டு விலகிவிட வேண்டும்." இவை மகாத்மா காந்தி யடிகளின் வாக்கியங்கள். இந்த வாக்கியங்களிலே சொல்லடுக்குகள் இல்லை. ஆனால் எத்தகைய தன்னம்பிக்கையும் ஆத்ம சக்தியும் பிரகாசிக்கின்றன!

மகாத்மா காந்தி யடிகளை, ஒரு அவதாரம் என்று கூறுகிறார்கள் அவருடைய பக்தர்கள். நண்பர்கள், அவரை ஒரு கர்ம வீரன் என்றுரைக்கின்றனர் அவருடைய கொள்கையை ஒப்புக் கொள்ளாதவர்கள், அவரை ஒரு திட புருஷன் என்று சொல்லுகிறார்கள். இன்று (2–10–40) மகாத்மா காந்தி யடிகளின் 72வது ஜெனன தினம்.

அவருடைய பக்தர்கள் இன்று அவரைப் பூஜிப்பார்கள்; நண்பர்கள் போற்றுவார்கள். கொள்கையில் அபிப்பிராய பேதமுள்ளவர்கள் அவரை வாழ்த்துவார்கள். பொதுவாக உலகமெல்லாம் இந்த நன்னாள் கொண்டாடப்படும்.

••

நாகரிகத்திலே, கலைஞானத்திலே உயர்வு வருவதாய்ச் சொல்லும் இன்றைய மனித சமூகத்தைப் அவர் பார்த்து வருந்துகிறார். அதனுடைய செய்கைகளை அவர் சகிக்கிறாரில்லை. காட்டு மிராண்டித் தனமாக வாழ்ந்த அந்தக் காலத்து மனித சமூகத்திற்கும், நாகரீக மேடையிலே சஞ்சரிப்பதாய்ச் சொல்லும் தற்கால மனித சமூகத்திற்கும் ஒன்றும் வித்தியாசமில்லையே! இரு சமூகத்தின் காரியப் பலன்களில் பேதத்தைக் காணோமே! அக்கால சமூகம் செய்த காட்டுமிராண்டித் தனமான செய்கைகள் இப்போது நாசுக்காகவும், ஒருவித அலங்காரமான வேஷத்தோடும் செய்

யப் படுகின்றன. இதில் மாற்றத்தைக் காணோமே என்பது அவர் எண்ணம். விஞ்ஞான வளர்ச்சியையும் இயந்திர நாகரிகத்தையும் அவர் அவ்வளவு வெறுப்பதில்லை யென்று கூடச் சொல்லலாம். அவற்றின் பலனைப் பார்த்துத்தான் துக்கிக்கிறார். இயந்திர நாகரிகம் மனிதனை இயந்திரமாக்கியே விட்டது. விஞ்ஞான வளர்ச்சி மனிதனுடைய அழிவு வேலைக்கு உதவி புரிகிறது என்பது அவர் துணிபு.

இயந்திர வளர்ச்சியாலே, விஞ்ஞான அபிவிர்த்தியாலே, மனிதனுக்குப் போதிய நேரம் கிடைக்கிறது. அந்த நேரத்தை அவன், கலை வளர்ச்சியிலும், தன்னுடைய அறிவை விர்த்தி செய்து கொள்வதிலும் உபயோகிக்க முடியும் என்று சொல்லப்படும் ஆட்சேபத்திற்கு, கிடைக்கும் நேரம் மட்டும் ஒரு மனிதனை மனிதனாக்க முடியாதென்றும், அவன் எந்தத் தொழில் செய்கிறானோ, எந்தச் சுற்றுப் புறத்தில் வாழ்கிறானோ அதைக் கொண்டுதான், அடங்கிக் கிடக்கும் அவனுடைய உயர் குணங்கள் வெளிப்பட்டு அவன் மனிதனாக முடியும் என்றும் அவர் பதில் கூறுகிறார். இந்தக் கொள்கை இவ்வுலகத்திலே வெற்றி பெற முடியுமா? மனிதர்கள் அனுஷ்டிப்பதற்கு சாத்திய மற்றதாயிருக்கிறதே யென்று சந்தேகப் படுகிறவர்களுக்கு, இது வரை உலகம், பலாத்காரத்தையும், இம்சையையும் பின்பற்றி அடைந்த [illegible]ன் என்ன? ஸ்ரீ ராமச்சந்திரர் துஷ்ட நிக்கிரக, சிஷ்ட பரிபாலனம் செய்வதற்காகவே ஆயுதம் ஏந்திப் போரிட்டார் என்று நாம் படிக்கிறோம். ஆனால் துஷ்டத்தனம் ஒழியவில்லையே. அடுத்தே பாரதப் போரை நாம் படிக்கிறோமே? அதுவும், அக்கிரமத்தை ஒழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காகத் தான் நடந்ததாம். ஆனால்? இதற்குப் பின் நாம் எத்தனையோ யுத்தங்களைப் பார்க்கிறோமே.? இதிலிருந்து, அக்கிரமத்தை, அக்கிரமத்தாலோ, பலாத்காரத்தைப், பலாத்காரத்தாலோ, அநீதியை, அநீதியாலோ அடக்க முடியாது என்பது தெரியவில்லையா என்று காந்திஜீ உலகைக் கேட்கிறார். அக்கிரமத்தை, கிரமத்தாலும், பலாத்காரத்தை அன்பினாலும், அநீதியை நீதியாலும், அசத்தியத்தை சத்தியத்தாலுமே வெல்ல முடியும் என்பது அவருடைய திடமான நம்பிக்கை.

இந்த உலகம் பூராவும் ஒரு பெரிய மாளிகை. அதிலுள்ள துண்டு துண்டு தேசங்கள், அந்த மாளிகையின் துண்டு துண்டு அறைகள். அவைகளில் வசிக்கும் யாவரும் ஒரே குடும்ப வாசிகள் என்பது அவரது கருத்து. இவ்வுலகம் உய்வதற்கு, தன்னுடைய கொள்கையை அதன் முன்னே வைத்திருக்கிறார். அந்த லட்சியத்தை யடைவதற்குச் சில வேலைத் திட்டங்களையும் அவர் மனித சமூகத்தின் முன்னே கிழத்தி யிருக்கிறார்

தற்போதுள்ள உலகம் தன்னுடைய கொள்கையைப் பார்த்து நகைக்கிறதென்றோ, ஒப்புக் கொள்ள வில்லை யென்றோ அவர் கவலை கொள்வதில்லை; தயங்குவதில்லை. "இவ்வுலகத்திலே, அஹிம்சையையும் சத்தியத்தையும் நிலை நாட்டுவதற்காகவே நான் வாழ்வேன். அந்த முயற்சியில், எனக்

குச் சாவு நேரிடினும் சந்தோஷமாக அந்தச் சாவை நான் ஆலிங்கனம் செய்து கொள்வேன் என்று காந்திஜீ உறுதியாகக் கூறுகிறார்.

மகாத்மா காந்தி யடிகள் இன்று உலக புருஷர். உலக மெல்லாம் சந்தோஷமாக வாழ வேண்டு மென்பது அவரது ஆசை. இந்த எண்ணத்தாலேயே அவர் தன்னுடைய உயர்ந்த சித்தாந்தத்தை அதன் முன்னே வைத்திருக்கிறார். பலாத்காரத்தால், இன்றே இந்தியா சுதந்திரம் அடைவதாயிருந்தாலும் நான் அதை விரும்ப மாட்டேன் என்று அவர் கூறுவது இந்த நன்னோக்கோடு தான். தேச பக்தி அவரது சரீரம் பூராவும் பரவியிருக்கிற தென்று கூடச் சொல்லலாம். "தேச பக்தியில் நான் யாருக்கும் குறைந்தவனல்ல" என்று சமீபத்தில்கூட அவர் கூறியிருக்கிறார்.

தன்னுடைய சக்தியை மறந்து, தன்னுடைய பலவீனத்தை மிக மிக நல்லமுறையில் அறிந்திருந்த இந்தியா, மகாத்மா காந்தியடிகளின் தலைமையிலே அடைந்த பலன் கொஞ்ச நஞ்சமல்ல. அது தனக்குத்தானே சிந்திக்க ஆரம்பித்து விட்டது. அச்சத்தை உதறி விட்டது. இனி அது முன்னோக்கிச் செல்லும்.

இந்தியா, சுதந்திரத்திற்காகப் போராடுகிறது. ஐம்பது வருஷத்திற்கு மேலாகப் போராடி வருகிறது. இருந்தும் அதனுடைய லட்சியம் இன்னும் கை கூடவில்லை. இந்த இருபதாம் நூற்றாண்டிலுங் கூட அது அடிமையாய்த் தானிருக்கிறது. ஆனால் இந்த அடிமை வாழ்விலும், அது சந்தோஷப் படுகிறது; ஆனந்தப்படுகிறது. ஏன்? ஒரு மகாத்மாவை அது பெற்றிருப்பதால்; அவருடைய தலைமையின் கீழ் நிற்பதால்.

வருஷங்கள் தோறும் மகாத்மா காந்தி யடிகளின் ஜென்ன விழா உலகம் பூராவும் கொண்டாடப்பட வேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

வந்தேமாதரம்.

"ஜோதி" அன்பர்களுக்கு

தற்போதைய ஐரோப்பிய யுத்தம் எப்படி விஷம் போல் பரவி வருகிறதோ அப்படியே காகித விலையும் நாளுக்கு நாள் விலையேறிக் கொண்டே வருகிறது. இந்த நிலைமையில், பக்கங்களைக் குறைத்து வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிர்ப்பந்தம் தற்காலிகமாகத்தான் இருக்கும். அது வரையில் வாசகர்கள், பொறுமையுடனிருந்து "ஜோதி"க்கு ஊக்க மூட்டி வருவார்களாக.

மானேஜர்.



1940

செப்டம்பர்

1 60,000 பேர் ஒரு வருஷ ராணுவப் பயிற்சி பெற வேண்டுமென பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்.

இந்தோ சீனாவிலுள்ள தற்காப்பு அரண்கள் மீது ஜப்பானிய விமானங்கள் அடிக்கடி பறந்தன. அந்த ஸ்தலங்களைப் போட்டோப் பிடித்திருப்பார்களெனக் கருதப்படுகிறது.

சுமார் 100 பிரிட்டிஷ் குழந்தைகளும், அவர்களில் பலருடைய பெற்றோரும் பிரிட்டனிலிருந்து கல்கத்தா வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

2 320 குழந்தைகளையும் பல பிரயாணிகளையும் ஏற்றிக் கொண்டு கானடாவுக்குச் சென்ற ஒரு கப்பல் ஜெர்மன் டார்பிடோவால் தாக்கப்பட்டது. ஆனால் படகு களிலேறி குழந்தைகளும் ஏனையோரும் உயிர் தப்பினர்.

சில இடங்கள் விஷயமாய், பல்கேரியாவின் இறுதியான யோசனைகளை இன்னும் இரண்டொரு தினத்தில் ருமேனியா ஏற்றுக் கொள்ளவில்லையானால் பேச்சு வார்த்தை முறிந்து விடுமென ஒரு செய்தி கூறுகிறது.

அமெரிக்க ஆங்கிலோ கடற் படை ஒப்பந்தம் ஒன்று இன்று வாஷிங்டனில் கையெழுத்திடப் பட்டது. இதன்படி 50 நாசகாரிகளை அமெரிக்கா பிரிட்டனுக்கு வழங்கும். [பிரிட்டன், வட அமெரிக்கா க்] கண்டத்தில் தனக்குச் சொந்தமான பிரதேசத்தில் 99 வருஷக்குத்தகைக்கு கடல், விமானத் தளங்கள் ஏற்படுத்திக் கொள்ள அமெரிக்காவுக்கு உரிமை கொடுக்கிறது.

எகிப்தில் மந்திரி சபை மாற்றியமைக்கப் பட்டது. இதில் வாப்துக் கட்சியினர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

3 யுத்தம் தொடங்கி ஒரு வருஷமாவதை முன்னிட்டு இன்று லண்டன் வெஸ்ட்மினிஸ்டர் ஆபேயில் ஒரு பிரார்த்தனை நடந்தது. பிரதம மந்திரியுள்பட சில மந்திரிகள் இப் பிரார்த்தனையில் கலந்து கொண்டனர்.

ஹிந்து மகா சபைத் தலைவர் வி. டி. சவர்க்காருக்கு இன்று பம்பாயில் ஆபரேஷன் நடந்தது.

4 இன்று ஹிட்லர், மாரிக்கால உதவிக்கான இயக்கத்தைத் துவக்கி வைத்துப் பிரசங்கம் செய்தார்.

காமன் சபையில் பிரதம மந்திரி சர்ச்சில் சமீபத்தில் நடந்த அமெரிக்க ஆங்கிலோ கடற்படை ஒப்பந்தத்தைத் தெரிவித்து இன்று பேசினார்.

இந்தோ—சீனாவின் வட கிழக்குக் கரை முழுவதையும் ஜப்பான் கப்பல்கள் முற்று கைப்போடும் கருத்துடன் காவல் புரிந்து வருவதாக ஹாங்காங் செய்தி யொன்று கூறுகிறது.

எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் திரும்பவும் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொண்டால்தான், தேசீய சர்க்கார் அமைக்கும்படி வற்புறுத்தி, யுத்த முடிவில் சுயேச்சை கிடைக்க வழியும் தேடலாம் என சத்திய மூர்த்தி ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்.

இத்தாலிய விமானங்கள் இன்று ஏடனில் குண்டுகளை வீசின. சேதமில்லை.

5 இன்று காமன்ஸ் சபையில், ஒரு கேள்விக்கு, வைஸிராயின் பிரேரணைகளைக் காங்கிரஸ் நிராகரித்து விட்டதாயும், மூஸ்லீம்லீக் அதை வரவேற்றிருப்பதாயும் இந்தியா மந்திரி அமெரி தெரிவித்தார். மற்றும், காங்கிரஸ் முக்கியம் வாய்ந்த ஸ்தாபனமானதால், இப் பிரச்னையைப் புதிய வழியில் தீர்ப்பதற்கு யோசிக்கப்படுமா வெனக் கேட்ட அடுத்த கேள்விக்கு, யோசிக்க முடியாது என்று இந்தியா மந்திரி பதிலளித்தார்.

ருமேனியாவில் இன்று உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது, ஜனங்கள் கூட்டங் கூட்டமாகக்கூடி அரசர் பட்டம் துறக்க வேண்டுமெனக்கத்தி துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

6 ருமேனிய அரசர் கரோல்மன்னர் இன்று முடி துறந்தார். அவருடைய மகன் மைக்கேல் மன்னர், ருமேனிய அரசரானார்.

பழைய சுயராஜ்யக் கட்டிடத்திலிருந்து, தெலுங்கிலும் தமிழிலும், 'கிராம சுயராஜ்யம்,' 'கிராமக் குடியரசு ! என்ற வாரப் பத்திரிகைகள் முறையே செப்டம்பர் 2வது வார முதலிலும் அம்மாத முடிவிலும் வெளி வரும் என டி. பிரகாசம் அறிவிப்பதாய் சென்னைச் செய்தி கூறுகிறது.

7 ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியின் இன்றையக் கூட்டத்தில், காலியாயிருக்கும் தலைவர் ஸ்தானத்திற்கு, பண்டித ஜவஹர் தெரிந்தெடுக்கப்பட்டார்.

மேற்கண்ட கூட்டத்தில். எம். என் ராயின் மீது தற்காலிகமாக ஒழுங்கு நடவடிக்கை யெடுத்திருப்பதாய்த்தீர்மானிக்கப்பட்டது.

ருமேனியாவுக்கும் பல்கேரியாவுக்கும் இன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி இருநாட்டு எல்லைகளும் 1912ல் இருந்ததைப் போல் திருத்தி யமைக்கப்படும்.

பர்மா, ஊபூ மந்திரி சபை மீது இன்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் பட்டு நிறை வேறி விட்டதால் அது ராஜீநாமாச் செய்து விட்டது.

8 இன்று மைசூர் புதிய மஹா ராஜா ஸ்ரீ ஜய சாம ராஜ உடையார் பகதூர் பட்டாபிஷேகம் செய்து கொண்டு சிம்மாசனம் ஏறினார்.

9 லண்டன் பார்லிமெண்ட் கட்டிடத்திற்கு உயர இன்று விமானப் போர் நடந்தது.

பர்மாவில், இன்று ஊசாவைப் பிரதம மந்திரியாகக் கொண்ட புதிய மந்திரிச் சபை அமைந்திருக்கிறது.

10 இன்று இரவு பிரிட்டிஷ் விமானங்கள் பெர்லினைத் தாக்கியதில், ஜெர்மன் பார்லிமெண்டான ரீச்ஸ்டாகும் தாக்கப்பட்டது.

11 தமிழ்நாட்டு தேசியகவி பாரதியாரின்விழா தமிழ்நாடு, பர்மா, மலேயா முதலிய இடங்களில் கொண்டாடப் பெற்றது.

ஹிந்து மகா சபையின் தலைவராக அதன் உபதலைவர். டாக்டர் மூஞ்சே நியமிக் பெற்றிருக்கிறார்.

எகிப்தை சீக்கிரத்தில் இத்தாலி தாக்கலா மென்று ஓர் செய்தி கூறுகிறது

12 அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் நிகழ்த்திய சொற் பொழிவில் தாம் யுத்தத்தை வெறுப்பதாகவும், எப்பொழுதும் அமெரிக்காவுக்கு யுத்தம் வாராதபடி செய்ய உறுதி கொண்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

மெக்ஸிகோ தேசத்தின் தலைவராக ஜெனரல் காமாசோ கோவ்மா தேர்ந்தெடுக்கப் பட்டார்.

பிரிட்டிஷ் சோமாலிலாந்தை இத்தாலி கைப் பற்றியதனால், செங்கடல் பாதை எவ்வகையிலும் பாதிக்கப் பெறவில்லை என்று இந்திய அரசாங்கம் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

பம்பாயில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் ஆரம்பமானது. காந்திஜி கூட்டத்தில் பிரசன்னமா யிருந்தார்.

13 ஜெர்மனி விமானிகள் லண்டன் பக்கிங்காம் அரண்மனை மீது வெடிகுண்டுகளை எறிந்தார்கள். மா. த. மன்னர் பிரான் தம்பதிகள் அதிர்ஷ்ட வசமாக எத்தகைய அபாயத்திற்கும் உட்படாது தப்பினார்கள்.

14 பிரிட்டிஷ் ராயல் விமானிகள், பிரெஞ்சு கடற்கரையில் பொலோனிலிருந்து டங்கர்க் வரை துறைமுகங்களில் தங்கியிருந்த கப்பல்களைத் தாக்கினார்கள்.

லண்டன் மீது ஜெர்மானிய விமானத் தாக்குதல் மீண்டும் ஆரம்பமானது.

15 அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் பம்பாயில் ஆரம்பமானது. காந்திஜி கூட்டத்தில் அஹிம்சா கொள்கையை விளக்கிப் பேசினார்.

முதல் முதலாக இத்தாலிய துருப்புகள், எகிப்திய பிரதேசத்தில் நுழைந்தன.

இன்று மீண்டும் ஜெர்மானிய விமானிகளால் பக்கிங்காம் அரண்மனை தாக்கப் பெற்றது.

16 அ. இ. கா. க. கூட்டத்தில் பண்டித நேரு கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது.

பிரெஞ்சு இந்தோ—சைனாவின் எல்லைப் புறத்தில் சில பாகங்களைத் தனக்கு அளிக்க வேண்டுமென்று தைலாண்டு அரசாங்கம் கோரி யிருக்கிறது.

இத்தாலியத் துருப்புகள், எகிப்துக்குச் சொந்தமான சோலாம் பிரதேசத்தைக் கைப்பற்றிய போதிலும், அது முக்கியமான பிரதேசமல்ல வென்று எகிப்திய செய்தி தெரிவிக்கிறது.

17 பர்மா ஜனப் பிரதிநிதி சபையில் ஊ-சோ மந்திரி சபை மீது கொண்டு வரப் பெற்ற நம்பிக்கை யில்லாத் தீர்மானம் தோல்வி யுற்றது

லண்டன் மீது இதுவரை நடைபெற்றிராத முறையில் நீண்டநேர, ஆகாய விமானப் போராட்டம் இன்று நடைபெற்றது.

பிரெஞ்சு இந்தோ—சைனா, தைலாண்டு எல்லைப்புறத் தகராறு சம்பந்தமாக ஓர் மத்தியஸ்தக் கமிட்டி ஏற்படுத்தி முடிவு செய்வதென இருதேச அரசாங்கங்களும் ஒத்துக் கொண்டிருக்கின்றன.

18 பம்பாயில் 13ந் தேதி யன்று ஆரம்பமான காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கூட்டமும் அ. இ. கா. க. கூட்டமும் முடிவடைந்தது.

ஜெர்மானிய வெளிநாட்டு மந்திரி வான் ரிப்பன் டிராப் இத்தாலிக்குப் பிரயாணமானார்.

19 டோகியோ அரசாங்க மாளிகையில்' ஜப்பானிய சக்கிரவர்த்தி, மந்திரிமார்கள்,

முக்கிய தளகர்த்தர்கள் அடங்கிய விசேஷக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

ஜெர்மானிய வெளி நாட்டு மந்திரி ரோமாபுரியில், சினர் முஸோலினியையும், இத்தாலிய வெளி நாட்டு மந்திரியையும் கண்டு பேசினார்.

பிரெஞ்சு இந்தோ—சைனாவில் உரிமைகளை வேண்டி ஜப்பான் சில கோரிக்கைகளைக் கிழத்தியிருக்கிறது.

சிரியாவின் நெருக்கடியான நிலைமையை யோசிக்க எகிப்து மந்திரி சபையின் விசேஷ கூட்டம் ஒன்று நடைபெற்றது.

20 ரோம புரியில் மீண்டும் சினர் முஸோலினி, வான்ரிப்பன்ட்ராப், கவுண்ட் சியானோ முதலியோர்களிடையே சம்பாஷணை தொடர்ந்து நடைபெற்றது.

21 இந்தோ சைனாவின் ஒரு எல்லைப் புறத்தில் சீனத் துருப்புகள் தயாராயிருக்கின்றன வென்று ஓர் செய்தி கூறுகிறது.

ஜெர்மானிய எண்ணெய்ப் பிரதேசங்கள், பிரிட்டிஷ் ராயல் விமானப்படையின் தாக்குதலுக்கு ஆளாகின.

22 ஜப்பானது கோரிக்கைகளுக்கு பிரெஞ்சு இந்தோ சைனா இணங்கி விட்டதாக ஓர் செய்தி கூறுகிறது.

பெஷாவர் நகரில் ஓர் சிறிய பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டது.

ஜெர்மானிய வெளிநாட்டு மந்திரி பெர்லின் திரும்பினார்.

23 ஜப்பான்—பிரெஞ்சு இந்தோ—சைனா சமரஸப் பேச்சுக்கள் மீண்டும் முறிந்து விட்டன வென்றும், ஜப்பானியத் துருப்புகள் இந்தோ—சைனாவில் பிரவேசித்து விட்டன வென்றும் ஓர் செய்தி கூறுகிறது.

பிரிட்டிஷ் மன்னர் தற்போதைய யுத்த நிலைமையைப் பற்றி ஓர் செய்தி விடுத்தார்.

பிரிட்டிஷ் குழந்தைகளை ஏற்றிச் சென்ற ஒரு பிரிட்டிஷ் கப்பல் அத்லாந்திக் மகா சமுத்திரத்தில், அமெரிக்காவுக் கருகில் ஒரு ஜெர்மானிய நாசகாரியால் தாக்கி மூழ்கடிக்கப் பெற்றது.

தைலாண்டு அரசாங்க தூது கோஷ்டியினர் ஆகாய விமான மூலமாக இரங்கூன் வந்து சேர்ந்தனர்.

24 ஏழாவது பர்மா ஸ்டேட் லாட்டரி குலுக்குதல் ஆரம்பமானது.

பிரேஸில் தேசத்திற்கும் ஜப்பான் தேசத்திற்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

ஜனாப் ஜின்னா சிம்லாவில் வைஸ்ராயைச் சந்தித்துப் பேசினார்.

பிரெஞ்சு இந்தோ—சைனாவில் பிரெஞ்சுத் துருப்புகளுக்கும், ஜப்பானியத் துருப்புகளுக்கும் போராட்டம் ஆரம்பமானது.

பிரிட்டிஷ் ராயல் விமானப் படையினர் பெர்லின் நகரிலுள்ள ராணுவ ஸ்தலங்களை வெற்றியுடன் தாக்கினர்

இந்தோ—சைனாவுக்கும், ஜப்பானுக்கும் சமரஸமான முறையில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

பிரெஞ்சு விமானங்கள் ஜிப்ரால்டரை தாக்குகின்றன என்று ஒரு செய்தி தெரிவிக்கிறது.

26 இத்தாலிய வெளிநாட்டு மந்திரி கவுண்ட் சியானோ ஜெர்மனிக்குப் புறப்பட்டார்.

இங்கிலாந்தின் தென்கிழக்கில் ஓர் கொடிய ஆகாய விமானப் போராட்டம் நடைபெற்றது

27 ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய முத்தேசங்களிடையே பத்து வருஷத்திற்கு ராணுவ, அரசியல், பொருளாதார ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. முத்தேசப் பிரதிநிதிகள் ஜெர்மனியில் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டனர்,

யுத்தம் ஆரம்பித்த பிறகு ஏழாவது முறையாக மகாத்மா காந்தி வைஸ்ராயை சிம்லாவில் சந்தித்து சுமார் 3½ மணி நேரம் பேசினார்,

அ. இ. கா. கமிட்டி தீர்மானம்

[செப்டம்பர் மாதம் 13ந் தேதி பம்பாயில் ஆரம்பமான காங்கிரஸ் காரியக் கமிட்டி யினரால் தயார் செய்யப் பெற்று, அங்கு, 15ந் தேதி முதல் நடை பெற்ற அ. இ. கா. க. கூட்டத்தில் 16ந் தேதி நிறை வேறின தீர்மானத்தின் முழு விவரம்:—]

ஆகஸ்ட் மாதம் கடைசியில் வார்த்தாவில் காரியக் கமிட்டி நிறை வேற்றிய தீர்மானத்தையும், 1940 ஜூலை மாதம் 27ந் தேதி பூனாவில் காங்கிரஸ் கமிட்டிக்குப் பிறகு நடை பெற்ற எல்லா விஷயங்களையும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி கவனமாகப் பரிசீலனை செய்தது. கமிட்டி இத்தீர்மானங்களை அங்கீகரிக்கிறது.

இந்திய நெருக்கடியைப் போக்கி, பிரிட்டிஷ் மக்களின் ஒத்துழைப்புடன் தேச முன்னேற்றங் காண வேண்டி காரியக்கமிட்டி, மகாத்மா காந்தியின் ஒத்துழைப்பைக் கூடத் தியாகம் செய்து, 1940 ஜூலை 7ந் தேதி டெல்லி தீர்மான மூலமாக பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஓர் ஆலோசனை கூறியது. பூனாவில் நடை பெற்ற அ. இ. கா. க. இதை அங்கீகரித்தது. இந்தியாவின் சுயேச்சையை அங்கீகரிப்பது தங்கள் நோக்கமில்லை என்பதையும், முடியுமானால் பிரிட்டிஷ் சுரண்டுதலுக்காக தொடர்ந்து இந்தியாவை அடிமைப்படுத்தி வருவதென்பதையும் ஐயமறத் தெரிவிக்கும் முறையில், அந்த ஆலோசனை பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் நிராகரிக்கப் பெற்றது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கம், அவர்கள் தங்கள் விருப்பத்தை இந்தியாவில் சுமத்துவார்கள் என்பதைத் தெரிவிக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் சமீபத்தில் கையாண்டு வரும் திட்டம், இந்தியாவின் பெரும்பான்மை மக்களது விருப்பத்திற்கு மாறாக, இந்தியாவை ஜெர்மனிக்கு விரோதமாக யுத்தத்தில் சேர்த்து, இதற்காக தேசத்தின் உற்பத்தி பொருள்களை சுரண்டுவதைக் கண்டிக்கு நோக்கோடு பொது மக்கள் சுதந்திரமாக அபிப்பிராயங்கள் வெளியிடுவதைக் கூடச் சகிக்க முடியாதென்பதைத் தெரிவிக்கிறது.

இந்தியாவின் இயற்கையான சுயேச்சை உரிமையை மறுத்து, பொதுமக்களின் சுயேச்சை உணர்ச்சியை அடக்கி, இந்திய மக்களைத் தாழ்த்தி, தொடர்ந்த அடிமைத் தனத்திற்கு வழிகாட்டும் எந்த ஒரு திட்டத்திற்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இணங்க இயலாது. பிரிட்டிஷ் அரசாங்கத்தினர் இந்த திட்டத்தைக் கடைப்பிடிபதின் பயனாக தேசத்தில் ஓர் சகிக்க முடியாத நிலைமையை சிருஷ்டித்து, மக்களின் மூலாதாரமான உரிமைகளையும், கௌரவத்தையும் காப்பாற்ற வேண்டி ஒரு போராட்டத்தை காங்கிரஸ் மீது சுமத்துகிறார்கள்.

இந்தியாவின் சுயேச்சையைப் பாதுகாப்பதற்காக காந்திஜியின் தலைமையில் அஹிம்சை முறையைப் பின்பற்றுவதென காங்கிரஸ் உறுதிகொண்டிருக்கிறது. தேசிய விடுதலை இயக்கத்தின் தற்போதைய பெருத்த நெருக்கடியில், கையாள வேண்டிய நடவடிக்கையில் காங்கிரஸுக்கு வழி காட்டுமாறு காந்திஜியை அ. இ. கா. கமிட்டி கேட்டுக் கொள்கிறது. பூனாவில் நடை பெற்ற அ. இ. கா. க. கூட்டத்தில் உறுதி செய்யப் பெற்ற டெல்லி தீர்மானம் காந்திஜீயை மேற்கண்ட வழியில் செல்லாதபடி தடை செய்திருந்தது; அது இனி செல்லாது. அது கழிந்து விட்டது.

அ. இ. கா. க. பிரிட்டிஷ் மக்கள் விஷயத்திலும், இதே போன்று யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இதர தேசமக்கள் விஷயத்திலும் அனுதாபங் கொள்கிறது. அபாயத்தின் முன்னிலையிலும், ஆபத்தின் முன்னிலையிலும் பிரிட்டிஷ் மக்கள் காட்டி வரும் சகிப்புத் தன்மையையும், காங்கிரஸ்காரர்கள் வியக்காதிருக்க முடியாது. பிரிட்டிஷ் மக்கள் மீது எந்த காங்கிரஸ்காரர்களுக்கும் வெறுப்பில்லை. பிரிட்டிஷ் மக்களுக்கு இடையூறு விளைக்கும் நோக்கத்துடன் எத்தகைய செய்கையும் செய்வதிலிருந்து காங்கிரஸை சத்தியாக்கிரக கொள்கை தடை செய்திருக்கிறது. ஆனால் தானே விதித்துக் கொண்டிருக்கும் இக்கட்டுப்பாடு தன்னையே (காங்கிரஸையே) அழித்துக் கொள்ளும் வரை செல்லும் என்று நினைக்க முடியாது. அஹிம்சா முறையை அடிப் படையாகக் கொண்ட தனது திட்டத்தை பூரண சுதந்திரத்துடன் கடைப்பிடித்தொழுக, காங்கிரஸ் வற்புறுத்த வேண்டும். இந்த போதிலும் மக்களின் உரிமைகளைக் காப்பாற்ற வேண்டி, அவசியம் நேர்ந்தால் தவிர, தற்போதைய நிலையில், அஹிம்சா எதிர்ப்பு முறையை காங்கிரஸ் ஆரம்பிக்க விரும்பவில்லை.

அஹிம்சா முறையில் காங்கிரஸ் திட்ட சம்பந்தமாக மாறுபாடான நோக்கங்கள் தோன்றினமை கருதி, இந்த மாறுபாடான நோக்கங்களுக்குக் காரணமாயிருந்த சென்ற தீர்மானங்கள் எப்படியிருந்தபோதிலும் தற்போதைய திட்டம் தொடர்ந்திருக்கும் என்பதை அ. இ. கா, க. தெளிவாக மீண்டும் விளக்கிக்கூற விரும்புகிறது. சுயேச்சைப்போராட்டத்திற்கு மாத்திரமின்றி, சுதந்திர இந்தியாவில் அனுபவ சாத்தியமான வரையில் அஹிம்சா முறைத் திட்டத்தையும், சாதனையையும் மேற்கொள்வதென கமிட்டி உறுதியாக நம்புகிறது. உலகம் தன்னைத்தானே அழித்துக் கொண்டு அநாகரிகத்திற்குத் திரும்பிச் செல்லாதிருக்க வேண்டுமானால், பூரண உலக ஆயுதப் பரிஹாரணம் அவசியம் என்பதையும், புதிய நியாயமான அரசியல் பொருளாதாரத் திட்டம் ஸ்தாபிக்க பட வேண்டுமென்பதையும் சமீப உலக நிகழ்ச்சிகள் தெளிவாக்கியிருக்கின்றன என்பதை கமிட்டி அறிகின்றது. ஆதலால் சுயேச்சை வாய்ந்த இந்தியா உலக ஆயுதப் பரிஹாரணத்திற்கு சாதகமாக முன்னின்று, இந்த உலகத்திற்கு வழி காட்ட தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும். இத்தகைய வழி காட்டும் நிலைமை வெளி நாட்டு விஷயங்களையும், உள் நாட்டு நிலைமைகளை

—கிஷோரிலால் மஷ்ருவாலா

காந்தீயம் ஒரு தத்துவம்

மனித வாழ்க்கையின் பூரணத்துவமான ஒரு எல்லை, அல்லது ஒரு உருவம் என்று, ஒரு தத்துவத்திற்கோ, அல்லது சித்தாந்தத்திற்கோ, அர்த்தமானால் காந்தீயம் ஒரு தத்துவமல்ல. அல்லது, வாழ்க்கை சம்பந்தமான எந்த விஷயத்திற்கும் சந்தேக மறப்பதிலளிக்கக் கூடிய ஒரு பூரணமான சாஸ்திரமே, தத்துவம், அல்லது சித்தாந்த மென்றால் காந்தீயம் ஒரு தத்துவமில்லை. ஆனால், வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கு, அதாவது மனிதனாக வாழ்வதற்குரிய நீதியே ஒரு தத்துவத்திற்கோ, அல்லது சித்தாந்தத்திற்கோ அர்த்தம் என்பதை ஒப்புக் கொள்வதாயிருந்தால், காந்தீயம் என்ற ஒரு தத்துவம் ஏற்கனவே தோன்றி விட்டது. காந்தீயத்தை சர்வோதயம் அல்லது சத்தியாக்கிரக மார்க்கம் என்று கூறலாம்.

காந்தீயம் ஒரு புதிய தத்துவமில்லை. உலகத்தாருக்கு இதற்குமுன் பரிச்சயமிராத ஒரு சித்தாந்தமல்ல காந்தீயம். அது மிக மிகப் பழைய காலக் கொள்கையே. ஆதி காலத்திலிருந்து இது நாள் வரை, அக்கொள்கை மனித சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக இருந்து வருகிறது. மனித சமூகம் அக்கொள்கையை மிகவும் மரியாதையாகவும் மதிக்கிறது. ஒவ்

யும் சார்ந்திருக்கின்றது. ஆனால் ஆயுதப் பரிஹாரணத்திட்டத்தை அனுபவ சாத்தியமாக்கும் முயற்சியில் இது தன்னாலியன்றவரை உதவி செய்யும். சாத்தியமான ஆயுதப் பரிஹரிணமும், தேசப் போராட்டங்களுக்கு முடிவு கண்டு உலக அமைதியை நிலை நிறுத்தும் செய்கையும், தேசப் போராட்டங்களுக்கும் யுத்தங்களுக்குமுரிய காரணங்களை அகற்றுவதைத்தான் சார்ந்திருக்கின்றன. ஒரு தேசம் இன்னொரு தேசத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவது, ஒரு சாரார், மற்றொரு சாராரால் சுரண்டப்படுவது ஆகியவைகளுக்கு முடிவு கண்டால், இக்காரணங்கள் இல்லா தொழியும்.

இந்த முடிவுக்கு இந்தியா அமைதியாக வேலை செய்யும்; இந்த லக்ஷியத்தை மனதிற் கொண்டு, இந்திய மக்கள் ஒரு சுயேச்சை வாய்ந்த சுதந்திர நாட்டின் அந்தஸ்தை தங்கள் நாடு அடைய வேண்டுமென்று விரும்புகின்றனர். உலக முன்னேற்றத்தையும், உலக அமைதியையும் விரும்பும் சுதந்திர நாடுகளின் வரிசையில், மற்றைய தேசங்களுக்கும் நெருங்கிய தொடர்பை யுண்டாக்குவதற்கு இத்தகைய சுதந்திரம் ஆரம்ப வேலையாகும்.

வொரு காலத்திலும், நூற்றுக் கணக்கான ஆண்களும் பெண்களும் தங்களுடைய சொந்த வாழ்க்கையில் இக்கொள்கையை மேற் கொண்டு நடக்க முற்பட்டிருக்கின்றனர். பழைய காலக் கொள்கையாகிய இந்தத் தத்துவத்தில் காந்திஜி செய்த ஒரு விசேஷம் என்னவென்றால், தனிப்பட்ட மனிதர்கள், தங்களுடைய வாழ்க்கையிலே அனுஷ்டித்து வந்த இத் தத்துவம், மனித சமூகம் பூராவுக்கும், அரசியல் வாழ்விலுங் கூட பெரிய முறையில் அனுஷ்டிக்கப் பட வேண்டும். அனுஷ்டிக்கப் படவுங் கூடும் என்பதே யாகும்.

இந்தச் சித்தாந்தத்தின் லட்சியமாவது, மனிதர்கள் மட்டுமில்லை, இந்த உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளுமே ஒரு பெரிய குடும்பம் என்பது. ஆனால் தற்கால உலகில் இது அனுபவ சாத்தியமற்றதாகி விடும். மானிட சமூகம் பூராவும் ஒரே குடும்பம் என்ற முடிவோடு அடுத்து ஆராய்வோம். இந்தக் குடும்பத்திலே இவன் உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன் என்ற பேதங் கிடையாது, பிறவியின் காரணமாக ஒருவனுக்கு அதிகமான உரிமையோ, மற்றவனுக்குத் தாழ்ந்த உரிமையோ இல்லை. இவர்கள் யாவரும் சமம். யாவரும் சமமான அந்தஸ்துடையவர்களே. அரசியல் நிர்மாணத்திலே, இப்பெரிய குடும்பத்திலேயுள்ள அனைவருக்கும் சமமான அந்தஸ்தும், யாவரும் முன்னுக்கு வருவதற்கு வசதியும் இருக்குமாறு செய்ய வேண்டும்.

இந்த உலகத்திலே பல தேசங்களிருக்கின்றன. மேற்கண்ட சித்தாந்தப்படி, இந்த உலகத்தை ஒரு பெரிய வீடாகவும், துண்டு துண்டு தேசங்களை, அந்த வீட்டிலுள்ள துண்டு துண்டு அறைகளாகவுங் கொள்ள வேண்டும். இந்தத் துண்டு துண்டு அறைகளிலே மனிதர்கள் வசிப்பது ஒரு நியதியே தவிர வேறில்லை இந்த நியதிப்படி யாவருக்கும், க்ஷேமமும் சுகமுங் கிட்டுவதாயின், மேற் கண்ட அறைகளை உடைத்து விட வேண்டிய அவசியமேயில்லை. ஆனால், மானிட சமூகத்தின் க்ஷேமத்தை முன்னிட்டு, அந்த நியதியிலே ஏதேனும் சீர்திருத்தம் செய்ய வேண்டியதிருப்பின் கட்டாயம் செய்யவே வேண்டும். அவ்விதம் செய்வது நீதிக்கு முரண்பட்டதாகவும் மாட்டாது. அதாவது, ஒரு தேசத்தவர், மற்றொரு தேசத்திற்கு சென்று வாழ்வது, மனித சமூகத்தின் க்ஷேமத்திற் கியைந்ததாயிருப்பின், அவ்விதம் வாழ்வதற்கு எந்த ஒரு உரிமைப் பிரசினையும் குறுக்கிடக் கூடாது என்பதே இதன் பொருள்.

ஒவ்வொரு வீட்டிலும் சில ஏற்பாடுகள் உண்டு. சில நடை முறைகள் உண்டு ஆனால் ஒரு வீட்டைப் போன்றே அடுத்த வீட்டிலும், இந்த ஏற்பாடு, அல்லது நடைமுறை அனுஷ்டிக்கப் படுவதில்லை. இது, அந்தந்த வீடுகளிலே வாசம் செய்பவர்களின் சுக க்ஷேமத்தையுஞ் சௌகர்யத்தையும் பொறுத்துச் செய்து கொள்ளப் பட வேண்டியவை. எந்த வீட்டில், எந்த ஏற்பாட்டின்படி காரியங்கள் நடத்தப்பட வேண்டும்; அதுவும் எவ்விதம் நடத்தப்பட வேண்டும்;

அதை நடத்துவது யார்; அவருக்கு என்ன அதிகாரம்; எந்த நியதி முறையை அவர் பின்பற்ற வேண்டும், இப்படியுள்ள விஷயங்கள் அந்த வீட்டிலே வசிப்பவர்கள் யாவரும் கூடி தங்களுக்குள் செய்து கொள்ளப்பட வேண்டியவை, இதில் யாருக்கும் எந்தவிதமான விசேஷாதிகாரமும் இருக்கக் கூடாது; இருக்கவும் முடியாது. மனித சமூகத்தின் நன்மைக்காக, இந்த ஏற்பாடுகளில் ஏதேனும், எப்பொழுதாவது சீர்திருத்தம் செய்ய வேண்டுவது அவசியமாயிருப்பின் அதை உடனே அப்பொழுதே செய்ய வேண்டும். இது பழைய ஏற்பாடாச்சே, பழைய நடைமுறையாச்சே யென்ற எண்ணமே கூடாது. அவ்விதம் சீர்திருத்துவது குற்றமில்லை; அது நமது கடமையாகும்.

மேலே கூறப்பட்டிருக்கும் விஷயம் ஒரு குடும்பத்திற்கும் பொருந்தும். ஒரு குடும்பத்திலே, யாருக்கு எந்த வேலையைக் கொடுப்பது, யாரிடத்தில் என்ன வேலை வாங்குவது, அதையெப்படி வாங்குவது என்ற விஷயங்கள், அக் குடும்பத்தார் அனைவருடைய சுக சௌக்யத்தை முன்னிட்டு யோசித்துச் செய்து கொள்ள வேண்டியவை. இதில் அக் குடும்பத்தில் யாருக்கும், எந்த ஒரு விசேஷமான அதிகாரமும் இருக்கக்கூடாது.

சரி, அப்படியானால் ஒரு குடும்பத்தின் நடைமுறையிலோ, அல்லது ஏற்பாட்டிலோ, சந்தர்ப்பத்தை அனுசரித்து சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டியதிருப்பதாய் வைத்துக் கொள்வோம். அதை யார் செய்வது? எப்படிச் செய்வது? குடும்பத்திலே ஒருவருக்கொருவர் சண்டை சத்தம் உண்டானால், பெரிய கலகங்கள் நிகழ்ந்தால் அவற்றை எவ்விதம் ஒழிப்பது என்ற கேள்வியெழக்கூடும்.

உண்மை. சில குடும்பங்களிலே அடிக்கடி சண்டை உண்டாவது சகஜம். சில குடும்பங்களிலே ஒருவருக்கொருவர் கலகம் விளைவித்து கொலைகளும் நடைபெற்று கோர்ட்டு வரை போவதையும் நாம் பார்க்கிறோம். இவ்விதமில்லாத சில குடும்பங்களிலே ஒருவருக்கொருவர் பரஸ்பரம் சந்தோஷமற்றவர்களாயிருக்கிறார்கள். சில குடும்பங்களில், யாராவது ஒருவன் சுயநலமுள்ளவனாயிருப்பின் அவனால் மற்றவருக்குத் துன்பம் ஏற்படுவது சர்வசாதாரணமான விஷயம். இந்தக் குற்றங் குறைகளெல்லாம், மனித சமூகம் இன்னும் சரியான வளர்ச்சியடையவில்லையென்பதையே காட்டுகின்றன. வளர்ச்சியற்ற குணங்களின் சின்னங்களே இக் குற்றங் குறைகள். ஆயினும் இவ்விதம் குடும்பங்களிலே நடைபெறும் கலகங்களை அடக்குவதற்கு உபாயமே இல்லாமலும் போய் விடவில்லை என்பதையும் நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

நல்ல அறிவும் நாகரிகமும் பொருந்திய குடும்பங்களிலே ஏற்படும் குடும்பக் கலகங்கள், எந்த வித மரியாதையான முறைகளைக் கையாண்டு அடக்கப்படுகின்றனவோ, அதே போன்று, அதே முறைகளைக் கையாண்டு மனித சமூகம் பூராவிலும் நடைபெறும் கலகங்களையும் அநீதிகளையும் ஏன் அடக்கக் கூடாது? இது நடைபெறக் கூடாத காரியமா?

இல்லை. நடைபெறக் கூடிய காரியமே. இவ்விதம் அடக்க வேண்டுவது அறிவுடைமை மட்டு மன்று; அது கடமையுமாகும்.

நல்ல அறிவும், நாகரிகமும் பொருந்திய குடும்பங்கள் என்று கூறுகிறோமல்லவா? அந்தக் குடும்பத்திலேயுள்ளவர்கள் எந்த விதமான நடைமுறையைக் கையாளுகிறார்கள்? ஒத்த மனதாய், ஒத்த குணத்தாயிருக்க வேண்டுமென்றே அக் குடும்பத்திலுள்ள யாவரும் விரும்புகின்றனர். ஏதேனும் அபிப்பிராய பேதமோ, குறையோ ஏற்படின் யாவரும் உட்கார்ந்து மனம் விட்டுப் பேசி அபிப்பிராய பேதங்களையும் குறைகளையும் அகற்றிக் கொள்ளுகிறார்கள். அந்தக் குடும்பத்திலே உள்ள தலைவன், அதாவது, மூத்த சகோதரன், தன்னுடைய இளைய சகோதரர்களுக்கோ, அவர்களது குழந்தைகளுக்கோ எந்த ஒரு கஷ்டமோ, அல்லது குறையோ ஏற்படக்கூடாதென்று சதா கவலை கொள்கிறான். அப்படி யேதேனும் கஷ்டங்கள் நேரிடினும் அக்கஷ்டங்களைத் தானே ஏற்றுக் கொள்ளுகிறான். ஹிந்துக் குடும்பங்களிலே, தன்னுடைய இளைய சகோதரர்களின், க்ஷேமத்திற்காக, அவர்களின் சுகத்திற்காக தங்களுடைய சுகத்தையும், க்ஷேமத்தையும் பலியிட்டு விட்ட எத்தனையோ மூத்த சகோதரர்களை நீங்கள் பார்க்கலாம்.

சரி, குடும்பத்திலே யுள்ள ஒருவன் கெட்டவனா யிருந்தான். அப்படியானால் "என்ன செய்வது? அவன் நல்வழிக்குத் திரும்பு மாறு புத்திபுகட்டுகிறார்கள். அவனுடைய நடத்தையானது, பெரிய ஒரு குறை கூறுவதற்கோ, குறை நிகழ்வதற்கோ ஏதுவில்லா திருப்பின், குடும்பத்திலுள்ள மற்றவர்கள், அதைப் பொறுத்துச் சகித்துக் கொள்ளுகிறார்கள். அவ்விதம் சகித்துக் கொள்ளக் கூடாததாயிருப்பின், குடும்பத்திலுள்ள மற்றவர்கள், சில நீதி முறைகளைக் கையாண்டு அவனை நல் வழிக்குத் திருப்ப முயற்சிக்கின்றனர். அப்படியும் முடியவில்லையானால், அவனுக்குத் தெரிந்த நண்பர்களைக் கொண்டு சொல்லச் செய்கிறார்கள்; அல்லது அவர்களை ஒரு பஞ்சாயத்தாக நியமிக்கிறார்கள். அவனிடத்திலே மறைந்து கிடக்கும், நல்லபுத்தி, நல்ல குணங்கள் உயர்ந்த எண்ணங்கள் இவற்றைத் தூண்டி விட்டு, தன்னுடைய செய்கைக்கு அவன் வெட்கப் படுமாறு செய்ய முயற்சிக்கின்றனர். பெரியவர்களிடையிலும் சரி, சிறியவர்களிடையிலுஞ் சரி இந்த உபாயம் கையாளப்படுகிறது. ஸ்திரீகளின் பிடிவாதம், குழந்தைகளின் பிடிவாதம் என்று சாதாரணமாகக் கூறப்படுபவை கெட்ட குணங்களாக அர்த்தப்படுத்தப் படுகின்றன, எண்ணப் படுகின்றன. ஆனால் அந்தப் பிடிவாதங்களும் சத்தியாக்கிரகத்தோடு சேர்ந்தவைகளாகக் கொள்ளக் கூடும். அதாவது, 'ஆக்கிரகம்'—பிடிவாதம் என்ற இந்த ஆயுதமானது ஒரு குடும்பத்திலே யுள்ள சிறுவர் முதல் பெரியவர் வரை யாவரும் கைக் கொள்ளக் கூடியது. சிலசமயம்மிருகங்களுங்கூட இந்த 'பிடிவாத' ஆயுதத்தை உபயோகிக்கின்றன. இவ்விதம் பிடிவாதம் செய்யும் ஒருவன் தன்னை சத்தியாக்கிரகி என்று கூறிக் கொண்டாலுங் கூட, அதை ஒப்புக் கொள்ளாதவர்கள் அவனை ஒரு வம்புக்காரன்

என்று கூறினாலும் கூறலாம். ஆனால், பெரிய குடும்பங்களிலே, இவ்விதமாக ஒருவன் பிடிவாதம் செய்தானாகில், அவனைப் பலவந்தமாகவோ, அல்லது அடித்தோ அடக்குவதில்லை. அவனுடைய உடைமைகள் யாவற்றையும் பறித்துக் கொண்டு அவனை வீட்டை விட்டுத் துரத்தி விடுவதில்லை. மித மிஞ்சி விட்டால் அவனுக்குரிய பாகத்தைக் கொடுத்து அவனைத் துண்டாக வைத்து விடுகிறார்கள். இதை யல்லாது அவன் மீது இதற்கு விபரீதமான செய்கை கையாளப் படின், அதாவது பலாத்காரம் பிரயோகிக்கப்படின் என்ன ஆகும்? அந்தக் குடும்பம் பூராவும் அழிந்தே போகும் என்பதற்குத் தடையே யில்லை. ஏனெனில் இதுவரை, இம்சையையோ, பலாத்காரத்தையோ, கையாளும் போது, அவ்விதம் கையாளுபவர்கள் பந்தோபஸ்தாகவும் எதிரிகள் மட்டும் அழிந்ததாகவும் இல்லை யல்லவா? தன்பக்கம் நியாய மிருந்தாலுங் கூட இம்சையைக் கையாளும் போது, கையாளப்படும் இம்சையானது நீதி, அநீதிகளைக் கவனிப்பதில்லை. அது இரு கட்சியாரையும் அழிக்கவே ஆரம்பிக்கிறது. ஆனதால் எவ்வளவுதான் தன் பக்கம் நியாய மிருந்தாலும் எதிரியை வெற்றி கொள்வதற்கு இம்சையைக் கையாளும்போது, எதிரியைப் பார்க்கிலும் விசேஷமான சக்தியோடும், தகுந்த யோசனைகளோடும் பிரயோகிக்க வேண்டிய திருக்கிறது. இல்லையேல் தன் பக்கம் நியாய மிருந்தும் வெற்றி கிட்டாது. ஆனதால், இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ளுகிறோம்? இந்த உலகத்திலே இதுவரை நடந்திருக்கும் சரித்திரங்களிலே நமக்கு என்ன புலனாகிறது? வெறும் இம்சையால் மட்டும் நியாயமோ அன்று சத்தியமோ வெற்றி பெற்றதில்லை யென்பதே. ஆனால் சில குடும்பங்களின் சரித்திரத்தைத் தேடினோமானால், அஹிம்சையைக் கையாண்டு குடும்பக் கலகங்கள் அடக்கப் பட்டிருப்பது நூற்றுக் கணக்கில் நமக்கு உதாரணமாகக் கிடைக்கும். பரம்பரை பரம்பரையாக கலகமும் மனஸ்தாபமுமா யிருந்த எத்தனையோ குடும்பங்கள், ஒரு புண்ணியவதி ஸ்திரீ யினுடைய தியாகத்தினாலோ, அல்லது ஒரு புனிதமான புருஷனுடைய தியாகத்தினாலோ, அல்லது சாதாரணமான காதலினால் ஏற்படும் விவாகத்தாலோ தங்களுடைய மனஸ்தாபங்களை விட்டொழித்து சந்தோஷ சித்தர்களாய் ஒருவரை யொருவர் கட்டித் தழுவிக் கொண்ட எத்தனையோ உதாரணங்கள் பல குடும்பங்களின் சரித்திரங்களிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன.

'காந்தீயம்' இதே அடிப்படை நியாயத்தைப் பொறுத்ததுதான். இதைப் பார்க்கிலும், சில எண்ணங்கள், சில யோசனைகள், சில வேலைத் திட்டங்கள் வெளியிடப் பட்டிருப்பதும், தேசத்தின் தற்கால நிலைமையையும், உசிதா உசிதத்தையும் கருதி நடைமுறையில் அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாகச் செய்யப் பட்டிருப்பனவே.

காந்தீயத்திலே, கதருக்கும், மற்றக் கிராமத் தொழில்களுக்கும் மிகுந்த முக்கியம் கொடுக்கப்படுகிறது. மற்ற தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. கிராமத் தொ

விக்கிரமடிவரு

றில்களையும் கதரையும் ஆதாரமாக வைத்தே கல்வித் திட்டத்தை அமைக்க விரும்புகிறது காந்தீயம். இதைக் கொண்டு காந்தீயம், மற்றக் கலைகளையோ தொழில்களையோ வெறுப்பதாய் எண்ணி விடக் கூடாது. ஆனால் தற்கால இந்தியா க்ஷேமமடைய வேண்டுமாயின், அந்த க்ஷேமமும் நிலைத்ததாயிருக்க வேண்டுமாயின், அதற்கு இதைத் தவிர வேறு வழியில்லையென்பது காந்திஜியின் நம்பிக்கை. பேனாமுனையால், உடனே பொதுவுடைமை ராஜ்யம் ஸ்தாபிதமாகி விட்டாலுங் கூட, அவ்விதம் ஸ்தாபித்தவர்களும், தேசத்திலே யாவருக்கும் வயிறு நிறைய உணவு கிடைக்கக் கூடிய காந்திஜியின் இந்தப் பொருளாதாரத் திட்டத்தை நடத்த முற்படுவார்கள்.

ஒவ்வொரு மனிதனிடமும் நாள்தோறும் எட்டு மணி நேர வேலை வாங்கி, அவனுக்கு எட்டணாவை கூலியாகக் கொடுக்க வேண்டுமென்று காந்திஜி விரும்புகிறார். இதே முறையை அடிப்படையாகக் கொண்டு, ராட்டை சுழற்றுகின்ற கிழவி முதல் வைஸிராய் வரை சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று அவர் கூறுகிறார். இதைக் கொண்டு, மனிதர்கள் சுகமாயிருக்க, சந்தோஷமாயிருக்க காந்திஜி விரும்பவில்லையென்று எண்ணுவதா? அப்படியல்ல. தேசத்தின் முழு அதிகாரமும் தன் கையிலிருந்து, நினைத்ததை முடிக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்த தோழர்களும் தன் பக்கமிருந்தால், கொஞ்சக் காலத்திற்குள்ளேயே தேசத்தை எவ்வித உன்னத நிலைக்கும் கொண்டு வர முடியும் என்ற திடங் கொண்டிருக்கிறார் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு. ஆடம்பரத்தையும் உல்லாச வாழ்க்கையையும் காந்திஜி வெறுக்கிறார் என்பது உண்மையே. அவர் ஆடம்பரமற்ற எளிய வாழ்வையே விரும்புகிறார். ஆனால் அவர் இவ்வார்த்தைகளை தரித்திரர்களுக்கு முன்னால் சொல்வதில்லை. தரித்திர நாராயணனை நாம் ஆலிங்கனம் செய்து கொள்ள வேண்டுமென்று காந்திஜி கூறுவது, நமது தேசத்திலே, வயிற்றுக்கில்லாது தரித்திரச் சேற்றிலே, உழலும் ஏழை மக்களுக்குச் சேவை செய்யுங்கள் என்று கூறுவதே தவிர நீங்களும் போய் தரித்திரத்தைக் கட்டித் தழுவிக் கொள்ளுங்கள் என்பதல்ல. யாருக்கு உண்ண உணவில்லையோ, உடுக்க உடையில்லையோ, இருக்க இடமில்லையோ அவர்களிடத்திலே நான் கடவுளைப் பற்றியோ, மதத்தைப் பற்றியோ என்ன பேசுவது என்று காந்திஜியே பல தடவை கூறியிருக்கிறார். நம் தேச ஏழை மக்களின் எதிர்கால வாழ்வு பிரகாசமாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய ஒவ்வொரு வேலைத் திட்டத்தின் அடிப்படையாயிருக்கும்.

காந்திஜி கனவு காணும் ராமராஜ்யத்திலே, மஹாராஜாக்களும், ஜமீன்தார்களும், விவசாயிகளும், ஏழைகளும் யாவரும் சந்தோஷமாகவும், சுகஜீவிகளாகவும் இருப்பார்கள் என்று காந்திஜி கூறுகிறார் என்றால், சமூகத்திலே, ஆடம்பர வாழ்வு வாழுபவர்கள் ஒரு புறமும், நாள் முழுதும் உழைத்து உயிர்வாழும் ஏழை உழைப்

பாளிகள் ஒரு புறமும் இருப்பார்கள் என்பது அர்த்தமல்ல. எந்த அஸ்திவாரத்தின் மீது இன்றைய இந்திய சமூகம் நிற்கிறதோ அதிலே நாம் அஹிம்சை மூலமாக, ஜனசமூகம் யாவருடைய நன்மையையும் கருத்திற் கொண்டு காரியம் செய்ய வேண்டியவர்கள். அப்படிப்பட்ட நாம் அவசியமாகவும் அவசரமாகவும் முதலிலே செய்ய வேண்டி காரியம், அளவுக்கு மிஞ்சிய தரித்திரத்திலே அவதியுறும் ஏழை மக்களுக்கு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சிக்கிரம், உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் கிடைக்குமாறு செய்ய வேண்டியதே; இதைப் பற்றி சிந்தனை செலுத்துவதே யாகும். இவ்விதமான ஒரு ஏற்பாட்டை நாம் பூர்த்தி செய்து விட்டோமானால் தற்கால நிலையில் அது எந்த விதத்திலும் குறைந்த திட்டமாக மாட்டாது. இன்றைய இந்தியாவிலுள்ள 38 கோடி மக்களில், விரல் விட்டு எண்ணக் கூடிய சிலரே பெரும் பெரும் பணக்காரர்களும் தனவந்தர்களுமாயிருக்கிறார்கள். இதைச் சகித்துக் கொள்ளுவது மற்ற பெரும்பாலான மக்களுக்கு ஒரு கஷ்டமில்லை. மற்றும், இந்தியாவின் க்ஷேமத்திற்கு இவர்கள் குறுக்கா யிருப்பார்கள் என்று எண்ணுவதும் தவறு. இதைக் கொண்டு, ஜமீன்தார்கள், முதலாளிகள் இவர்களுடைய சர்வாதிகாரத்தை, அவர்களுடைய நன்மையை நிலை நிறுத்துவதே காந்தியத்தின் நோக்கமென்று அர்த்தம் செய்து விடுவது அபத்தமாகும். மனித சமூகம் யாவருடைய க்ஷேமத்தையும் கருதுவது காந்தியம். அதிலே யாவரும் சமம். அங்கு எந்த வேற்றுமையுங் கிடையாது. இதை நாம் மேலேயும் விளக்கி யிருக்கிறோம். அஹிம்சை காந்தியத்தின் ஜீவன் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அஹிம்சையை ஆயுதமாகக் கொண்டு மாறுதலைச் செய்ய விரும்பும் நாம், எல்லா வீடுகளையும் சமனப்படுத்த வேண்டுமென்பதற்காக, உயரமான வீடுகளை இடித்துத் தள்ளி விட வேண்டுமென்பதா? அது கூடுமா? புதிய புதிய வீடுகளை, அதுவும் பலமான வீடுகளைக் கட்டுவோம். அதற்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு இந்தப் பெரிய வீடுகளை உபயோகித்துக் கொள்வோம்.

(மொழிபெயர்ப்பு)



—"தேசிகன்"

"முதலிய"

வார்த்தைகளின் தொகுதியிலே எனக்கு மரியாதைக்குக் குறைவே கிடையாது. பெரிய பெரிய பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் என்னைப் பலவந்தமாக இழுத்து உபயோகித்துக் கொள்ளுகிறார்களென்றால் நான் எவ்வளவு பிரதானமா யிருக்கிறேனென்பதை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளுங்களேன். நாள்தோறும் எனக்கு வரும் அழைப்புப் பத்திரங்களை நான் என்னவென்று கூறுவேன்? கணக்கி லடங்காதவைகளாயிருக்கின்றன. சின்னச் சின்ன மீட்டிங் முதல், பெரிய பெரிய சபைகள்வரை நான் செல்லவேண்டிய திருப்பதால், இராத்திரியோ, பகலோ தூங்குவதற்குக் கொஞ்சங்கூட எனக்கு நேரம் கிடைக்கவில்லை ஏதாவது ஒரு கூட்டங்களுக்கு எனக்கு அழைப்புக் கிடைக்கவில்லையென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி யிருந்தாலும் அழையா விருந்தாக நான் அங்கே சென்று விட்டால் அங்கும் எனக்கு முதல் ஸ்தானந்தான். இதற்கெல்லாம் காரணம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? உண்மையைக் கூறப் போனால், வார்த்தைகளின் கூட்டத்திலே, "முதலிய" என்ற நான் இல்லையானால், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் பாடு திண்டாட்டந்தான். ஆனால், நான் என்ன சொல்வேன். இவ்வளவு பிரதாப சாலியாக, மரியாதைக்குப் பாத்திரவானாக நானிருந்தும்கூட இது நாள்வரை என்னுடைய சரித்திரத்தை யாராவது எழுதியிருக்கிறார்களா? இந்த உலகத்திலே யாராவது கொஞ்சம் வேலை செய்து விட்டால், அதுவும் பொது வேலைகளிலே கொஞ்சம் ஈடுபட்டு விட்டால் அவருடைய சரித்திரம் பக்கம் பக்கமாக வெளிவருகிறது. பத்திரிகைகளிலே அவர்களுடைய போட்டோக்கள் அடிபடுகின்றன. அடடா, எத்தனை சைஸ் போட்டோக்கள். ஆனால் என்னைப்பற்றி ஒரு வரியாவது யாரும் எழுதவேண்டுமே? வாசகர்களே! இதில் ஏதோ ரகஸியமிருக்கிறதல்லவா?

இந்த எழுத்தாளர்களிருக்கிறார்களே இவர்கள், என்னைப்பற்றி எழுத ஆரம்பித்தார்களானால் இவர்களுடைய குட்டு வெளிப்பட்டு விடும். ஏனென்றால், அவர்களுடைய பாஷா ஞானத்தின் பலவீனத்திலிருந்து நான் தான் இவர்களைக் காப்பாற்றி வருகிறேன். இது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

இதனால் அவர்கள் என்னைப்பற்றி எழுதவே மாட்டார்கள். வேறு என்ன செய்வது? ரொம்ப மனமுடைந்து என்னுடைய சரித்திரத்தை நானே இன்று எழுத ஆரம்பித்திருக்கிறேன். வாசகர்களே, இது என்னுடைய சுய சரிதம். ஆனால் ஒன்று மாத்திரம் உங்களிடத்திலே மிகுந்த தயவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். என்னடா, தன்னைப்பற்றியே எழுத

ஆரம்பித்து விட்டானே, தற்புகழ்ச்சியில்லையா என்று என்மீது குற்றம் சுமத்தி விடாதீர்கள். எனக்கு வேறு வழியில்லை. மன்னிக்க வேண்டுகிறேன். நான் எந்த வருஷத்திலே, எந்த மாசத்திலே, எந்த தேதியில் பிறந்தேன் என்பது எனக்கு கொஞ்சங் கூட ஞாபகமில்லை. வேறே யாருக்குத் தான் தாங்கள் பிறந்த வருஷம் மாதம் தேதி தெரியும் சொல்லுங்களேன் பார்க்கலாம். தாய் தந்தையரோ, அல்லது மற்றவர்களோ சொன்னதினால் தானே தெரியும். ஆனால் என் பிறப்பைப் பற்றி ஒன்று மட்டும் நான் சொல்லக்கூடும். எந்த தினத்திலே வார்த்தைகளுக்குப் பஞ்சம் வந்ததோ, அதே நாள் தான் என்னுடைய ஜென்ம தினம். இது ஒரு சரியான கணக்குத் தானே!

எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. நான் சிறு பிள்ளையாயிருக்கும் போது, என்னுடைய தாயாரும் தந்தையும் ஒரு ஜோதிடரிடத்தில என்னுடைய எதிர்கால பலனைப் பற்றிக் கேட்டார்கள். ஜோதிடர் வெகுநேரம் யோசித்தார். அப்பால், நான் ரொம்ப பிரதாப சாலியாயும், பரோபகாரியாயும், என்னுடைய தொகுதியிலுள்ள அனைவராலும் விரும்பப்படுபவனாயுமிருப்பேனென்றும் சொல்லியதோடு, எப்பொழுதுமே நான் பிரமச்சாரியாகவே தானிருப்பேன் என்ற ஒரு தோஷத்தையும் சொன்னார். விவாகமாகாத எனக்குக் குழந்தை குட்டிகளும் இருக்க நியாயமில்லை என்பதை நீங்களே முடிவு செய்து விடுவீர்களல்லவா? எனக்கு விவாகமாகாது, சந்தானங்கள் கிடையாது என்று கேட்ட எனது தாயும் தந்தையும் ஆரம்பத்திலே துக்கப் பட்டார்கள். அவர்கள் சோகப் படுவது சகஜந்தானே. இருந்தாலும் வேறு வழியில்லையே. என் தலையெழுத்து அவ்வளவுதான். அவர்களே எனக்கு, இந்த "முதலிய" என்ற பெயரையிட்டார்கள். இதைத்தவிர எனக்கு வேறு பெயர் கிடையாது. இதிலிருந்து, எல்லோராலும், "முதலிய" "முதலிய" என்று நான் அழைக்கப் படுகிறேன்.

அந்தக்காலத்திலே எனக்கு இவ்வளவு பேரும் புகழும் இருந்ததில்லை. காரணம், நான் சிறு குழந்தையாயிருந்ததினாலே அநேகர் என்னை அறிந்திருக்க மாட்டார்கள். மற்றொரு காரணம், அந்தக் காலத்திலே, படித்தவர்களிடையில் வார்த்தைகளுக்குப் பஞ்சமிருந்ததில்லை. வார்த்தைகளுக்குத் தரித்திரம் பெருகப் பெருக என்னுடைய கீர்த்தியும் பெருகிக் கொண்டே வந்துவிட்டது. இப்பொழுதைய என்னுடைய பிரதாபத்தை நீங்கள் கேட்கவே வேண்டாம். இன்று நான் தான் ராஜா! எனக்குச் சமானமான கீர்த்தியுடையவர்கள் என்னுடைய தொகுதியிலே சில பேராவது இருப்பார்களாவென்பது சந்தேகந்தான். எனக்கு வேறு பெயர் வைக்கப்படாதிருந்தும், என்னுடைய கீர்த்தி பெருகப் பெருக பல வகைப் பேர்களும் எனக்குப் பெருகிவிட்டன. இன்றைய உலகில் எனக்குப் பல பெயர்கள். உலகத்திலே எத்தனை பாஷைகளுண்டோ, எத்தனை உட்பிரிவுகளுண்டோ அத்தனை நாமங்கள். இதற்குத் தகுந்தபடி என்னுடைய நடை நொடி பாவனை

ஆடையும் வேறு வேறு. கருணை மூர்த்தியாகிய கடவுள் இந்த உலகத்திலே மனிதர்களைப் படைத்து, நிறைய பாஷைகளையும் சிருஷ்டித்திருக்கிறார். கேட்பானேன். நானும் எங்கும் நிறைந்திருக்கிறேன். லண்டன் பார்லி மென்டில் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. அங்கும் நானிருக்கிறன். அதே நேரத்தில், இந்தியாவிலே, பண்டிதர்களுடைய சபையிலும் நானிருக்கிறேன. சுற்றி வளைத்துப் பேசுவானேன். சுருக்கமாகக் கூறுகிறேன். அங்கு இங்கு என்று சொல்ல முடியாதபடி எங்கும் நான் காட்சி யளித்துக் கொண்டிருக்கிறேன். பரோபகாரி நான். சேவைதானே எனக்குப் பிரதானம்.

என்னிடத்திலே ஒரு பெரிய குணமுண்டு. அதைக்கேட்டு நீங்களும் சந்தோஷப் படுவீர்கள். இவன் அரசன், இவன் தரித்திரன், இவன் வித்துவான் படித்த பட்டதாரி, இவன் முட்டாள் என்ற பேதமே நான் பாராட்டுவதில்லை. எனக்கு யாவரும் சமம். இவர்களுடைய வீட்டுக்குப்போவதைப் பற்றி நான் கூச்சப்படுவதே கிடையாது; மரியாதைக் குறைவாக நினைப்பதுமில்லை. ஆனால் என்னுடைய தொகுதியிலுள்ள மற்றக் கூட்டாளிகளிருக்கிறார்களே அந்த வார்த்தைகள், அவர்களிடத்திலே இந்தக் குணத்தை நீங்கள் பார்க்கவே முடியாது. ரொம்பக் கர்விகள். வருந்தி வருந்தி அழைத்தாலுங் கூடப் போக மாட்டார்கள். அப்படியே போனாலும், போன இடத்தில் மரியாதையாகத் தங்களை நடத்தவில்லையென்று எண்ணி விட்டார்களோ, உடனே அந்த இடத்தைவிட்டு ஓடிவந்து விடுவார்கள். என்னிடத்திலே இந்தக் குணமே கிடையாது. இதனாலேதான் எல்லோரும் என்னைக் கொண்டாடுகிறார்கள்.

பிறருக்குச் சேவை செய்வது, மற்றவர்களுடைய மரியாதைக்குப் பங்கம் வராமல் காப்பாற்றுவது, இவைகள் தான் என்னுடைய தொழில். இந்த வேலையை நான் செய்யாவிட்டால், ஒருபொழுது போவது எனக்கு ஒரு யுகமாயிருக்கும், அமைதியே யிராது. இந்த உலகத்திலே, என்னுடைய உதவியைப் பெறாத யாருமே கிடையாது. வாசகர்களே! ஒரு உதாரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ஒரு பேச்சாளர், பிரசங்கம் செய்வதற்காக மேடை மீதேறி நின்றார். தன்னுடைய பேச்சு வன்மையையும் பாஷா ஞானத்தையும் சபையிலே காண்பிக்க வேண்டுமே? இதற்குப் பல சாஸ்திரங்களிலிருந்து ஏதேனும் கொஞ்சங் கெஞ்ராவது சொல்ல வேண்டுமல்லவா? ஆனால் அவர் சாஸ்திரங்களை தெரிந்திருப்பது ஒரு புறமிருக்கட்டும்; ஏனென்றால் அந்த சாஸ்திரங்களின் ஏடுகளைக் கூட அவர் புரட்டியிருக்க மாட்டார் பாவம். ஏதோ சில நூல்களின் பெயரையும், அவற்றை இயற்றிய ஆசிரியர்களின் பெயரையும் மாத்திரமே ரொம்பக் கவனமாகத் தெரிந்து வைத்திருக்கிறார். பேசுவதற்குப் போயிருக்கிறார். எழுந்தும் நின்று விட்டார். இங்கும் அங்கும் சபையை பார்த்தார். இவ்வளவில் இவருடைய முகாரவிந்தத்திலே, வியர்வை துளிர்க்க ஆரம்பித்து விட்டது. சிறிது நேரத்திற்கு முன்னே கப்பீரத்தோற்ற மளித்த

அவருடைய முகம், நாணத்தினாலே இப்போது கருத்துவிட்டது. இவருடைய பரிதாப நிலையைக் கண்ட என் மனம் அப்படியெ உருகிப்போய் விட்டது. அவர் அழைக்க வேண்டுமே என்றுகூட நான் எண்ணவில்லை, உதவிக்காக உடனே ஓடி அவர் பக்கத்தில் நின்றேன். "ஐயா பயப்பட வேண்டாம். ஒன்றும் முழுகிப் போய் விடவில்லை. உங்களுடைய உதவிக்கு நானிருக்கிறேன். உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதைச் சொல்லுங்கள். நான் சரிப்படுத்திவிடுகிறேன்" என்று அவருடைய காதுகளில் ரகசியமாகச் சொன்னேன்.

நான் கொடுத்த தைரியத்திற்குப் பிறகு தான் அவருக்கு உயிர் வந்தது. சுண்டியிருந்த அவருடைய முகம் சந்திரனைக் கண்ட குமுதம் போல் மலர்ந்து விட்டது. பேச ஆரம்பித்தார். "சபையோர்களே, பெரியோர்களே, மனு முதலிய நீதிகர்த்தாக்கள், வியாசர் முதலிய புராண கர்த்தாக்கள், கம்பன் முதலிய இலக்கிய கர்த்தாக்கள், வில்லிபுத்தூராழ்வார் முதலிய சந்த கர்த்தாக்கள், அப்பர் முதலிய பக்த சிரோமணிகள். மகா மேதாவிகளாகிய இவர்கள் இந்தப் புனித பாரத தேசத்திலே தான் பிறந்தவர்கள். இவர்களுடைய மகிமையைப் பார்த்து மாக்ஸ் முல்லர் முதலிய மேனாட்டு அறிஞர்கள் அப்படியே ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போயிருக்கிறார்கள் என்று பிரசங்க மாரி பொழிந்தார். எத்தனை "முதலிய" பாருங்கள்.

நீதி வகுத்தவர்களிலேமனு, புராண கர்த்தாக்களிலே வியாசர், இலக்கியக் கர்த்தாக்களிலே கம்பன், சந்த கர்த்தாக்களிலே வில்லி புத்தூராழ்வார், பக்த சிரோமணிகளிலே அப்பர் இவர்களுடைய பெயரைத்தான் நமது பிரசங்கியார் அறிவாரே தவிர, அவர்களுடைய நீதிகளையோ புராணங்களையோ, கவிகளையோ, சந்தங்களையோ தெரிந்தவரில்லை யென்பது வாசகர்களே, நீங்கள் நன்றாகக் கண்டதுதான். ஆனால் அவருடைய பாஷா சூன்யத்தை யகற்றி அவருக்கு எவ்வளவு பெரிய உதவியைச் செய்தேன் பார்த்தீர்களா?

இன்னுங் கேளுங்கள். இந்தக் காலத்திலே பத்திரிகைகளிலே, புத்தகங்களுக்கு மதிப்புரை வருவதை வாசகர்கள் படித்திருப்பீர்கள். ஒரு மதிப்புரை ஆசிரியருக்கு. ஒரு எழுத்தாளரின் மீது வெகு நாளைய மன வருத்தம். அவருடைய புத்தகம் வந்தால் ஒரு கை பார்த்து விடுவது என்று நினைத்துக் கொண்டிருந்த அவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. கிட்டிய தருணத்தை விடுவாரா? தேடிக் கொண்டிருந்தவராயிற்றே! ரொம்பக் கவனமாகப் புத்தகத்தைப் புரட்டினார். முக்கியமான பிசகுகள் ஒன்றையும் அவர் காண முடியவில்லை. கவலை கொண்டார். ஆனால், சில அச்சுப் பிழைகள் இருந்தன. இவைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வார் பாவம். பழி தீர்க்க வழியில்லையே. இந்த நேரத்திலே நான் போய் அவர் எதிரே நின்றேன். அடடா, அவர் பட்ட பாட்டைப் பார்க்க வேண்டுமே! நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பங்கு ஜெயந்தான். பேனாவைக் கையிலெடுத்தார். அவர் எழுதியதைப் பாருங்கள். "இந்தப் புத்த

கத்திலே யுள்ள குறைகள் பூராவையும் எழுதி, எழுந்தாளருடைய அறிவின்மையை வெளிப்படுத்தவோ, அதைக்கொண்டு பத்திரிகையை நிறைக்கவோ, அல்லது வாசகர்களுடைய அருமையான நேரத்தை நஷ்டப்படுத்தவோ நான் விரும்பவில்லை. ஆயினும் கடமையை முன்னிட்டு இந்த நூலிலுள்ள குறைகளில் சிலவற்றை யிங்கு எடுத்துத் தருகிறேன்; முதலிய, முதலிய."

வாசகர்களே! இந்த மதிப்புரை ஆசிரியருக்கு நல்ல தருணத்தில் நான் எவ்வித உதவி செய்தேன் பார்த்தீர்களா? என்னுடைய உதவி யில்லாவிட்டால், இவர் தன்னுடைய வெகு நாளைய மனஸ்தாபத்திற்கு எப்படிப் பழி தீர்த்துக்கொள்வது. விரோதமாக எழுதுவதற்குத் தான் என்னை உபயோகிக்கிறார்களென்று எண்ணுதீர்கள். ஒரு சாதாரணப் புத்தகம். கையிலெடுக்க லாயக்கில்லாதது, அந்தப் புத்தகத்திற்கு சில காரணங்களை முன்னிட்டு நல்லவிதமாக மதிப்புரை எழுதவேண்டும் ஆசிரியர். அப்பொழுது நான்தான் அபயஸ்தானம் கொடுக்கிறேன். பிறகு கேட்பானேன், சாதாரண ஜனங்களிடத்திலே அந்தப் புஸ்தகம் படும் பாட்டை. கம்பன் ராமாயணமும், வள்ளுவன் குறளும் பழைய அலமாரிகளிலே தூங்க வேண்டியது தான். அடடா, என்ன கிராக்கி, எவ்வளவு விற்பனை, எத்தனை பதிப்புகள்!

என்னுடைய பெருமை இவ்வளவு தானா? எத்தனை கூறினும் தகுமே. முட்டாள்களை நான் பண்டிதர்களாக்குகிறேன். அறிவு சூன்யங்களுக்கு அறிவைக்காட்டுகிறேன். கற்பனையற்றகவிகளுக்கு கற்பனைக்கு உதவுகிறேன். உவமானத்தைத் தேடியலையும் பண்டிதர்களுக்கு உவமானத்தைச் சுட்டிக் காட்டுகிறேன். உண்மையைச் சொல்வதானால், குறைவுள்ள விஷயங்களெல்லாம் என்னாலேயே நிறைவுறுகின்றன. வாசகர்களே! என்னுடைய சுயசரிதையை இத்தருணம் இதோடு நிறுத்திக் கொள்ளட்டுமா?

—"ச. மு"

ஜப்பான் பாடசாலை

கீழைத் தேசங்களுள் ஜப்பான் தேசத்துப் பாடசாலைகளை வெகு அழகானவை. ருத்ரனின் கோபம் அத்தேசத்தைத் தாக்கி வெகு நாசமாக்கி விடுகிறதென்றாலும் சுறுசுறுப்பான ஜப்பானியர்கள் அதைப் பொருட்படுத்தாமல் சீர் செய்யும் விஷயத்தில் முனைந்திருக்கிறார்கள். பூகம்பங்களால் இடிக்கப்பட்ட வீதிகளும் பாடசாலைகளும் சீக்கிரத்தில் கட்டப்பட்டு விடும். 50 வருஷங்களுக்கு முன்னாலே தான் ஜப்பானிய ராஜாங்க முறை திருத்தப்பட்டது. 1872ம் வருஷத்தில் எல்லா ஜனங்களுக்கும் வித்தியாச மில்லாமல் கல்வி கொடுக்க வேண்டு மென்று சட்டம் பிறந்தது. அதற்கு முன்னே உயர்தரக் கல்வி சாமுரே யென்னும் மேல் வகுப்புக்கே கொடுக்கப்பட்டு வந்தது. சாதாரண ஜனங்கள் கல்வியே பெறாமலும் சொற்பக் கல்வி பெற்றும் வந்தனர். இப்போது ஜப்பானியக் கல்வி முழுமையும் துரைத்தனக் கட்டுக்குளடங்கி ஓர் கல்வி இலாகா மந்திரியின் பார்வையிலிருக்கிறது. அவர் இராஜாங்கத்தில் ஒரு அங்கத்தினர். முக்கியமான பிரச்னைகளை மந்திரி, ஒரு உயர்தரக் கல்விச் சபை யென்ற ஓர் கூட்டத்தாரிடம் அனுப்பி அவர்களின் அபிப்பிராயத்தைப் பெறுகின்றார். பிறகு அது அரசரின் அந்தரங்க சபையாலும் இராஜாங்க மந்திரிகளாலும் அங்கீகரிக்கப்பட்ட பிறகு சக்ரவர்த்தியின் கையொப்ப மிடப்பட்டு உத்திரவுகளாக வெளியே கிளம்புகின்றன. பிறகு அவை சட்டமாகின்றன.

கல்வி முறைக்கு அஸ்திவாரமாய் கிண்டர் கார்டன் வகுப்புகளும், அதன் மேல் ஆரம்ப வகுப்புகளும். இரண்டாந்தர வகுப்புக்களும் நடைபெறுகின்றன. ஸ்திரீகளுக்கும் பிரத்தியேகமான உயர்தரப் பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. கைத்தொழில் பாடசாலைகளும் பிரத்தியேகமாக இருக்கின்றன. அவைகளுக்கு மேல், சட்டம் வைத்தியம், ரஸாயனம், கலைஞானம், சித்திரம் இவைகளைக் கற்றுக் கொடுக்கக் கல்லூரிகளும், எஞ்ஜினீரிங், வியாபாரம், உபாத்திமை, விவசாயம் இவைகளைப் போதிக்கக் கலாசாலைகளும் நடைபெற்று வருகின்றன. கல்வியின் அஸ்திவாரமாய் ஒழுக்கப்பயிற்சி யமைந்திருக்க வேண்டுமென்பது சுபாவமாய் கீழ் தேசத்து ஜனங்களின் மனோபாவத்தை யொட்டின ஒரு விஷயம். அதை யொட்டியே ஜப்பானிய தேசத்துக் கல்வியின் எந்த அம்சத்திலும் இவ்வொழுக்கப் பயிற்சி யமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட கட்டாயமான ஒரு பழக்கத்தின் பலனாக அச்சாதியாரை வருமை எளியதும், மரியாதை பொருந்தியதுமான நடையிலும் கௌரவமானதும் டாம்பீக மில்லாததுமான வாழ்க்கையிலும் மேம்பட்டுத் தங்கள் தேசத்தைக் "குன்ஷிநோ கோஹனு" அதாவது பிரப்புக்களின்

தேச மென்று சொல்லிக் கொள்ளுகின்றனர்.

தேகப் பயிற்சியும் ஜப்பான் பாடசாலைகளில் செவ்வனே கவனிக்கப்படுகிறது ஆரம்பப் பாடசாலைகளில் தனி விளையாட்டுக்களும் கூட்ட விளையாட்டுக்களும், உயர்தரப் பாடசாலைகளில் சைனியக் கவாத்தும் ஆட்டங்களும் கற்பிக்கப்படுகின்றன. பெண் பாடசாலைகளில் ஸ்வீடன் தேசத்து ஆட்டங்களும், சதுர ஆட்டங்களும், நர்த்தனங்களும், நாக நாட என்ற மூங்கிற் குச்சி யாட்டங்களும், விளையாட்டுக்களும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன பழைய காலத்து விளையாடல்களான வில்விடுதல், வளைந்து நிற்றல், ஜூஜூட்ஸூ என்னும் விளையாட்டுக்கள் இவைகளும் மறக்கப்படவில்லை. வருஷ மொரு முறை பாடசாலைப் பிள்ளைகளெல்லாம் நீண்ட உல்லாச யாத்திரைகள் செய்வதுண்டு. ஒவ்வொரு ஏப்ரலிலும் வைத்தியப் பரீக்ஷை எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயமாயுண்டு. ஜப்பானியர்கள் பால்யத்தில் வெகுவாய் நடந்து பழக்கப்பட்டவர்கள். அவர்களுள் வளைந்த முதுகுகளும் சக்தியற்ற கால்களுமுள்ளவர்கள் ரொம்பக் குறைவு

ஜப்பானியக் குழந்தைகள் தங்கள் சுயபாஷையைக்கற்றுக்கொள்வதோடு கூட 47 அக்ஷரங்களும் ஆயிரக்கணக்கான வார்த்தை யடையாளங்களுமடங்கியதும், 6 அல்லது 7 ஆயிரம் எழுத்துக்கள் அடங்கியதும், எழுதுவதில் பலவிதமான சுழற்றல் களுமுள்ள சீன பாஷையையும் கற்க வேண்டி யிருக்கிறது. ஜப்பானில் சீன நாகரீகம் புகுந்த கால முதல் ஜப்பானியர்கள் இவ்விரு பாஷைகளையும் கற்கவேண்டியது அவசியமாயிற்று. ஜப்பானிய எழுத்துக்களும் மாற்றப்பட்டன. ஓர் அச்சியந்திரசாலையில் நுழைந்து பார்த்தால் ஓர் அச்சுக் கோர்ப்பவன் எழுத்துக்களின் பெயர்களை இரைந்து கூறுவதும் பையன்கள் ஓடி அவைகளைப் பொறுக்கி வருவதும் விந்தையாயிருக்கும். எழுத்துக்களின் தொகை அசாத்தியமாயிருப்பதால் நேரும் தொந்தரவுகள் அநேகம். ஆனுல் பிள்ளைகளின் ஞாபகசக்தி வெகுவிரைவாய் விருத்தியாகின்றது.

ராஜாங்க சர்வ கலாசாலைகளில் 1873ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப் பெற்ற டோக்கியோவி லுள்ளதும் கியோடோவிலுள்ளதுமான கலாசாலைகளே பிரசித்தமானவை. மொத்தம் ஜப்பானில் 13 கல்லூரிகள் இருக்கின்றன. அவைகளில் 30 000 பிள்ளைகள் படிக்கின்றனர். 1,800 உபாத்தியாயர்கள் போதித்து வருகின்றனர். இவைகளேயன்றி சாஸ்திரங்கள், சங்கீதம், பிறதேசத்துப் பாஷைகள், கைத்தொழில் இவைகளைப் போதிக்கும் பாடசாலைகள் விசேஷமா யிருக்கின்றன.

ஐம்பது வருஷங்களுக்குள் இவ்வளவு விசேஷமான மாறுதல்கள் ஏற்பட்டதே வெகு ஆச்சரியமான காரியம். மேல் தேசத்து முறைகளைக் கையாடி நூதன மான வழிகளில் செல்லவேண்டி யிருந்தும் அவர்களுடைய முன்னேற்றம் சிலாகிக்கத் தக்கது.

—"நிர்வேத சைதன்யர்"

சமயாநுஷ்டானம்

சமயத்தின் அநுஷ்டானப் பகுதி மிகவும் பிரதானமானது. நமது தினசரி வாழ்வில் நாமனைவரும் சமயப் பயிற்சியில் ஊக்கமுடையோம். தாகமுள்ள ஒருவன் தண்ணீரின் குண விசேடங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய மாட்டான். சுத்தம், அசுத்சம் என்பதைக் கவனியாது எந்த நீரையாவது குடித்துத் தாக சாந்தி செய்வான். தொடக்கத்தில் ஒவ்வொரு பக்தனிடத்தும் சில சமயக் கொள்கைகள் உண்டு. அவை அநுஷ்டானத்தினால் தெளிவும், உறுதியும் பெறுகின்றன. இவ்வுலக வாழ்வு துன்பம் நிறைந்த தென்பதை நாம் உணர்வோம். நமது உலக அநுபவம் அவ்வுண்மையை நிரூபிக்கின்றது. உலக வாழ்வு சஞ்சலம் நிறைந்த தென்னும் உணர்ச்சியும், நிலையுள்ள பொருளைத் தேடுவதும், சமய வாழ்வின் முதல் படிகளாகும்.

மனிதனுக்கு மூன்று விதமான ஆசைகளுண்டு. முதன் முதலாக அவன் அழியா யாக்கையை விரும்புகின்றான். ஒவ்வொருவனும் நீடூழி காலம் வாழ விரும்புகின்றானே யொழிய ஒருவனும் இறப்பதற்கு விரும்புவதில்லை. ஜீவவர்க்க மெல்லாமே வாழ்வு மீது பயித்தியங் கொண்டு விட்டன. எல்லாப் பிராணிகளிடத்தும் சதா வாழ வேண்டுமென்னு மிச்சையானது சுபாவமாக உண்டு. இரண்டாவதாக மனிதனுக்கு அறிவின் மேல் வாஞ்சை யுண்டு. தெருவின் வழியாகப் போகும் குழந்தை, தனது தந்தையைப் பார்த்து, "அப்பா அது என்ன? இது என்ன?" என்று பல கேள்விகளைக் கேட்கின்றது. அறிவை மேலும் மேலும் சம்பாதிப்பதற்கு நாம் அனைவரும் முயலுகின்றோம். அறிவைச் சேமித்தல் வாழ்வுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது. மூன்றாவதாக மனிதன் இன்பத்தை விரும்புகின்றான். இவ்வுலகப் பொருள்களிலிருந்து எவ்வளவு இன்பம் பெற முடியுமோ அவ்வளவு இன்பத்தையும் பெற நாம் பெரும் பாடு படுகின்றோம். ஒவ்வொருவரும் ஏதோ ஒருவித இன்பத்தையே நாடுகின்றோம். இன்பம் பல்வேறு திறத்தனவாயிருப்பினும் மக்களனைவரும் ஒருவித இன்பத்தையேனும் எவ்வகையாலும் பெற முயலுகின்றனர். வாழ்வு, அறிவு, இன்பம் என்னும் மூன்றினுக்கு முள்ள தர்க்கமே, நமது வாழ்க்கையின் மூன்று இன்றியமையாத அம்சங்களாகும். நாம் மனிதராயிருக்கும் வரை, நமது வாழ்நாள் முழுவதும், அவை நிலை பெற்று நிற்கின்றன. எந்தச் சிறந்த வழியால் இன்பத்தையும் அறிவையும் மிகக் கூடிய அளவு பெற முடியுமோ அந்த வழியைத் தேடுவதே நமது இலட்சியமாகும். மிகக் கூடிய அளவு இன்பத்தைக் கண்டு பிடிப்பதே சமயத்தின் நோக்கமாகும்.

நாமெல்லோரும் மரணத்தை எதிர்பார்க்கின்றோமென்பது அனைவரும் அறிந்த விஷயம். நாம் எவ்வளவு முயன்ற போதிலும், இறக்குந் தருணம், உடல், பொருள், அழகு, மற்றும் நமக்குரிய எல்லாவற்றையும் விட்டுப் பிரிய வேண்டுமென்ற எண்ணத்தை நாம் தவிர்க்க முடியாது. உண்மையானதொண்டன் மரணத்தை வெல்ல முயலுகின்றான். சாஸ்திர ஆராய்ச்சி, சாதுக்கள் கூட்டுறவு, நமது அநுபவம், என்னும் பல்வேறு வழிகளாலும், உலகில் ஒரு பொருளும் நிலையற்றதென்பதை உணருகின்றோம். இந்த உணர்ச்சியானது உலக வாழ்க்கையில் அதிருப்தியடையச் செய்கின்றது. ஆகையினாலேதான், அழியா இயல்பையுடைய வாழ்வு, அறிவு, இன்பம் என்பனவற்றைப் பெற அரும் பாடுபடுகின்றோம். இதே சமய வாழ்க்கையின் ஆரம்பமாகும். தெய்வ தரிசனத்துக்குக் குறைந்த எந்த முறைகளும், நமது ஆத்மீக வாழ்வுக்கு வேண்டிய நிரந்தர வாழ்வு, பரந்த அறிவு, சாஸ்வத இன்பம், என்பனவற்றை அளிக்காதென்பதைக் காலந்தரத்தில் நாம் உணருகின்றோம். ஆண்டவன் ஒருவரே நமக்கு நிறைந்த வாழ்வு, பூரண அறிவு, அழியா இன்பம் என்பனவற்றை யளித்து நமது வாஞ்சைகளைத் திருப்தி செய்ய வல்லவர்.

பல ஆத்ம ஞானிகளோடு கூடிப் பழகினால் அவர்களெல்லோருக்குமிடையே யுள்ள பொது இலட்சணங்களை நாம் காண்கின்றோம். அவர்கள், நீர்மேல் குமிழி போல் நிலையற்ற இகலோக வாழ்க்கையை யிகழ்ந்தும், பரலோக வாழ்க்கையை வியந்துங் கூறுகின்றனர். நிரந்தரமான வாழ்வு, அறிவு, இன்பம் நமக்கு வேண்டுமாயின், நமது இந்திரியங்களின் எல்லையை—அதாவது இவ்வுலகத்தைக்—கடந்து போக வேண்டுமென்று நமது இருடிகள் கூறுகின்றனர். இந்திரியங்களுக் கப்பால் செல்லுதல் ஒரு நிஷமான காரியம். இந்தக் காலத்திலும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் போன்ற பரம புருஷர் இந்திரியங்களைக் கடந்து அதற்கப்பாலுள்ள உண்மையை உணர்ந்தனர். இந்த உண்மைப் பொருளை, காளியோ அல்லது பிரம்மமோ வென்று கூறலாம்; பெயரைப் பற்றிப் பொருட்படுத்த வேண்டியதில்லை. இவ்வுண்மைப் பொருள் கானல் நீர் போன்ற தோற்றமொன்றல்ல. ஆண்டவனை இப்பிறவியிலே நாம் அடையலாம். ஆதலினால் உனது முழு உற்சாகத்தையும் அத்துறையில் செலுத்துவாயாக.

பல்வேறு மனித சுபாவத்துக்கியையப் பல்வேறு மார்க்கங்கள் உள்ளன. கடவுளைப்பற்றிய நோக்கங்களும், அவரை அடைவதற்கு மாந்தர் கைக்கொள்ளும் முறைகளும், வேறுபட்டன. ஆனால் இந்த வேறுபாடுகளெல்லாம் அவ்வளவு பிரதானமானவை யல்ல, ஏனெனில் வேறுபாடுகளெல்லாம் இறைவனிடத்தில் கலந்து விடுகின்றன. கடவுள் ரூபியாய் அல்லது அரூபியாயிருக்கலாம். அவரைச் சிவம், சக்தி, அல்லது கிருஷ்ணன் என்றழைக்கலாம்: ஆனால் எல்லாத் திருநாமங்களும் தலையாய உண்மையையே குறிக்கின்றன. கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்னும் மார்க்கங்களில், நாம் எந்தப் பாதையைக் கைக்கொண்டபோதும்,

எல்லா மார்க்கங்களுக்கும் அடிப்படைகளை ஆராய்ந்து, தத்தம் இலட்சியத்தை அடைவதே சாதகராகிய நமது கடமையாகும். எந்தச் சாஸ்திரத்தையேனும் ஆராய்ந்து பார். அவை கூறுவதென்ன? 'இயன்றளவு ஆத்மீக வாழ்க்கையில் முயல்; இந்திரியங்கள் இன்பத்தையும் உலக ஞானத்தையுங் கொடுக்கின்றன! ஆனால் அவை மனதைச் சதாகாலமுந் திருப்தி செய்யாது! ஆதலினாலே உனது மனதை இந்திரியங்களிலிருந்து நீக்கி, இந்திரியங்களுக்கப்பாலுள்ள உண்மையில் சேலுத்துவாயாக'

சுருங்கச் சொல்லின், தியானம் பழக வேண்டுமென்பது பெறப்படுகின்றது. அதை யெப்படிச் செய்வதென்ற கேள்வி எழுகின்றது. இவ்விஷயம் பற்றி, ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு அழகான புத்திமதி கூறியுள்ளார். "ஒரு வீட்டின் மறைவான மூலையிலாவது, நிர்ச்சந்தடியுள்ள காட்டிலாவது, அல்லது அமைதி நிறைந்த இருதய குகையிலாவது கடவுளைத் தியானி." இந்தப் புத்திமதியானது மூன்று வகையான மனிதருக்குரியது. காட்டுக்குப்போக ஆவகாசமிருப்பவர்களுக்கு, நாட்டிலுள்ள சத்தம் சந்தடிகளுக் கிடையே யிருந்து தியானஞ் செய்வதைப் பார்க்கிலும் காட்டிலிருந்து செய்வது இலகுவென்று கூறியுள்ளார். காற்று மிகுதியாயுள்ள இடத்தில், நுணுக்கமான தராசியைக் கொண்டு நிறை நிறுக்க முடியாதென்று ரசாயன சாஸ்திரிகள் கூறுவர். அதே போல, அமைதியான காட்டிலே ஒருவன் தியானஞ் செய்ய வேண்டும். காட்டுக்குப் போக முடியாதவர்களுக்கே வீட்டின் மறைவான மூலையில் தியானஞ் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டது. வீட்டின் மறைவான மூலைதானுங் கிடையாதவன், அதாவது எப்பொழுதும் மக்கள் கூட்டத்தில் வசிப்பவன், கூட்டத்திலிருக்கும் பொழுதும், மனதை வெளிச் செல்லவிடாது உள்ளே வாங்கி இருதயக் குகையில் தியானிக்க வேண்டும்.

உனது இருதயத்திலே மனதைச் செலுத்தி, அங்கு ஆண்டவன் உறைகின்றானெனக் கருதித் தியானஞ் செய். அப்பொழுதுதான் சாந்தியும் அமைதியும் பெறுவாய். பல சாஸ்திரங்களின் வேறுபட்ட போதனைகளையும் சமரசப்படுத்து. 'தியானஞ் செய்; கடவுளை உன்மனதினால் சிந்தி; கடவுளைப்பற்றிய உண்மைகளில் உன் மனதைச் செலுத்து; உனது குருவினால் கொடுக்கப்பட்ட இஷ்ட தெய்வத்தின் மந்திரத்தைச் ஜெபி; அல்லது உன் மனதுக்கிசைந்த எந்தத் தெய்வத்தையாவது நினைத்துச் சில நிமிடங்களேனுந் தியானஞ் செய்' இந்தப்புத்திமதியையே எல்லாச் சாஸ்திரங்களும், எல்லாப் பரம புருஷரும் கூறுகின்றனர்.

நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும் நமது மனதில் படம் வரைகின்றது. கதைக்கிற சூத்திரத்தின் தட்டுகளில் (Gramaphone records) சப்தத்தின் அலைகள் எப்படி வரையப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே நமது எண்ணங்களும், திரும்பத் திரும்பச் சிந்திக்கும் பொழுது, நமது மூளையில் சிந்தனை வரிகளைக் கீறுகின்றது. ஏற்கனவே இந்திரியங்களின் தொடர்புகளால் பல அநுபவங்கள்

பதியப்பட்டிருக்கின்றன. அநுபவத்துக்கும் நினைவுக்குந் தொடர்பிருக்கின்றபடியால், அநுபவ மெப்படியோ நினைவுமப்படித்தானிருக்கும். நமது எண்ணங்களில் சில விரும்பத் தக்கன வாயும், பல வெறுக்கத் தக்கனவாயுமிருக்கலாம். விரும்பத் தக்க எண்ணங்களை நாம் நினைக்குந் தோறும் இன்பத்தையும், வெறுக்கத்தக்க எண்ணங்களை நினைக்குந் தோறும் துவேஷத்தையும் பெறுகின்றோம். நமது பழைய சிந்தனைகளினால் இப்போதிருக்கும் நிலைமையை யடைந்தோம்; நாம் விரும்பும் எதிர் கால நிலைமை நமது நிகழ்கால எண்ணங்களில் தங்கியிருக்கின்றது, நல்லெண்ணங்களை மனதில் எழச் செய்வதற்குத்தியானம் இன்றியமையாதது. நமது பிழையான சம்ஸ்காரங்களை அழிப்பதற்கு அது உதவி புரிகின்றது. ஆகையினால் சமயாநுஷ்டானத்துக்குத் தியானம் அவசியம் வேண்டற்பாலது.

தொடக்கத்தில் தியானம் பழகுவது மிகவும் கஷ்டமான காரியமாயிருக்கும்; ஏனெனில் கடவுளைப் பற்றிய எண்ணங்கள் நமக்குப் புத்தப் புதியவையாகும். வீணைவாசிப்பதற்குப் பழகுபவன் எப்படி படிப்படி படிப்படியாகப் பயிற்சி செய்கின்றானோ அதே போன்று நாமுந் தியானம் பழகுதல் வேண்டும். வீணை வாசிப்பதும் தொடக்கத்தில் பொறுப்பானதாயும் வெறுக்கத் தக்கதாயுமிருக்கும். ஆனால், காலாந்தரத்தில் சங்கீதம் பயில்பவனின் விடாமுயற்சியால் ஒரு சுவையை ஏற்படுத்துகின்றான். ஆகையினாலேதான், அவன் பாண்டித்திய மடைந்த பின்னர் அதை கைவிட முடியாமலிருக்கிறான். வீணை வாசிப்பவன் தனக்கும் பிறருக்கும் இன்பம் பயக்கும்படியே வாசிக்கிறான். அப்படியே தியானஞ் செய்பவனும் தியானத்தில் ஒரு சுவையை யுண்டாக்கிக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் அவன் ஆனந்தத்தை அநுபவித்து, காலமன்னியில் பரிசுத்தத் தன்மையை யடைவான். அர்ச்சுனன் மனதை எவ்வாறு அடக்கலாம் என்று ஸ்ரீ கிருஷ்ணனைக் கேட்ட போது, 'காற்றைப் பிடிப்பது போல் கடினமானது' என்று பகவான் பதில் கூறியுள்ளார். அதை அடக்குவதற்குப் புராதன முறைகளாகிய அப்பியாசம் வைராக்கிய மென்பன வற்றையே அவர் போதித்துள்ளார். சதா அப்பியாசத்தினால் மனம் சாந்தி யடையும். தியானத்துடன் வைராக்கியமும் வேண்டற்பாலது. உனக்குக் கடவுள் வேண்டுமானால், அவரை அடைவதற்கு முட்டுக் கட்டைகளாயிருக்கும் பந்தங்களை நீக்க வேண்டும். தியாகமின்றி ஆத்மீக முன்னேற்றமடைய முடியாது. சிலர் இந்திரியங்களை அடக்காமல் உயர் வாழ்வை யடைய விரும்புகின்றனர். ஆனால் அவர்களுடைய முயற்சிகள் பலிதமாவதில்லை. தண்ணீரில் நங்கூரமிடப்பட்ட தோணியை ஓட்டுவதற்கு தண்டினால் வலிப்பதினால் பிரயோஜனமில்லை. நமக்குக் கடவுள் வேண்டுமென்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுகின்றோம். உண்மையில் நமககுக் கடவுள் தேவையில்லை. கிரீஸ் சந்திரகோஷ் என்பவரின் நாடக மொன்றில் ஒரு நாடக பாத்திரர் 'என்னால் அவளை மறக்க முடியவில்லை' யென்று அவருடைய

குருவிடங் கூறுகின்றார். குரு அதற்கு உத்தரமாக 'உன்னால் அவனை மறக்க இஷ்டமில்லை யென்று கூறு' என விகடமாகப் பதிலளித்தார். இதுதான் ரகசியம். நமது உள்ளத்தில் மறைந்துலாவும் இச்சைகளை ஆண்டவர் அறிவார். முதலாவதாக ஒருவனுடைய எண்ணமும் செயலும் ஒரே தன்மையுடையனவாயிருக்கின்றதாவென்று பார்க்க வேண்டும். உண்மையான உறுதிப்பாடே அதற்குச் சிறந்த வழி. ஸ்ரீ ராம கிருஷ்ணர் எவ்வளவு சொற்ப காலத்தில் தெய்வதரிசனம் பெற்றார். அவருடைய திடச்சித்தமும், விடா முயற்சியுமே அதற்குக் காரணங்களாகும். அரை குறையான முறைகளை அவர் கையாளுபவரல்லர். மனமானது தூய்மையுஞ் சாந்தமுமடைந்தவுடன் குருவைப் போல் நமக்கு வழிகாட்டுகின்றது. சில வேளைகளில் ஆண்டவன் ஒருவனே நமக்கு உறுகதி யென்பதை உணருகின்றோம். ஆனால் அந்த உணர்ச்சியைத் தற்காலிகமாயில்லாமல், நிரந்தரப்படுத்த முயலுதல் வேண்டும். சுருங்கச் சொல்லின், ஆண்டவனை வேண்டுமென்றால் அவனைத் தவிர்ந்த எல்லாப் பொருளையுந் துறத்தல்வேண்டும். நாம் விடாமுயற்சியுடன் கடவுள் மீது பிடிவாதமாயிருந்தால், அவருடைய அருள் நமக்கு நிச்சயமாகக் கிடைக்கும். நாம் ஆண்டவரை நோக்கிச் சென்றால் அவர் நம்மை எதிர் நோக்கி வருவார். நாம் அவரை நோக்கி ஒரு அடியெடுத்து வைத்தால் அவர் நம்மை நோக்கிப் பத்தடி யெடுத்து வைப்பார். இந்த உறுதியான வார்த்தையை ஸ்ரீ ராம கிருஷ்ணர் கூறியிருக்கின்றார்.

கடவுள் எல்லையற்ற இயல்பையுடையவர். அவர் அப்படியில்லாவிடின், நாம் எவ்வளவு முயன்ற போதிலும் அவரை அடைய முடியாது. அவருடைய அளப்பருங் கருணையினாலே தான் நம் முயற்சிகள் சித்தி யெய்துகின்றன. இளம்பிராயத்தில் குழந்தைகளுக்குத் தெளிவாகப் பேச முடியாது. ஆயினும் அவர்கள் 'லா! லா!' வென்று மழலை மொழி கூறினால், அதைக் கேட்டுத் தந்தை மனமகிழ்ந்து பதிலளிக்கின்றான். அதே போன்று திருவருட் தந்தையாகிய ஈஸ்வரனும் நமது சிறு பிரயாசத்தையும் வியந்து, நமது வேண்டுகோளுக்கிரங்கி வருகின்றார். அவர் சர்வ தயாபரன்; சகல ஜீவராசிகளிடத்தும் அன்பு பூண்டவர். மக்களாகிய சிறு குழந்தைகள் மீது ஆண்டவருக்கு நிறைந்த பட்சமுண்டு. அவர்களுடைய அந்தரங்க எண்ணங்களையுணர்ந்து அவரவர்களுக்கு வேண்டியவற்றை ஈவார். நமது அற்பமுயற்சியும் அவருடைய கருணையை அளவு கடந்து கவருகின்றது; ஆனால் அத்தகைய அற்ப முயற்சியும் நம்மால் செய்ய முடியாமலிருக்கின்றது.

''கடவுள் கத்தரிக்காய் போன்ற பண்டமாற்றுச் செய்யக்கூடிய பொருளல்ல; காசு கொடுத்து கடவுளைப் பெறலாமா?'' என்று ஒரு தருணம் சுவாமி விவேகானந்தர் சுவாமி துரியானந்தரைக் கேட்டார். ஒரு போதுமப்படி முடியாது. அவரையடைவதற்கு கடுந் தவம் புரிதல் வேண்டும். சாதனைக்கும் சித்திக்குமிடையே தாரதம்மியமில்லை யென்பதை நீ ஞாபகத்தில் வைத்திரு. உனது இருதயத்திலுள்ள உற்சாகம்

ம் முழுவதையும் ஆண்டவனுக்குச் செலுத்துதல் வேண்டும். உனது சிறந்த ஆற்றல்களெல்லாவற்றையும் அவருக்காகத் தியாகஞ் செய்யத் தயாராயிரு. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் போதனையொன்றால் இதை விளக்குவாம். "ஒரு பட்சி கப்பலின் பாய் மரத்தில் உட்கார்ந்திருந்தது. அப்பறவைக்குத் தெரியாமலே, கப்பல் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டு நடுச் சமுத்திரத்தை யடைந்தது. பறவை பாய் மரத்தை விட்டு நீங்கிப் பல திக்குகளிலுந் தன்னாலியன்றளவுந் தரையைச் சேர்வதற்குப் பறந்து பார்த்தது; ஆனால் ஒரு திசையாலுங் கரை சேர முடியவில்லை. பறந்து களைத்த பின்னர் திரும்பவும் அந்தப் பாய் மரத்தில் வந்து உட்கார்ந்தது. கப்பல் கரை சேர்ந்ததும் பட்சியுங் கரை சேர்ந்தது." இந்தப் பறவையைப் போன்று நாமும் நம்மாலியன்ற வரை முயன்று, அதன் பின்னர் நாம் எவ்வளவு சிரமப் பட்டாலும் நம்முடைய சுய முயற்சியால் மட்டும் சித்தியடைய மாட்டோம் என்பதை நாம் உணர வேண்டும். ஆதலினாலே தான், நமது சிறுகுகளைக் களைக்கப் பண்ணுவதற்கும், நமது அகங்காரத்தைப் போக்குவதற்கும், சாதனை அவசியந் தேவைப் படுகின்றது. கடவுள் மறைந்திருந்து கொண்டு, ஒளிந்து விளையாடுதல் போல, நமது ஆணவத்தை வெளிப்படுத்துகின்றார். நேர்மை, திறமை, ஆற்றல், ஒழுக்கம் என்னுங் குண விசேடங்களைப் பற்றிய நோக்கங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. சில காரியங்களைச் செய்ய வேண்டுமென்று உணருகின்றோம்; அவற்றை நம்மால் செய்து முடிக்க இயலுமென்று நம்புகின்றோம். அதே போன்று கடவுளையும் நமது தனிப்பட்ட முயற்சியால் பெற்று விடலாமென்று பகல் கனவு காணுகின்றோம். நமது அநுபவத்தின் மூலமும், நமது ஆற்றல் காரணமாகவும் பல சித்திகளையடைந்திருக்கின்றபடியால், கடவுளையும் அம்மாதிரி பெற்றுக் கொள்ளலாமென்று கருதுகின்றோம். ஆனால் இந்த முயற்சிகளெல்லாம் மனதைத் தூய்மையாக்கி, கடவுளைச் சிந்தித்துக் கொண்டிருப்பதற்கு உதவி புரிகின்றன. ஆகையினால் அவை தேவைதான். சமயாநுஷ்டானங்களில் மனதைச் செலுத்தாவிடின் மன நிம்மதியைப் பெற மாட்டாய். கடவுளையடைவதற்கு எல்லா முயற்சிகளையும் திறமையுடன் முயன்றவனுக்குத்தான் மனச் சாந்தி வந்தடையும். தனது பிரயாசத்தினால் மட்டும் எதையும் அடைய முடியாதென்பதை உணர்ந்தவன் சரணாகதி யடைகின்றான். இதைத்தான் பராபக்தி யென்று கூறுவது. உண்மையாகச் சாதனை பயில்வாரே இதைக் கடைசியில் அடைவர்

ஒரு தாயானவள், குழந்தைக்குப் பல விளையாட்டுச் சாமான்களைக் கொடுத்து விட்டு, அது விளையாடும் வரை தனது வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருப்பாள். எப்பொழுது விளையாட்டுச் சாமான்களை வீசியெறிந்து விட்டு "அம்மா! அம்மா!" என்று குழந்தை அழுகின்றதோ, அத்தருணம் தாய் ஓட்டமும் நடையுமாக வந்து குழந்தைக்கு வேண்டியவற்றை உதவுவாள். குழந்தையுடைய அழுகையானது உண்மையானதோ அல்லது பொய்யானதோ என்பதையும், தான்போக வேண்டுமோ இல்லையோ என்பதையும் தாய்

அறிவாள். அதேபோன்று, நாமும் விசுவாசமாக அழுது அழைத்தால் ஜெகமாதாவாகிய கடவுளும் விரைந்தோடி வருவாள். உன்னுடைய முழு ஊக்கத்துடனும் கடவுளை யடையப் பிரயாசைப்பட வேண்டுமென்பது இதன் பொருளாகும். பள்ளிக்கூடப் பரீக்ஷையில் சித்தி யெய்வதற்கு நாம் எவ்வளவு பிரயாசை யெடுக்கின்றோம்; அதே போன்று கடவுளை யடைவதற்கும் நாம் சிறந்த முயற்சி யெடுக்க வேண்டும்.

பதஞ்சலி முனிவர் தனது யோக சாஸ்திரத்தில் தீர்க்க ால, நிரந்தர, சத்கர, என்னும் மூன்று தியான அம்சங்களைக் கூறியுள்ளார். தீர்க்ககால வென்பதற்கு நெடு நேரம் என்பது பொருள். நிரந்தர மென்பது தொடர்பான, அதாவது தயிலதாரை போன்ற தியானம். குறிக்கப்பட்ட நேரங்களில் தியானஞ் செய்வதோடு, கடவுளை எந்த நேரமும் மனதில் சிந்திக்க வேண்டும். இது ஸ்மரணம் என்று கூறப்படும். சிலமணி நேரங்கள் மட்டுந் தியானத்தில் அமர்ந்தால் போதாது; மனதின் ஒரு பகுதியை எப்போதும் கடவுள் சிந்தனையில் ஈடுபடுத்தல் வேண்டும். மூன்றாவதாகச் சத்கரை அதாவது சிரத்தை வேண்டற்பாலது. என்றும் மன மில்லாமல் அரைகுறையாகச் செய்யப்படாது. முழு மனத்துடன் உனது காரியங்களைச் செய். நீண்டகால, தொடர்புபட்ட, உண்மையான அப்பியாசம் சித்தி யடைவதற்கு இன்றியமையாதது.

உன்னுடைய சாதனையில் இம் மூன்று பரீக்ஷைகளையும் பரீக்ஷித்துப் பார். கடவுள் அநுபவம் பெறுவதையே உனது வாழ்க்கையின் இலட்சிய மாகக் கொள். இந்த வானவன் இப்பிறவியிலேயே கடவுளை அடைய வேண்டும். இந்தச் சிறந்த தோட்டத்துக்கு உனது முழுமனதையும் செலுத்து. வாலிபப் பருவம் இன்பம் அநுபவிப்பதற் குறிய காலமென்றும், அந்நிய காலத்தில் சமயாநுஷ்டானங்களைக் கைக் கொள்ளலாமென்றுங்கூறாதே. அந்நிய காலத்தில் சாதனை பயில்வதற்குத் தக்க பெலனில்லாமல் போய்விடும். ஆகையினால் இளம் பிராயந் தொடங்கிச் சிரமமாக முயல். உனக்கு விரும்பியதைப் பெற முடியா விடின் உன்னையே குறை கூறவேண்டும். செய்ய வேண்டியவற்றைப் பிறகு செய்யலாமென்று பின் தள்ளிப் போட வேண்டாம். அப்படிக்காலத்தை வீணே செலவிட்டால் பலனடைய மாட்டாய். "இன்று, இவ்விடம் பெறும் பலன்தான் உன்னுடைய சொந்தமானது" என்று உபநிடதங் கூறுகின்றது. ஆகையால் இத்தருணத்தை இழந்து விடாது கடவுளை நாடு. தினசரி வேலை செய்யும் பொழுது ஆத்மீகத் துறையில் பிரதான கவனஞ் செலுத்து. தினையளவு நம்பிக்கையும் பனையளவு பயனளிக்கும்; ஒரு அற்ப பிரயாசம் பெரிய ஆபத்தினின்றும் நம்மைக் காப்பாற்றும்.

பிரகிருதி சாஸ்திரத்தில் ஒரு நூதனமான, அதாவது முரண்பாடான விதியுண்டு. அதன்படி, ஒரு பெரிய தண்ணீர்ப் பாத்திரத்துடன் ஒரு சிறு பாத்திரத்தைக் குளாய் மூலம் தொடுத்து விட்டால், தண்ணீர் மட்டமானது இரு பாத்திரத்திலும் ஒரே அளவில்தா னிருக்கும். அதே

போல உன்னையும் ஆண்டவனோடு தொடுத்து விட்டு, அவருக்காக விசுவாசத்துடன் பணி செய். ராம்பிரசாத் என்னும் பெரிய ஞானியார் "ஜெகமாதாவை உனக்கு விரும்பியபடி வழிபடு; உனது கை விரல்களை நமஸ்கரிப்பதற்கும், செபஞ் செய்வதற்கும் பிரயோஜனப் படுத்து; நீ உண்ணும் போது உனக்குள்ளிருக்கும் இஷ்ட தெய்வத்துக்கு உணவளிப்பதாகக் கருது; காதில் விழும் ஒவ்வொரு சப்தமும் தெய்வ மந்திரம்; ஆகலின் என்ன சப்தத்தைக் கேட்ட போதும் அது அரன் நாமமெனக் கருது; இலங்கு முடலனைத்து மீசன் கோயில்! ஆகையால் நீ நடக்கும் போது ஆண்டவனுக்குப் பிரதக்ஷிணை செய்வதாக நினை; உனது கண்களால் அவருடைய தோற்றத்தைப் பார்; வாயினால் அவர் புகழை வாயாரப் பாடு" என்று கூறுகின்றார். இவ்விதம் நீங்கள் முயலுவீர்களாயின் உங்கள் தினசரி வேலைகளைச் சாதனையாக மாற்றிக் கொள்ளலாம். ஒவ்வொருவரும் தம் தினசரி வாழ்வில் இவ்வித சாதனை பழகலாம்.

உலக வாழ்க்கையின் மத்தியிலும் கடவுளை வற்புறுத்து. உனது இலட்சியத்தை ஒருபோதும் தாழ்த்த வேண்டாம். உனது கடமைகளை ஆண்டவனின் கட்டளையெனக் கருதிச் செய்; அவகாசமான வேளைகளில் ஆண்டவனைச் சிந்தித்து, அவர் நாமத்தைப் புழ்த்து பாடு. வேலை செய்து களைத்துப் படுத்திருக்கும் போதும் அவரை நினை. கடவுளைப் பற்றிய சிந்தனையானது உடலின் இளைப்பைப் போக்கி, மனதுக்குச் சாந்தியளித்து, உறக்கத்தையுண்டாக்குகின்றது. இதுதான் இரகசியம். எல்லாவற்றிலும், எவ்விடத்தும், இறைவனைக் காணும் போது ஒருவித தீங்கும் உன்னை அணுகாது. காட்டில் வசிக்குந் தபசிகள் புலியைக் கண்டு பயப்படுவதில்லை. இருடிகள் புலியிலும் ஆண்டவனைக் காண்கின்றனர். ஆகையினால் புலி அவர்களுக்குத் தீங்கு செய்வதில்லை. பவஹரிபாபா என்னும் ஞானி ஒரு குகையில் வசித்து வந்தார். ஒரு நாள் ஒரு கள்வன் அக்குகையில் நுழைந்தான். ஞானி பாபா அவனைப் பின் தொடர்ந்து, 'ஆ! என் ஆண்டவரே! இப்பொருள்களெல்லாம் உங்களுடையதே, உங்களுக்காக நான் அவற்றைச் சுமந்து கொண்டு தருகிறேன்' என்று கூறி அவருடைய பொருள்களெல்லாவற்றையும் அத்திருடன் முன் கொண்டு வைத்தார். இந்த ஞானியார் திருடனித்துங் கடவுளைக் கண்டார். சுவாமி விவேகாநந்தர் இத்திருடனைப் பிறகு பார்க்க நேர்ந்த பொழுது, அவன் மகாஞானியாக மாறியிருந்ததைக் கண்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் விலைமாதரிடத்தும் அன்னை ஜெகதாம்பிகையைக் கண்டு சமாதி நிலையையடைவார். ஒரு நீலவர்ணச் சேலையணிந்த பெண்ணைக் கண்டவுடன் அவருக்குச் சீதா தேவியின் எண்ணம் பிறக்கின்றது. குடிகாரக் கோஷ்டியைக் கண்டதும் அவருக்கு ஆனந்த வெறியுண்டாகின்றது. இவை அவருடைய சாதனையின் பலனாகும்.

ஆண்டவர் ஒருவரே நித்தியப் பொருள். தண்ணீருக்குள் அமிழ்த்திய குடத்துக்கு உள்ளும் புறமும் எவ்வாறு தண்ணீருண்டோ, அவ்

வாறு ஆண்டவரும் நம்மைச் சுற்றி உள்ளும் புறமும் உள்ளார். அவர் அப்படி யிருக்கின்றாரென்பதை இயன்றளவு உணருவாயாக. கடவுளைப்பற்றிய வீண் வாதங்களில் காலத்தைப் போக்காதே; ஆனால் உனது கடவுள் வேட்கையைச் சாந்தி செய்ய முயல். தண்ணீரில் மூழ்கிய மனிதன் மூச்சு எடுப்பதற்கு எவ்வளவு அவஸ்தைப் படுகின்றானோ அவ்வளவு சிரமத்துடன் கடவுளை விரும்பு' என்று சுவாமி இராம கிருஷ்ணானந்தர் கூறியுள்ளார். நீ நிசமாகக் கடவுளை நாட வேண்டும். கடவுள் தவிர்ந்த ஏனைய பொருள் வேண்டுமாயின், உன்னை ஏமாற்றாத வண்ணம் அவ்வாறு கூறிவிடு. உனது இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்கு மிகுந்த பிரயாசமும், சிரமும் தேவையாயிருப்பின், அவற்றைப் பூர்த்தி செய்ய முயலாதே. அற்ப விருப்பங்களைத் திருப்தி செய்வதில் பாதகமில்லை அப்படித் திருப்தி செய்து அவற்றின் பந்தத்திலிருந்து நீங்குவாயாக. விசுவாசமாகக் கடவுளை நேசித்து அவரை உனக்குச் சொந்தமாக்க முயல். உனக்கிசைந்த அநுஷ்டானத்தைத் தெரிந்தெடுத்து அதன் வழி நின்று ஒழுகுவாயாக. ஈஸ்வரன் உனக்கு உதவி செய்வாரென்று உறுதியாக நம்பு. அவரை பிரார்த்தனை செய்து உள்ளன்போடு பக்தி செலுத்து "நீ உள்ளன்போடு பிரார்த்தனை செய்தால் கடவுள் நிச்சயமாக உன்னை ஆசீர்வதிப்பார்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியிருக்கின்றார். அவருடைய நாவிலிருந்து ஒருபோதும் பொய் வார்த்தை பிறக்கவில்லை. அவர் சமயம் போதிப்பதற்காகவே அவதரித்தவர். "நீ உண்மையாகக் கடவுளை விரும்பினால் அவரைச் சீக்கிரம் அடைவாய்" என்று அவர் கூறியுள்ளார். பசுவினுடைய கொம்பின் நுனியிலுள்ள கடுகானது வெகு சீக்கிரத்தில் நிலத்தில் விழும்; அதேபோல நாம் உண்மை விசுவாசிகளாயின அவ்வளவு சீக்கிரத்தில் தெய்வ தரிசனம் பெறலாம். நீங்கள் அனைவரும் ஆண்டவரின் புதல்வர்களென்று நம்புங்கள். இந்தத் தொடர்பு ஏற்கனவே இருக்கின்றதென்பதை ஞாபகத்தில் வை. பல்லு வலி எப்படித் தொடர்ச்சியாயிருக்கின்றதோ, அப்படித் தெய்வீக சிந்தனையு மிருக்கட்டும். இப்பிறவியிலே ஆண்டவனை யடைய நம்மால் முடியும். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய நேர் சிஷ்யர்களோடு தொடர்புடையவர்கள் இந்த உறுதி மொழியைக் கூறியுள்ளார்கள்.

—பண்டித ஜவஹர்லால் நேரு

வார்த்தைகளின் சக்தி

ஒரு பாஷையிலிருந்து இன்னொரு பாஷையில் மொழி பெயர்ப்பதிருக்கிறதே. அதுவே ஒரு கடினமான வேலை. இன்னும், உண்மையைக் கூறப்போனால், ஒரு பாஷையில் உள்ள ஆழ்ந்த கருத்துக்களை அப்படியே இன்னொரு பாஷையில் கொண்டுவரவே முடியாது. பாஷை, அல்லது மொழி என்று கூறுகிறோமல்லவா அதனுடைய வேலைதான் என்ன? அது எந்த விதத்தில் நமக்குப் பயன்படுகிறது? அது நமக்கு, நினைப்பதற்கு—எண்ணுவதற்கு—உதவி செய்கிறது. எண்ணங்களின் குவியலே பாஷையென்றும் சொல்லலாம். உருவமற்ற எண்ணங்கள், அதன் மூலமாய் உருவமாக அமைகின்றது. நம்முடைய எண்ணங்களைப் பிறரிடத்தில் வெளியிடவும், அவர்களுடைய எண்ணங்களை நாம் தெரிந்து கொள்ளவும் பாஷை மிகுந்த உபயோகமாய் அமைந்திருக்கிறது. இது மட்டுமில்லை. பாஷையானது இன்னும் எத்தனையோ வகைகளில் நமக்கு உபயோகமாகிறது.

ஒரு வார்த்தையையோ, அல்லது ஒரு சொல்லையோ நாம் கேட்ட மாத்திரத்தில், அந்த வார்த்தைக்கு ஆதாரமாயிருக்கும் பொருள் நம்முடைய கண் முன்னே தோன்றி விடுகிறது. சாதாரணமாக, மேஜை, நாற்காலி, கட்டில், யானை, குதிரை, இம்மாதிரியான சாதாரண வார்த்தைகள், அந்த வார்த்தைக்கு ஆதாரமாயிருக்கும் பொருள்களை நம்முடைய மனதில் ஏற்றிவிடுகின்றன. நாம் இந்த வார்த்தைகளைச் சொன்னோமானால், கேட்பவர்களும், அந்த வார்த்தைக்கு ஆதாரமாயிருக்கும் பொருள் இன்னதுதானென்று தெரிந்து கொள்ளுகின்றனர். அவ்விதம் அவர்கள் ஸ்பஷ்டமான உருவத்தைத் தெரிந்து கொள்ளும் போது, நம்முடைய வார்த்தையின் அர்த்தத்தை அவர்கள் தெரிந்து கொண்டு விட்டார்கள் என்று நாம் சொல்ல முடியுமல்லவா?

ஆனால் இன்னொரு விஷயம். மேலே கூறியிருக்கிறபடி, சாதாரண வார்த்தைகளிலிருந்து இன்னும் ஒரு படி நாம் மேலே செல்வோமானால், கட்டாயம் சில கஷ்டங்கள் வந்து நமக்குக் குறுக்கே நிற்பதை நாம் பார்க்கிறோம். சாதாரணமான ஒரு வார்த்தை பல பொருள்களை நம்முடைய முன்னே நிறுத்தி விடுகிறது. எந்தப் பொருளைத் தெரிவிப்பதற்கு நாம் அந்த வார்த்தையை உபயோகிக்கிறோமோ, அதே வார்த்தை வேறொரு பொருளுக்கு ஆதாரமாக எதிராளிக்குத் தோன்றும் பட்சத்தில், இது, அந்த இருவருடைய,

அதாவது, சொல்பவரும்; கேட்பவருமாகிய இருவருடைய, படிப்பு, அநுபவம், பாஷா ஞானம், எண்ணம், இவைகளைப் பொறுத்ததாயிருக்கிறது. சரி, இன்னும் கொஞ்சம் முன்னே சென்று பார்ப்போம். இன்னும் சில வார்த்தைகளிருக்கின்றன. மேலான அர்த்தம் ஒரு விதமாகவும், உள்ளார்த்தம் பல விதமாகவும் தோன்றக்கூடிய சில வார்த்தைகள் இருக்கின்றன. இவை மிகவும் மர்மமான வார்த்தைகள்; கடினமானவைகளுங் கூட. உதாரணமாக, சத்தியம், சௌந்தர்யம், அஹிம்சை, மதம் இப்படியுள்ள வார்த்தைகளை யெடுத்துக் கொள்ளுவோம். இந்த வார்த்தைகளை நாம் தினந்தோறும் உபயோகிக்கத்தான் செய்கிறோம். ஆனால் அவற்றின் அர்த்தங்களை, அதாவது, அந்த வார்த்தைகளின் உண்மையான அர்த்தங்களை நாம் தெரிந்து கொள்ள முற்படுவோமானால் நமக்கு ரொம்ப சிரம சாத்தியமாயிருக்கிறதே தவிர லேசாயில்லை. சாதாரணமாக, இரண்டு பேர்களுக் கிடையில், இப்படியுள்ள வார்த்தைகள், ஒரே அர்த்தத்தையோ அல்லது ஒரே பொருளையோ குறிப்பனவாய் இருக்க முடியாது. அப்படியானால், நாம் நம்முடைய கருத்தை, அதாவது அந்த வார்த்தையின் அர்த்தத்தை மற்றவருக்கு அப்படியே சொல்ல முடியவில்லை என்பதுதானே. இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், நாம் இருவரும் ஒரே வார்த்தையைத்தான் உபயோகிக்கிறோம். ஆனால் வெவ்வேறு அர்த்தங் கொள்கிறோம். இந்தக் கஷ்டம் இப்போது தீர்ந்து விட்டதா? இல்லை. அது வளர்ந்து கொண்டுதானிருக்கிறது. இந்தக் கஷ்டம் வளர வளர, இதனுடைய பரிணாமம் என்ன ஆகிறது? நாம் ஒருவரோ டொருவர் அடித்துக் கொள்கிறோம். கலகம் செய்கிறோம். மண்டைகளை உடைத்துக் கொள்கிறோம்.

மேற் கூறிய கஷ்டங்கள், யாருக்கும் யாருக்குமிடையில் என்று நினைக்கிறீர்கள்? ஒரே பாஷை பேசுபவர்கள், ஒரே நாகரிகத்தில் வாழ்பவர்கள், ஒரே வழித் தோன்றியவர்கள், பாஷா ஞானமுள்ளவர்கள். இவர்களுக்கிடையிலே இவ்விதக் கஷ்டமிருக்கும் போது ஒரு படித்தவனும், படியாத ஒருவனும் மேற் கண்ட உள்ளார்த்தமான வார்த்தைகளின் பேரில் தர்க்கம் செய்ய ஆரம்பிப்பார்களானால் பலன் என்ன ஆகும்? அவர்கள், ஒருவரை யொருவர் எப்படி அறிந்து கொள்ள முடியும்? பாவம் அவர்கள் இருவரும் வெவ்வேறு உலகத்திலே யல்லவா வசிப்பவர்கள்?

இதுவரை, ஒரே தேசம், ஒரே பாஷை, ஒரே நாகரிகமுள்ளவர்களைப் பற்றிய கஷ்டங்களைப் பார்த்தோம். ஆனால் இன்னுங் கொஞ்சம் முன்னேக்கிச் செல்வோமானால், மேற் கூறிய கஷ்டங்களெல்லாம் ரொம்பச் சிறியதாக நமக்குப்படும். பாஷைகள் வேறு, நாகரிகம் வேறு, ஒருவரை யொருவர் நன்கு அறிந்திருக்கமாட்டார்கள்; இப்படியுள்ள இருவர் சந்திக்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். இவர்களுக்குள் எப்படி ஒற்றுமை யிருக்கும்? இவர்களுடைய எண்ணங்கள், இவர்களுடைய மனப் பண்பு மலைக்கும் மடுவுக்

முள்ள வித்தியாசமா யிருக்கிறது. இவர்கள் ஒருவரை யொருவர் நன்றாகத் தெரிந்து கொண்டவர்களில்லை. ஒருவரை யொருவர் இவர்கள் நமப மாட்டார்கள். ஒருவரைக் கண்டு ஒருவருக்குப் பயமேற் படுகிறது. அப்புறம் கேட்பானேன், சண்டை, கலகந்தான்.

பல பாஷைகளின் ஆராய்ச்சியாளரான ஆசிரியர், ஜே. எஸ். மெகன்ஜி என்பவர் எழுதுவதைக் கவனிப்போம். 'ஒரு ஆங்கிலேயன், ஒரு பிரெஞ்சுக்காரன், ஒரு ஜெர்மானியன், ஒரு இத்தாலியன் இவர்கள் யாவரும் ஒரே காலா ஞானத்தின் பரம் பரையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய பாஷைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஆயினும் ஒரு ஆழமான விஷயத்தை இவர்கள் நால்வரும் ஒரே மாதிரியில் சிந்திக்கிறார்களில்லை. அப்படிச் சிந்திக்கவும் முடியாது. ஏனெனில் அவர்களுடைய பாஷையில் வித்தியாச மிருக்கிறது." இவர்களுடைய நிலைமையே இப்படியிருக்க, ஒரு இந்தியனும், ஆங்கிலேயன் ஒருவனும் எப்படி ஒற்றுமையாகச் சிந்திக்க முடியும்? இவர்களுடைய பாஷா சம்பந்தத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாமே. ஒரு ஆங்கிலேயன், இந்தியனைப் போன்று, வேஷ்டி கட்டி, சட்டை போட்டுக் கொள்கிறானென்று வைத்துக் கொள்வோம். இதனால் இந்தியனைப் போன்று எண்ண முடியுமா? அல்லது இந்தியன் ஒருவன் ஆங்கிலேயனைப் போன்று கால்சட்டை, கைச்சட்டை மாட்டி, தலையிலே ஹாட் வைத்து விடுவதினாலேயும், கரண்டி கொண்டு ஆகாரத்தைச் சாப்பிடுவதனாலேயும் ஆங்கில நாகரிகத்தைத் தெரிந்து கொண்டு விட்டதாகச் சொல்ல முடியுமா? முடியவே முடியாதல்வா?

ஒருவரை யொருவர் தெரிந்து கொள்வதிலேயே இத்தனை கஷ்டங்கள் இருக்கும் போது, பாவம், அந்த மொழிபெயர்ப்பு ஆசிரியர்கள் என்ன செய்வார்கள்? இந்தக் கஷ்டங்களை அவர்கள் எப்படிச் சமாளிப்பது? ஆனால் இங்கு ஒரு விஷயத்தை நாம் வலியுறுத்திக் கூற வேண்டியதாயிருக்கிறது. மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலை. அகராதியைப் புரட்டிப் புரட்டி வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் எழுதி விடுவது மொழிபெயர்ப்பாகமாட்டாது. கண்டிப்பாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயம் இது. எந்தப் பாஷையிலிருந்து மொழிபெயர்க்கிறாரோ, அந்தப் பாஷையிலும், எந்தப் பாஷைக்கு மொழிபெயர்க்கிறாரோ அந்தப் பாஷையிலும், ஆக இரண்டு பாஷைகளிலும், அந்த மொழிபெயர்ப்பாசிரியர் நல்ல ஞான முள்ளவரா யிருக்க வேண்டும். ஏனெனில், ஒவ்வொரு பாஷைக்கும், ஒரு அழகிருக்கிறது, ஒரு அமைப்பிருக்கிறது; ஒரு நடை யிருக்கிறது. இவைகளை அவர் அறிந்திருந்தாலல்லது மொழிபெயர்ப்ப தென்பது முடியாத காரியம். அவர், தன்னை மறந்து விட்டு, அவர் எதை மொழிபெயர்க்க முனைந்திருக்கிறாரோ, அதன் கர்த்தாவின் எண்ணங்களிலே தன்னை ஈடுபடுத்தி அந்த மூலகர்த்தாவின் எண்ணங்களை, கருத்துக்களை தன்னுடைய வாக்கியங்களாக்கி, தன்னுடைய பாஷையில் எழுத முயற்சிக்க வேண்டும்.

நம்முடைய நாட்டிலே யுள்ள மொழிபெயர்ப் பாசிரியர்கள் மேற் கண்ட வழியைப் பின் பற்றுகிறார்களென்பதை ஒப்புக் கொள்வோம். பெரும்பாலோர், நூல்களையும் கூட, பத்திரிகை நடைத் தோரணையில் மொழி பெயர்க்கிறார்கள். ஆனாலும் சில வார்த்தைகளை அவர்கள் மொழி பெயர்த்திருப்பதை, அதுவும் ஹிந்தியில் நான் பார்த்து விட்டு ஆச்சர்யப்பட்டிருக்கிறேன். ஒரு உதாரணம்; 'ட்ரேட் யூனியன்' என்ற வார்த்தைக்கு வியாபார சங்கம் என்று மொழி பெயர்த்திருப்பதைப் படித்தேன். வார்த்தைக்கு வார்த்தை பார்க்கும் போது, ட்ரேட் யூனியன் என்பதற்கு வியாபாரச் சங்கம் என்பது சரியான அர்த்தந்தான். ஆனால், இந்த ட்ரேட்யூனியன் என்ற வார்த்தையோடு ஒரு நூறு வருஷத்திற்கதிகமான சரித்திரம் பின்னிக்கிடக்கிறது. அதை அறிந்திருப்பவர்களுக்கு ஏன் இதற்கு இந்தப் பெயர் வந்ததென்பது தெரியும். அதை அறியாதவர் வியாபாரச் சங்கமென்று தன்னால் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது, வியாபாரச் சங்கமில்லை, தொழிலாளர் சங்கம் என்பதை எப்படி அறிய முடியும்? பிரெஞ்சு பாஷையிலே இதை சின்டிகேட் என்று கூறுவர். சரி, பிரெஞ்சிலிருந்து மொழி பெயர்ப்பதா யிருந்தால், அதை அப்படியே சின்டிகேட் என்றே கூறுவார்களா? அல்லது வேறு ஏதேனும் தேடுவார்களா? மேலே கூறியது ஒரு சாதாரண உதாரணந்தான் இப்படி யெத்தனையோ நாம் பார்க்கலாம்.

மொழி பெயர்பாசிரியர்கள் கவனிக்க வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், அவர்கள் எதைச் சொல்லுகிறார்களோ, எழுதுகிறார்களோ, அதை எளிய நடையிலே, பல அர்த்தத்திற்கு இடங்கொடாத முறையில் சொல்லவோ எழுதவோ வேண்டும். நீள நீளமான வாக்கியங்களாகவும் எழுதக் கூடாது. ஒரு விஷயத்தை, அதுவும் ஆழமான கருத்துள்ள ஒரு விஷயத்தை பிறருக்குப் புரியும்படி எழுதுவது கடினம். அப்படி யிருக்க அதை எழுதுவதும் கடினமான நடையிலோ, அல்லது நீள நீளவாக்கியங்களாகவோ போட்டு எழுதி விட்டால் ஒரு பிரயோஜனமும் இல்லாது போய் விடுகிறதல்லவா? இந்த உலகத்திலுள்ள பல பாஷைகளில், முக்கியமான, பிரசித்தமான அநேக நூல்களிருக்கின்றன. அப்படி யுள்ள பிரசித்தமான கிரந்தங்கள் பல பாஷைகளில் மிகவும் நல்ல விதமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அஃதே போன்று ஹிந்தியிலே ஒரு நல்ல மொழி பெயர்ப்பு ஏன் வெளிவரவில்லை யென்பதற்குக் காரணம் எனக்குப் புரியவே யில்லை. நமது எழுத்தாளர்கள் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தினார்களானால் இந்த முக்கியமான காரியமும் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது. ஆனால் நம்முடைய தேசத்துச் சர்வ கலா சாலைகளிலே படித்து பி.எ, எம். எ பட்டம் வாங்கிய பட்டதாரிகள் இருக்கிறார்களே அவர்களுக்கு ஆங்கில ஞானம் ரொம்பக் குறைவு. மற்ற வெளி நாட்டுப் பாஷைகளோ அவர்களுக்குத் தெரியவே தெரியாது.

மொழி பெயர்ப்பதிலும், சாதாரணமான நூல்களை மொழி பெயர்ப்பது ரொம்பவும் சுலபம். ஆனால், மதம், விஞ்ஞானம், பொருளாதாரம் இந்த மாதிரி சம்பந்தமுள்ள நூல்களை மொழி பெயர்ப்பதிருக்கிறதே அது ஒரு கடினமான வேலைதான். அப்படியுள்ள நூல்களில் பலவித அர்த்தம் கொடுக்கக் கூடிய வார்த்தைகள் வருவது சகஜம். அழகு, சத்தியம், மதம், இப்படியுள்ள வார்த்தைகள் பலவித அர்த்தங் கொடுக்கக் கூடியவை. அழகு என்ற ஒரு வார்த்தையையெடுத்துக் கொள்வோமே. எத்தனையோ அழகுகள் நாம் கூறலாம். பெண்ணின் அழகு, இயற்கையின் அழகு, எண்ணத்தின் அழகு, கலையின் அழகு, வாக்கியத்தின் அழகு, ஒழுக்கத்தின் அழகு, இலக்கியத்தின் அழகு இப்படி எல்லையற்ற அழகுகளை நாம் அடுக்கிக் கொண்டு போக முடியும். ஒவ்வொரு மனிதரும், எதைத் தாங்கள் விரும்புகிறார்களோ, அந்தப் பொருள் அவர்களுக்கு அழகாகப் படுகிறது. அந்தப் பொருளிலே அவர்கள் அழகு காண்கிறார்கள். ஆனால் ஒருவருக்கு விருப்பமாயிருக்கும் அதே பொருள், மற்றவருக்குப் பெரும் அருவருப்பாயிருக்கிறதையும் நாம் காண்கிறோம். ஏனெனில், யாவருக்கும், ஒரே மாதிரியான வெறுப்பு விருப்பு இருக்க முடியாது. இப்படியிருக்கப் பல அழகுகள் தோன்றுவது இயற்கைதானே. அப்படியானால் இந்த அழகுக்கு ஒரு நீண்ட, எல்லை கட்ட முடியாத அர்த்தம் ஏற்பட்டு விடுகிறதல்லவா?

ஒவ்வொரு பாஷையிலும் இவ்விதம் பல அர்த்தம் கொடுக்கக் கூடிய வார்த்தைகளிருக்கின்றன. சில வார்த்தைகள், அவை எந்தப் பொருளைத் தெரிவிப்பதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டனவோ அவற்றைத் தெரிவிக்கச் சக்தியற்றனவாகி விட்டன. இன்னுஞ் சில இரவல் வாங்கப்பட்ட வாக்கியங்களிருக்கின்றன. அவைகளுக்கு ஒரு சரியான அர்த்தமே சொல்ல முடியாது. வளர்ச்சியடையாத எண்ணமுள்ளவர்கள் இப்படியுள்ள வார்த்தைகளை அடிக்கடி உபயோகிக்கிறார்கள். எதற்காக? தங்களுடைய எண்ணங்களின் வளர்ச்சியற்ற தன்மையை, தங்களுடைய அறிவின் பலவீனத்தை மறைத்துக் கொள்வதற்காக இப்படியுள்ள வார்த்தைகளை ஒரு போர்வையாக உபயோகிக்கிறார்கள். இந்த விதமான வார்த்தைகளை அதிகமாகக் கொண்ட பாஷை, அது எவ்வளவு உன்னதமான பாஷையாகக் கருதப் பட்டாலுஞ் சரி நாளடைவிலே அதனுடைய சக்தி குன்றி விடுவதில் சந்தேகமேயில்லை. அப்படிப் பட்ட பாஷையின் இலக்கியத்திலே ஒரு விறுவிறுப் பிராது; இருக்கவும் முடியாது. அலங்காரமான வாக்கியங்களிருக்கலாம். ஆனால் அம்பைப் போன்ற கூர்மையிருக்க முடியாது.

நாம் எழுவதிலும் சரி, பேசுவதிலும் சரி இப்படியுள்ள இரவல் வார்த்தைகளை அகற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும். ஆனால் பாவம் அந்த வார்த்தைகளைச் சொல்ல என்ன குற்றமிருக்கிறது. கொஞ்சம் பாஷா ஞானமும், அந்தப் பாஷையினுடைய வரம்பும் தெரியாத மூளைகளையல்லவோ சொல்லவேண்டும். எழுதுபவர்களும், பேசுபவர்களும் பாஷையை சிருஷ்டிக்கிறார்கள்.

புராதன பாஷைகளாகிய, சமஸ்கிருதம், கிரீக், லத்தீன் முதலிய பாஷைகளில் அர்த்தமற்ற வார்த்தைகள் ஜாஸ்தியாக இருந்ததில்லை. விறுவிறுப்பையும், பிரகாசத்தையும் அந்தப் பாஷைகளில் நாம் காண்கிறோம். இன்று, பிரெஞ்சு பாஷை கூடிய வரையில் அந்த ஸ்தானத்தை வகிக்கிறது. இதற்குக் காரணம் பிரெஞ்சுக்காரர்கள் தங்களுடைய பாஷையின் ஒழுங்கைத் தெரிந்திருக்கிறார்கள்; வரம்பை உணர்ந்திருக்கிறார்கள். இதனாலே தான் தங்களுடைய எண்ணங்களைச் சுத்தமாக வெளியிடுவதில் அவர்கள் பிரசித்தம் அடைந்திருக்கிறார்கள்.

அர்த்தமற்ற வார்த்தைகளை, இரவல் வாக்கியங்களை நாம் நிராகரித்து விடலாம். ஆனால், பிரபலமான வார்த்தைகளை நாம் என்ன செய்வது? நமக்கு அவை மிகவும் பிரியமானவை; அவசியமாயுள்ளவை; சகாயமாயிருப்பவை. ஆனால் பல அர்த்தங்களுக்கு இடங் கொடுப்பவையா யிருக்கின்றன. சில சமயம் அர்த்தமில்லாத வார்த்தைகளாகக் கூட ஆகிவிடுகின்றன. கடவுளைப் பற்றிய எண்ணங்களையே எடுத்துக் கொள்வோமே. ஒவ்வொரு பாஷையும், ஒவ்வொரு மதமும் கடவுளைப் பற்றிய புகழிலே ஆயிரக் கணக்கான வார்த்தைகளை உபயோகித்திருக்கின்றன. மனிதனுடைய மூளை, சரியாகப்புரிந்து கொள்ள முடியாது, தன்னுடைய பல ஹீனத்தை மறைத்துக் கொள்வதற்காக அகராதியை யெடுத்து, அதில் நீளமானதும், பெரியதும், வேகமுள்ளதுமான வார்த்தைகள் எத்தனை அகப்பட்டதோ அவற்றை யெல்லாம் கடவுளினுடைய தலையிலே சுமத்தி விட்டது என்றுதான் தெரிகிறது. கடவுளைப் பற்றிக் கூறியிருக்கிற அந்த எல்லா வார்த்தைகளின் அர்த்தத்தையும் தெரிந்து கொள்வது மனிதனுடைய மானசிக சக்திக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறது. ஆனால், நாம், அளவு கடந்து சொல்லி விட்டோம், எழுதி விட்டோம், நம்முடைய கடமையை நிறைவேற்றி விட்டோம், இனிமேல் கடவுள் நம்மீது யாதொரு குற்றங் குறையும் சொல்ல முடியாது என்ற சந்தோஷம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாமோ என்னவோ. கடவுளுக்கு ஆங்கிலத்திலே, அப்ஸல்யூட், ஆம்னிபொடண்ட்' ஆம்னிஸியண்ட், ஆம்னிபிரஸண்ட், பெர்பெக்ட், அன்லிமிடெட், இம்யூடபிள், எட்டர்னல் இத்தனை வார்த்தைகளிருக்கின்றன. கொஞ்சம் பலஹீனமான இதயம், இத்தனை வார்த்தைகளையுங் கேட்டால் கட்டாயம் பயப்படாமல் இருக்க முடியுமா?

இதிலிருந்து நாம் என்ன தெரிகிறோம். சாதாரண மனிதன், இப்படியுள்ள பிரபலமான வார்த்தைகளை, அவைகளின் அர்த்தத்தை தெரிந்து கொள்ள முடியாதவனாயிருக்கிறான். பெரிய பண்டிதர்கள், வித்வான்கள் இந்த வார்த்தைகளை எப்பொழுது உபயோகிக்க வேண்டும், அவற்றின் மொழிபெயர்ப்பு எபபடியிருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஒரு நிர்ணயம் செய்யட்டும். ஆனால் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். அதாவது, வார்த்தைகள் ரொம்ப பயங்கரமானவை. எவ்வளவு உள்ளார்த்த முடையனவா

யிருக்கின்றனவோ அவ்வளவு அந்த வார்த்தைகள் நம்மை ஏமாற்றி விடும் என்பதை மறந்துவிடக் கூடாது. வார்த்தைகளிலே ரொம்ப பயங்கரமான வார்த்தைகள் கடவுள், மதம், இந்த வார்த்தைகள் தான். எல்லோருடைய இதயத்திலும் ஒரேவித உருவத்தை இவை சிருஷ்டிப்பதில்லை. ஒவ்வொருவரும், அநேகமாக, இந்த வார்த்தைகளுக்குத் துண்டு துண்டு அர்த்தங்களை செய்கிறார்கள். புதிய புதிய அர்த்தங்களும் கொள்கின்றனர். கடவுள்' மதம் என்றவுடனே சிலருடைய எண்ணம் கோவிலிலே செல்கிறது. சிலருக்கு மசூதியில், இன்னும் சிலருக்கு மாதா கோவில்களில், குறிப்பிட்ட புத்தகங்களில் சிலருக்கு, பூஜையிலே பஜனையிலே சிலருக்கு, சிலருக்கு மூர்த்திகளில். சிலருக்கு தத்துவ சாஸ்திரத்தில், அல்லது தங்களுடைய பழக்க வழக்கங்களில், இல்லையேல் சண்டையில் எண்ணம் செல்கிறது. இந்த விதமாக ஒரே வார்த்தையானது, மனிதர்களுடைய மூளையிலே நூற்றுக் கணக்கான உருவங்களை சிருஷ்டித்து அதிலிருந்து வித விதமான எண்ணங்கள் வெளியாகின்றன. ஒரே வார்த்தை இவ்வளவு நிலைமைக்குக் காரணமாயிருக்குமானால் பாஷை பலமற்றதென்றுதானே நாம் நினைக்க வேண்டும். ஒரே அர்த்தம், அல்லது ஒரே உருவத்தை நிர்ணயம் செய்யக் கூடியதாய்த்தான் வார்த்தைகளிருக்க வேண்டும். அதாவது, கடவுள், மதம் என்ற வார்த்தைகள் இவ்வளவு விசாலமான அர்த்தம் கொடுப்பதிலிருந்து, அந்த வார்தைகளை நூற்றுக் கணக்கான துண்டுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும், இதுதான் அர்த்தம், பொருள் இன்னதுதான் என்றுவரையறுத்து விட்டால் மேற்கூறிய அல்லல் இராதல்லவா? அமெரிக்காவின் புராதன பாஷையிலே, காதல் கொள்வதற்கு இரு நூறுக்கும் அதிகமான வார்த்தைகளிருந்ததாய்க் கேள்விப் பட்டிருக்கிறேன். அப்படியானால், இந்த வார்த்தைகளைச் சரியாக எப்படி நாம் மொழி பெயர்ப்பது?

வார்த்தைகளை உபயோகிப்பதில் காந்திஜியுங் கூட சில சமயம் குற்றம் செய்கிறார் என்று தான் சொல்ல வேண்டும். அவர், எதை எழுதினாலும், சொன்னாலும் அர்த்த புஷ்டியுள்ளதாயும், சுத்தமாயும் எழுதுவார். அர்த்தமற்ற வியர்த்தமான வார்த்தைகளைக் கையாளவே மாட்டார். அழகு படுத்துவதற்காக விசேஷ முயற்சி எடுக்கவும் மாட்டார். அவருடைய பாஷை ஒரு தனி அழகுள்ளது. தனி சக்தியும் உள்ளவர். ஆனால், கடவுள், சத்தியம், அஹிம்சை இந்த விஷயங்களைப் பற்றி அவர் பேசவோ எழுதவோ புகுந்து விட்டால்—அவர் அடிக்கடி இவைகளைப் பற்றிப் பேசவும் எழுதவும் செய்கிறார்—நமக்கு ஒன்றுமே புரிகிறதாயில்லை. கடவுள் தான் சத்தியம், சத்தியமே கடவுள், அஹிம்சைதான் சத்தியம், சத்தியமே அஹிம்சை, இப்படியுள்ள வார்த்தைகளை அவர் அடிக்கடி உபயோகிக்கிறார். இந்த வார்த்தைகளுக்கு ஏதாவது ஒரு அர்த்தம் இருக்கத்தான் வேண்டும். ஆனால் இவ்விதமுள்ள வார்த்தைகளைப் பிரயோகிப்பது அந்த வார்த்தைகளின் பால் அநியாயம் செய்வதாகத்தான் எனக்குத் தெரிகிறது. (மொழிபெயர்ப்பு)

—"தேவிதாசன்"

தமயனின் கடிதம்-13

எனது பகற் போது

'ஆதவன் எழுந்து விட்டான்—தேவி, துயில்
ஆகாது இனியு' மென்று
மாதாவின் சொல் பிறக்கும்—கண்மலரை
மலர்த்தி யெழுந்திடுவேன். 1

காலைக் கடன் முடிப்பேன்—பின்னர் தினக்
கருமத்தில் இறங்கிடுவேன்
வேலைக் கிடையினிலே—வந்துவிழும்
விந்தைகள் என்ன சொல்வேன் 2

தங்கை யிடமிருந்து—நல்லுதவி
தாவென்று கடிதம் வரும்
பங்க மடைந்த தய்யா—உங்களுடைப்
பண்டைத் தருமமென்று 3

சிப்பந்தி வந்திடுவான்—கடனதந்த
செல்வர்தம் ஆட்கள்வரும்
தப்பிதம் வராமல்—அவர்க்குரைகள்
தந்து அனுப்ப வேண்டும். 4

வாய்தா எங்கே யையா—ஆண்டு தோறும்
வம்புக ளும்முடனே
ஓய்தல் என்றேவென—இராமஅதி
காரியுரை தருவான். 5

எளியர் துயர் விரிப்பார்—பணச்செழியர்
    எட்டியும் பாராரடா
தளிரைப் போல் துவழ்வேன்—எழுந்தபகல்
    தணலிற் பட்டு மடா. 6

பகற் கடலினி லே—வறுமைப்புயல்
    பாய்ந்தெழ வாழ்வுக் கலம்
நகர்த்தும் மக்கள் நிலை—கண்டுமனம்
    நடுக்கங் கொண்டிடுவேன். 7

அடிக்கும் மிடிப்புயலால்—அலைகலங்கட்
    காதர வீழ்ந்திடவே
துடிக்கும் உள்ளமடா—அண்டிச் செல்லத்
    துணிவும் இல்லையடா ! 8

இந்த விதமாகப்—பகலெழுந்த
    எண்ணொணாக் காட்சி யெல்லாம்
செந்தீச் சருகதுபோல்—இரவுவரச்
    சென்று மறைந்திடுமே. 9

இரவை வாழ்த்திடுவேன்—நீண்டுநீயும்
    இருந்து செல்க வென்றே
உரைப்பேன் உளப்புணையை—நூற்கடலில்
    ஓட்டிம கிழ்ந்திடு வேன் 10

—"ஒரு காங்கிரஸ்வாதி"

சரோஜினி நாயுடு

ஜனனம் 1879

நாற்பதாவது காங்கிரஸ்

தலைவர்

இந்தியாவின் குயில்

என்று கூறினால், நம்முடைய தேசத்தில் மட்டுமில்லை; மற்ற வெளி நாடுகளிலுங் கூட மிக நன்றாகத் தெரியும். தேவி சரோஜினி நாயுடு, உண்மையில் இந்தியாவின் கோகிலமேயாவார். அவர் பேசுவதும் கவிதையில், எழுதுவதும் கவிதையில், அவர் வாழ்வதும் கவிதையில். ஆங்கிலக் கவிதையில் அவர் ஒரு முக்கியமான ஸ்தானத்தை வகித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய பாஷை ஒரு தனி அழகுள்ளது; யாவரையும் தன் வயப்படுத்துவது. அவருடைய பாஷை, நாவுக்கு மட்டுமில்லை, காதுக்கும் இனிப்பது. கூறப்புகின், கவியானது அவருடன் பிறந்தது. கவியாகவே அவர் பிறந்தார், கவியாகவே அவர் இருக்கிறார்.

1879ம் வருஷம் பிப்பிரவரி மாதம் 13ந் தேதி, ஹைதராபாத்திலே சரோஜினி நாயுடு பிறந்தார். அவருடைய தந்தையின் பெயர் அகோரநாத் சட்டோபாத்யாயா. நல்ல கல்வி ஞானமுள்ளவர். கல்வியின் காதலராயிருந்தார் அவர். தன் புத்திரி சரோஜினியின் இளமைக் காலத்திலே, இவரே அவருக்கு ஆசிரியராயிருந்தார். இதனாலேதான் சரோஜினி தேவியார் தன்னுடைய 12 வயதில், சென்னைக் கலாசாலையில் பத்தாவது பரீட்சையில் தேறினார்.

1895ம் வருஷம், இவர் மேல் படிப்புக்காக இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டார். அங்கே "கிங் காலேஜில்" இவர் கல்வி பயின்றார். இந்தக் காலத்தில் இவர் இத்தலி தேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அத்தேசத்

தின் இயற்கையழகு இவர் மனதைக் கவர்ந்தது. இவருடைய இதயத்திலே ஒரு மறுமலர்ச்சி யேற்பட்டதற்கு இந்தச் சுற்றுப் பிரயாணமே முக்கிய காரணமாயிருந்தது என்றுங் கூடச் சொல்லலாம். கணிதம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் இவரைப் பயிற்றுவிக்க வேண்டுமென்பது இவரது தந்தையாரின் விருப்பம். ஆனால் கவிதை நமது தேவியாரை வெற்றி கொண்டு விட்டது. இவர் எந்த நேரமும் படித்துக் கொண்டேயிருப்பார். சிறு வயதிலேயே இவர் ஒரு நாடகங் கூட எழுதியிருக்கிறார். 1898ம் வருஷம் இவர் தன் தாய் நாடாகிய இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். அதே வருஷம் டிசம்பர் மாதத்தில் டாக்டர் கோவிந்தராஜுலு நாயுடு என்பவரை இவர் மணம்செய்து கொண்டார். இவருடைய குடும்ப வாழ்க்கை, மிகுந்த ஆனந்தமும் சுகமும் செல்வமும் நிறைந்ததாயிருக்கிறது. இவருக்கு நான்கு குழந்தைகள். இரண்டு பெண், ஆண் மக்கள் இருவர்.

நைஜாம் ராஜ்யம், பர்தா முறையில் (முகமூடி) பிரசித்தமானது. அதவும், ஹைதராபாத்தை, பர்தா முறையின் வாசஸ்தலம் என்றே கூற வேண்டும். அப்படிப் பட்ட ஸ்தலத்திலே வசிக்கும் இவர், பர்தா முறையை அனுஷ்டித்ததே கிடையாது. இது மட்டுமில்லை. சமூகச் சீர்திருத்தம் முதலியனவெல்லாப் பொதுக் காரியங்களிலும் கலந்து, சேவை செய்ய இவர் முற்பட்டார்.

இவருடைய, "தி கோல்டன் ப்ரைஷ் ஹோல்ட்," "தி வர்ட் ஆப் டைம்" என்ற இரு கவிதை நூல்கள் வெளிவந்ததும் ஆங்கில நாட்டில் ஒரு ஆச்சர்யத்தை ஏற்படுத்தி விட்டன. அந்தச் சமயத்திலுங் கூட, தேசபக்தி, அவருடைய கவிதைகளில் ததும்பி நிற்பதைக் காணலாம். இவர் தன் மதிப்புடையவர். தேசபக்தி நிறைந்தவர். தன்னுடைய சேவையை உபயோகிப்பதற்குச் சரியான சந்தர்ப்பம் வாய்த்த போது இவர் அக மகிழ்ச்சி கொண்டார். மகாத்மா காந்தியடிகளின் தலைமையில் நம்முடைய தேசத்திலே ஏற்பட்ட எந்த இயக்கங்களிலும் கலக்காமல் இவர் தனித்திருந்ததே கிடையாது. காந்திஜியினிடைய உபதேசத்தால் தங்களையே தேச சேவையில் அர்ப்பணித்து விட்ட சில முக்கியமானவர்களோடு இவரும் ஒருவரானார். கனவிலும், நனவிலும், சுதந்திர இந்தியாவைப் பற்றிய எண்ணமே இவருக்கு. அந்தச் சுதந்திர தாகம், இவருடைய கவிகளில் எதிரொலி கொடுத்துக் கொண்டிருப்பதைக் காணலாம்.

1916ம் வருஷம் லக்னோவில் நடைபெற்ற காங்கிரசில் தான் இவர் முதன் முதலாக கலந்து கொண்டார் என்று கூறலாம். அநேக இடங்களில் அரசியல் விஷயங்களைப் பற்றி மிக அழகாகப் பேசினார். முக்கியமாக, மாணவர்கள், ஸ்திரீகள் இவர்களது சங்கங்களில் இவர் அரசியலைப் பற்றி அடிக்கடி பேசுவதுண்டு. இப்பால் 1917ம் வருஷம் இந்தியா பூராவிலும் சுற்றுப் பிரயாணம் செய்ய முற்பட்டார். அந்தக் காலத்தில் இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் வெறும் கவிதைகளாக மட்டுமில்லை; ஜனங்களைக்

கவர்ந்து விட்டன. இந்த 1917ம் வருஷம் டிசம்பர் மாதம் சென்னையிலே, மாணவர்களுக்கு முன்னே, "ஜி ஹோப் ஆப்டுமாரோ" என்ற அவருடைய பேச்சு, அதை என்னவென்று சொல்வது? தங்கள் காதுகளால் கேட்டார்கள் மாணவர்கள். அந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவர்களது இதயத்தைப் போய்த் தொட்டன. அது மட்டுமா? அந்த இதயங்களில் புகுந்து கொண்டன வென்றும் சொல்லலாம். 1918ம் வருஷம், காஞ்சி புரத்திலே நடைபெற்ற சென்னை மாகாண காங்கிரஸ் கூட்டம் அவருடைய தலைமையின் கீழ் நடைபெற்றது.

1919ம் வருஷம் இவர் மறு முறையும் ஐரோப்பாவுக்குச் சென்றார். அங்கு அநேக இடங்களில் இவர் இந்தியாவின் நிலைமையைப் பற்றி சொற்பொழி வாற்றினர். அவ் வருஷம் ஜினிவாவில் நடைபெற்ற பெண்கள் மகா நாட்டில் இவர் கலந்து கொண்டார்.

1922ம் வருஷத்தில் இவர் காங்கிரஸ் மகா சபை மூலம் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பப் பட்டார். அதே வருஷம் இவர் பாம்பே கார்ப்பரேஷன் மெம்பராகவும், பாம்பே மாகாணக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் தெரிந் தெடுக்கப் பட்டார். 1923ம் வருஷம் நாகபுரியில் நடைபெற்ற கொடிப் போராட்டம் யாவரும் அறிந்ததே. பிரசார நிமித்தம் இவர் அந்தக் காலத்தில் மத்திய மாகாணம் பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

1925ம் வருஷம் தேசத்திலே ஹிந்து முஸ்லீம் கலகம் அதிகரித்திருந்தது. மத மாற்சரியம் பெருகியிருந்தது. இவ்வருஷக் காங்கிரஸ் மகா சபைக் கூட்டம் கான்பூரிலே நடைபெற வேண்டியதிருந்தது. தேசத்திலே ஹிந்து முஸ்லீம்களிடையே சிநேகப் பான்மையையும் ஒற்றுமையையும் நிலை நாட்டக் கூடிய சக்தி வாய்ந்தவர் அப்போதைய காங்கிரஸ் தலைமைப் பீடத்திற்குத் தேவை. இந்த 1925ம் வருஷம் நடைபெற்ற காங்கிரஸுக்கு நமது சரோஜினி தேவியார் தலைவராகத் தெரிந் தெடுக்கப்பட்டார். அந்தக் காங்கிரசிலே இவர் செய்த பிரசங்கம் மிகவும் சிறியது. கவிதை மயம். தித்திக்கும் சொற்கள். ஆனால் இதயத்தோடு ஒட்டிக் கொள்பவை. 'சுதந்திரப் போராட்டத்திலே, பயந்து புறமுதுகு காட்டுபவர்கள் மன்னிக்க முடியாத குற்றவாளிகள். மகா பாவிகள்' என்று அப்போது அவர் கூறிய வாக்கியங்கள் எத்தனை உறுதியுடையவையா யிருந்தன தெரியுமா?

1928ம் வருஷம் இவர் அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கிருந்து 1929ம் வருஷம் இவர் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார்.

1930ம் வருஷம் இந்தியாவிலே சுதந்திரப் போராட்டம் ஆரம்பத்தது. மகாத்மா காந்தி அடிகளின் தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. பெண்கள் இந்தப் போராட்டத்திலே கலந்து கொள்ளாமல், அந்நியத் துணி பகிஷ்காரம், கட்குடி ஒழிப்பு இந்த வேலைகளை இவருடைய தலைமையில் பெண்கள் துண்டாகச்

செய்ய வேண்டு மென்பது காந்திஜி யின் விருப்பம். ஆனால் தேவியார், சுதந்திரப் போராட்டத்திலே ஆண்களுக்கு முன்னே அடியெடுத்து வைக்கத் துடித்துக் கொண்டிருந்தார். தண்டி யாத்திரை முடிந்து காந்திஜி சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம் பித்துக் கைதியானபின் அந்த ஸ்தானத்தை கிழப்புலி அப்பாஸ் தயாப்ஜி அலங்கரித்தார். அவர் கைதியான பின் அந்த முள் பொதிந்த மகுடத்தை நமது தேவியார் ஏற்றுக் கொள்ளும் பாக்கியம் பெற்றார். 1930ம் வருஷம் மேமாதம் 21ந் தேதி எர்வாடா ஜெயிலுக்குக் கொண்டு போகப் பட்டார்.

காந்தி இர்வின் ஒப்பந்தம் ஆவதற்கு முன்னே சாப்ரு முதலியோர், காங்கிரஸ் தலைவர்களை ஜெயிலில் கண்டு பேசியது யாவருக்கும் தெரியும். இந்தப் பேச்சு வார்த்தைக்கும் ஆலோசனைக்கும்சௌகர்யமாக நைனி ஜெயிலிலிருந்த மோதிலால் நேருவும் ஜவஹர்லால் நேருவும் எர்வாடா ஜெயிலுக்குக் கொண்டு வரப் பட்டார்கள். இந்த ஆலோசனைக் கூட்டத்திலே நமது தேவியாரும் ஒருவராவர்.

காந்தி இர்வின் ஒப்பந்தத்திற்குப் பின், இங்கிலாந்திலே நடை பெற்ற இரண்டாவது வட்ட மேஜை மகாநாட்டில் கலந்து கொள்வதெனக் காங்கிரஸ் நிச்சயித்துத் தன்னுடைய ஏகப் பிரதிநிதியாக மகாத்மா காந்தியை அதற்கு அனுப்பியது. சரோஜினி தேவியார் மகாத்மாவுடன் சென்று அரிய வேலைகள் செய்தார். இப்பால் 1931-32ம் வருஷம் தேசத்திலே நடை பெற்ற போராட்டத்திலும் இவர் கைதி செய்யப்பட்டு ஜெயிலுக்குச் சென்றார்.

சரோஜினி தேவியார், மகாத்மா காந்தியின் பரம பக்தர். அவருடைய சத்தியம் அஹிம்சை யென்ற கொள்கையில் இவருக்கு அத்யந்த பிரமை. இந்த தத்துவத்தினாலேதான் இந்தியாவும், ஏன் உலகம் பூராவும் சுபிட்சமடையப் போகிறது; மனிதர்கள், மனிதத் தன்மை நிறைந்தவர்களாய் வாழ்வார்கள் என்பது இவருடைய நம்பிக்கை. இந்தத் தத்துவத்திலே நம்பிக்கை கொண்ட இவர் தன்னுடைய இதயத்தை அப்படியே காந்தியினிடத்தில் அர்ப்பணம் செய்துவிட்டு, அவருடைய வாயாக இவர் இருக்கிறார். அடிக்கடி இவர் கூறுவதுண்டு; 'மகாத்மா கிருஷ்ணன், அவருடைய புல்லாங் குழல் நான்'.

சுதந்திரம் என்றால் என்ன?
அது தேவையின் எல்லை.

—இங்கர்ஸால்.

—"நாராயண சிவன்"

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம்

நான் ஒரு நாஸ்திகனல்ல

வெனினும் இந்தியாவில் ஈஸ்வரனுக்கு முக்கிய ஸ்தானம் அளித்து வரப்படுகிற தென்பதைச் சொல்ல விரும்புகிறேன். மதமும் ஈஸ்வரனும் சேர்ந்து இந்த தேசத்தை உயர்த்துவதற்குப் பதிலாகத் தாழ்த்தி விட்டன என்பதே எனது அபிப்பிராயம். நமது அரசியலைப் பற்றியுள்ள ரோகம் அநேகம். அவைகளை யெல்லாம் விவரிப்பது முடியாத காரியம். இவைகளில் முக்கியமானது "அத்தியாத்மிகம்." இதனைப் பற்றிச் சில சொல்லுவதற்கே இங்கு முனைந்துள்ளேன்.

மாடும் மனிதரும் சேர்ந்து வசிக்கும் வீடுகள், அழுக்கும் ஆபாசமும் கலந்த தண்ணீர், வதி நிறைந்த வழிகள், குப்பை கூளங்களிலிருந்து வரும் துர்க்கந்தம், வியாதி, தரித்திரம், மனோ வியாகூலம், ஆகிய இவைகளைப் பார்க்க வேணுமானால் இந்தியாவின் ஏதாவது ஒரு கிராமத்தைப் பார்த்தால் போதும். இச்சிறு நரகத்தில் வசிப்பவர்கள், அவர்களது கஷ்டங்களை அறியாமலிருக்கிறார்களா? இல்லை. அவர்கள் நன்கு தெரிந்திருக்கிறார்கள்.. இவைகளிலிருந்து விடுதலை பெறவும் விரும்புகிறார்கள். ஆனால் இவைகளுக்கு மருந்தை அவர்கள் இந்த லோகத்தில் தேடுவதில்லை; பரலோகத்திலேயே தேடுகிறார்கள். தாங்களனுபவித்து வரும் கஷ்டங்களுக்குக் காரணம் தாங்கள்தானென்பதை உணராது அந்தப் பாரத்தை கடவுளின் மேல் சுமத்துவதுதான் அவர்கள் வழக்கம். பரலோக சிந்தையும், அத்யாத்மிக மனோபாவமும் சேர்ந்து கிராம வாசிகளை சோம்பேரிகளாக்கி முன்னேற்ற மார்க்கங்களை யெல்லாம் தடைப்படுத்தி விடுகின்றன.

இந்தியர்களுக்கு "விதி" யிலிருந்து வரும் நம்பிக்கை விசேஷமானதாகும். விளைவு தீய்ந்து போனால் அது ஈஸ்வரனின் இச்சை, வாந்தி பேதியோ வைசூரியோ ஏற்பட்டால், ஈஸ்வரனின் திருவிளையாட்ல், கறவைப் பசு கன்றிழந்தால் அது ஜன்மாந்திரத்தில் செய்த தோஷம், உப்புக்கு விலையேறினால் அது பாபச் செயலின் பலன் இந்த விதமாயிருக்கிறது அவர்களது நம்பிக்கை. அவர்களது கஷ்டத்திற்கும் தரித்திரத்திற்கும் தெய்வம் தான் காரணம் என்று சொல்லிவரளாயிருக்கின்றனர். அவர்களது, ஜீவிய காலத்தில் ஏற்பட்ட பல தோல்விகளே அவிர்களது இந்த எண்ணத்துக்குக் காரணமாயிருககலாம். நல்லெண்ணத்துடன் க்ஷேமத்திற்காகப் பாடுபட்டு பிரயோஜனமற்றதாய்ப் போகும் காலத்தில் சுகதுக்கங்களை சிருஷ்

டிக்கும் சக்தி மனிதருக்குக்கிடையாதென்ற நம்பிக்கை உண்டாவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மனித வர்க்கத்தின் சரித்திரத்தை ஆராய்வோம். மனிதன், தன்னுடைய புத்திக்கோ சக்திக்கோ எட்டாதவைகளை யெல்லாம் ஈஸ்வராதீனமாய் விட்டு விடுகிறான். முன் காலங்களில் மகாமாயி முதலான வியாதிகளைத் தடுப்பதற்கான சக்தி மனிதனுக்கிருக்கவில்லை. அப்பொழுதெல்லாம் அதனை தெய்வத்தின் கோபமென்றும் தேவதாபாதை யென்றும் சொல்லி வந்தார்கள். தங்களால் மழை பெய்விக்க முடியாததால் தெய்வந்தான் மழை பெய்விக்கிறதென்று கருதினார்கள். ஆனால் இவைகளெல்லாம் பண்டையக் காலம். மனிதனின் அறிவுப் பெருக்கினாலும் விஞ்ஞானத்தின் வெளிச்சம் பரவி வருவதாலும் பல விஷயங்களின் காரணங்கள் வெளிப்படலாயின. ஈஸ்வரனின் பொறுப்பும் குறைய ஆரம்பித்தது, மனிதனின் பொறுப்பு அதிகமாயிற்று. இந்திய கிராம ஜனங்களிடையே சாஸ்திர அறிவு ஏற்படாததினால் எல்லாம் ஈஸ்வராதீனம் என்ற எண்ணம், இன்னும் மாறவில்லை. எந்த ஒரு ஆபத்து விளைந்தாலும் பூர்வ ஜன்மத்தில் செய்த பாபத்தின் பலனாய் தெய்வம் அருளினார் என்று சொல்லி இன்றும் சமாதான மடைகின்றனர். இந்த மனப்பான்மைதான் இந்தியரின் இன்றையப் பரிதாப நிலைக்குக் காரணம்.

குடும்பத்தி லேற்படும் கஷ்டங்களெல்லாம் தெய்வ சங்கல்ப மென்று ஒரு இந்து கருதுகிறான். ஆகையால் தகக முயற்சி செய்து கஷ்டங்களை நிவர்த்தித்துக் கொள்ளுவோ மென்ற ஆசைகூட அவனுக் கில்லாமலாகிறது. அதிலும் அடிக்கடி ஒருவனுக்குக் கஷ்டம் நேர்ந்து அவனும் தகுந்த பரிகாரங்கள் செய்து நிவர்த்தி கிடைக்காவிட்டால் கேட்க வேண்டியதில்லை. தெய்வ சோதனைதா னென்ற நம்பிக்கை அவனது மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்து விடுகிறது. முயற்சி செய்வோருக்குத் தெய்வம் துணைசெய்யு மென்ற நம்பிக்கை அவனுக்கில்லாம லிருக்கிறது. நலமோ நாசமோ நாம் செய்ய வேண்டியதைச் செய்வோ மென்று இந்தியர்கள் ஒரு வேலையைச் செய்யத் துணிகிறார்களில்லை. இந்த வியாதி ஜன சமூகத்தையே பீடித்திருப்பதால் துணிந்து வேலைகளை ஆரம்பிப்பவருக்கும் கூட, அதனைத் தொடர்ந்து செய்து வெற்றி பெற முடியாமல் போகிறது.

நம் பழைய புராணங்களும் முயற்சி செய்ய உற்சாக மூட்டுவதாக இல்லை. ஜனங்களும் அவைகளையே பின்பற்றலானார்கள். மனிதனின் இதயம் துக்கம் நிறைந்து துர்பலப்பட் டிருக்கும் போது ஆத்தியாத் மிகவழியில் அவனை சீக்கிரமாய்த் திருப்பி விடலாம். பல பேரடங்கிய ஒரு குடும்பத்தில் சிசுமரணம் ஏற்படுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். நம் நாட்டுப் பழக்க வழக்கப்படி பலர் கேதம் விசாரிக்க வருகிறார்களல்லவா! அவர்கள் வந்து என்ன சொல்கிறார்கள். சிலர் ஜன்மாந்தரத்தில் செய்த தோஷ மென்றும் இன்னும் சிலர் கொடுத்து வைத்தது அவ்வளவுதா னென்றும் சொல்கிறார்கள். பொதுவாக எல்லோருமே பகவானைப் பார்த்துச் செய்வதற்கு நாமென்ன

செய்ய முடியு மென்று சொல்கிறார்களே தவிர ஒருவராவது தரித்திர தோஷத்தினால் குழந்தைக்குப் போதுமான அளவுக்கு வைத்தியம் பார்க்க வசதி யில்லாமல் அவ்விதம் ஏற்படலா மென்றோ, தகுந்த ஆகாரம் கொடுக்க ஏதுவில்லாமல் போனதால் ஏற்படலா மென்றோ எண்ணுகிறார்கள் கூட இல்லை. இவ்விதந்தான் ஏற்படுகிற தென்று ஜனங்களுக்கு எடுத்துரைப்பாருமில்லை.

எந்தச் சிறு காரியத்திலும் ஈஸ்வரன் தலையிடுகிறானென்று எண்ணுவது ஒரு ஆஸ்திகனுக்கு அடையாளமாகாது. அப்படி எண்ணுவது மதியீன மென்று கூடச் சொல்லலாம். பாமர மக்களுக்குப் பகுத்தறிவு கிடையாது. கண்ணைக் கவரும் அயல் நாட்டுச் சாமான்களில் மோகங் கொண்டு தேவை யில்லாவிடினும் வாங்கி நிரப்புகிறார்கள். கடன் வாங்கி கல்யாணம் முதலியன ஆடம்பரமாய் நடத்துகிறார்கள். வரவுக்கு மிஞ்சின செலவு செய்து கடைசியாகத் தரித்திரத்தில் மூழ்கும் போது "எல்லாம் ஈசன் செயல்" என்று ஏங்குகிறார்கள். அவர்கள் எந்த ஜலத்தையும் குடிப்பார்கள், எங்கும் வசித்து எந்தக் காற்றையும் உட்கொள்ளுவார்கள், எந்த உணவும் தள்ளுபடி கிடையாது. ஆனால் வியாதிகளில் சிக்கினால் மட்டும் பழி பகவானுக்கு. இந்த அறிவில்லாத் தன்மையையும் மூட நம்பிக்கையையும் கிராமங்களிலிருந்து துரத்த வேண்டியது அத்தியாவசியமாகும். வியாதி ஈஸ்வர சிருஷ்டியல்ல வென்றும், ஜனங்களின் அறிவின்மையே அதற்குக் காரண மென்பதையும் அவர்கள் மனதில் பதியும்படி செய்ய வேண்டும். வைத்திய சாஸ்திரங்களால் மட்டிலுமே வியாதிகளை விரட்டியடித்த தேசங்கள் உலகத்தில் உள்ள வென்பதை உதாரணத்துடன் ஊர்ஜிதப் படுத்துவதுடன், அர்த்த சாஸ்திரத்தாலும், அரசியல் அமைப்பினாலும் தரித்திரத்தைத் துரத்தியடிக்கலா மென்பதையும் அவர்களுக்கு எடுத்துரைக்க வேணும். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் ஜனங்கள் சர்வ சம்பத்தையும் பெற்றிருப்பது ஈஸ்வர தர்பாரில் அவர்களுக்கு நல்ல செல்வாக்கு இருந்து வருவதினாலல்ல. அவர்களது சர்க்கார் சாஸ்திரங்களின் உதவியைக் கொண்டு அத்தேசங்களிலிருந்து தரித்திரத்தை விரட்டியடித்தார்களென்றும், இந்தியர்கள், பசியால் வாடுவதும் பனியினால் ஆடுவதும் தெய்வத்திற்குத் தங்கள் பேரிலுள்ள வெறுப்பின் காரணத்தாலல்ல வென்றும், அர்த்த சாஸ்திரத்தின் உதவி அவர்களுக்குக் கிடைக்காததினால் தானென்றும் இந்தியக் கிராம மக்கள் உணருவார்களாகில் அதனாலேற்படும் நன்மை கொஞ்ச நஞ்சமல்ல. அன்று முதல் உற்சாகமும் ஊக்கமும் அவர்களுடனேயே நிற்கும். சுருக்கிச் சொன்னால் லோகத்திலுள்ள நாகரிகமடைந்த சர்க்கார்கள்; தாங்கள் ஜனங்களுக்காக, அவர்களின் நலனுக்காகச் செய்து வரும் வேலைகளை கிராம ஜனங்களுக்கு ஸ்பஷ்டமாய் எடுத்துக் காட்டுவார்களாகில் அவர்களைக் கண் விழிக்கச் செய்வதோடு, அத்யாத்மிகத்தினுடையவும், மூட நம்பிக்கையுடையவும் மயக்க மருந்தின் உத்வேகத்தைக் குறைக்கவும் முடியும்.

இவ்விதம் ஏதாவது செய்யாத வரையில் காலா காலத்தில் மழை பெய்யாதது ஈஸ்வரனின் கோபத்தா லென்றும், சரியான விளைச்ச லேற் படாததும், அவைகளுக்குத் தகுந்த விலைகள் கிடைக்காததும் தெய்வத் தின் வெறுப்பினுலென்றும் உள்ள நம் பிக்கைகள் அழியாமலிருந்து ஜனங் களை சோம்பேரிகளாகச் செய்வதற்கு ஏற்ற உதவியா யிருந்து வருகிறது.

பக்தியினுல்தான் ஜனங்கள் மேற் சொல்லியபடி இருந்து வருகிருர்க ளென்று சொல்லுவது இன்னும் ஆச் சர்யத்தைக் கொடுக்கிறது. இந்து மதமே பக்தியின் பேரில்தான் கட்டப் பட்டிருக்கிறதென்று சொல்லப் படு கிறது. ஆதி காலத்திலுள்ள ஜனங் கள் இந்த மனுேபாவத்துடனிருக்க வில்லை. நம் இதிகாசங்கள் முயற்சி யாளர்களைத்தான் பாராட்டுகிறது. ஈஸ்வரனின் அவதாரமென்று சொல் லப்படுகிற ராமனுடையவும், கிருஷ்ண னுடையவும் சரித்திரங்களை எடுத்துக் கொள்ளுங்கள். வீரமும், பராக்கிர மும் நிறைந்த க்ஷத்திரிய உடலில் அவதரிக்க வேணு மென்றுதான் ஈஸ்வரன் விரும்பினுனென்று ஸ்ரீ ராம னின் சரித்திரம் விளக்குகிறது. ராவணன் சீதையை எடுத்துக கொண்டு போனதும் "ஈஸ்வர சங்கல் பம் அவ்விதம் இருக்கும் பொழுது என்னுல் என்ன செய்ய முடியும்" என்று எண்ணி ராமன் சும்மாயிருந்து விடவில்லை. தன் சொந்த மனிதர் களின் உதவி பெற முடியாமல் போயினும் வனவாசிகளின் உதவி யைக் கொண்டாவது சீதையைத் திரும்பப் பெற யத்தனித்தான். குறுக்கே, நிறைந்த சமுத்திரத்தை; இயற்கைத் தளையைக் கூடக் கடந்து எதிரியை வென்று பத்தினியை யடைந்தான். விதி யென எண்ணி சும் மா இருந் திருப்பானுகில் வீர புருஷ னின் உதாரணமாய் விளங்க முடியா தல்லவா? கிருஷ்ணசரித்திரம் இதற்குச் சற்றும் குறைவுபட்டதல்ல. இடைக் குடியிலிருந்து துவாரகையை அடைந் ததும், பாண்டவர்களின் பிரதிநிதியா யிருந்து வந்ததும் வீரச் செயல்களின் விளைவே யாகும். இந்தியாவின் இரு பெருங் காவியங்களிலும் எடுத்துக் காட்டாக விளங்கும் இவ்விரு வீர புருஷர்களையும் பற்றி ஜனங்கள் நன்கு தெரிந்து கொள்ளாதது வருந்தத் தக்க விஷயம்.

ஈஸ்வராம்சங்களான அவர்களைப் பின்பற்றுவது சாதாரண மக்களுக்கு சாத்ய மாகுமா வென்ற கேள்வி எழக் கூடும். அவர்களைச் சதா மனதில் நினைத்துக் கொள்ளவும் அவர்களது வீரச் செயல்களைப் பாராட்டுவதையும் தவிர அவர்களைப் பின்பற்றுவதென் பது முடியாத காரிய மென்றும் எண் ணுகிருர்கள். இவ்விதமாக முகஸ்துதி செய்பவர்களை விட தங்களைப் பின் பற்றுபவர்களையே அந்த ராமனும், கிருஷ்ணனும் விரும்புகிருர்கள் என் பதை அவர்கள் உணர வேண்டும். ஸ்ரீ ராமனின் பரம பக்தனுன ஆஞ்ச நேயர் மூக்கைப் பிடித்துக் கொண்டு மூலையி லுட்கார்ந்து அவரது பராக் கிரமங்களைப் பாராட்டிக் கொண்டி ருக்கவில்லை. கதாதாரியான சுத்த வீரராய் விளங்குகிருர். முன் சொல்லி யுள்ளபடி அனுமான் இருந்திருப்பா ராகில் அவரைத் தனது பக்தனுகவே ஸ்ரீ ராமர் கருதி யிருக்க மாட்டா ரென்று பூரணமாய் நம்பலாம்.

—மா. சர்மா, B. A. (Hons)

சிலப்பதிகாரம்-இந்திர விழா

விடியல் :

நீர் நிரம்பிய பொய்கை

அதில் ஆம்பல், தாமரை, குவளை முதலிய மலர்கள் மல்கி யிருக்கின்றன. அழகிய அன்னப்பட்சிகள் பல அப் பொய்கையைத் தம் இல்லமாகக் கொண்டிருக்கின்றன. நான்கு கரைகளிலும் உயர்ந்து செறிந்த மரங்கள். அம்மரங்களில் பலவகைப் பட்சிகள் கூடு கட்டிக் கொண்டு வசிக்கின்றன.

உலகத்து உயிர்களுக்கு ஒருமிக்க ஓய்வு கொடுப்பது இரவு. பகலில் பலவகைப் பட்ட தொழில்களைச் செய்து தளர்ச்சி யடைந்த மக்கள், இரவில் தம் தளர்ச்சி நீங்கத் துயில்கின்றனர். நாள் முழுதும் இரை தேடி அலுத்த மிருகங்களும் பட்சிகளும் இரவில் தத்தம் சேர்க்கை யடைந்து ஓய்வெடுத்துக் கொள்கின்றன. இங்கு பொய்கையும் ஓய்வெடுத்துக் கொள்வதாகக் கூறுகிறார் ஆசிரியர். பொய்கை ஒரு பெண்ணும். சிவந்த தாமரை மலர்கள் அவள் வாயாம். தாமரையை யழகு படுத்தும் ஆம்பல் மலர்கள், அவள் வாயில் தோன்றும் ஆம்பற் பண்ணும். கரு நிறமுள்ள குவளை மலர்கள் அவள் கண்களாம். கரையோரம் இருக்கும் கருமணல் அவள் கூந்தலாம். அப் பொய்கையை விட்டு அகலாது உறையும் அழகிய அன்னங்களே அவள் நடையாம். இரவில் இம்மலர்கள் குவிந்திருக்கின்றன. அன்னப் பட்சிகள் உறங்குகின்றன. ஆகவே பொய்கை எனும் பெண்ணும் தூங்குகிறாள்.

விடியற் காலத்தில் மலர்கள் அலர ஆரம்பிக்கின்றன. அவற்றுள் இரவெல்லாம் தங்கி யிருந்த வண்டுகள் வெளிப்படுகின்றன. மலர்ந்த மலர்களின் தேனை யுண்ண பாடிக் கொண்டே பூக்கள் தோறும் செல்கின்றன. இவ் வண்டுகளின் பாட்டு பொய்கைப் பெண்ணை யெழுப்பும் பள்ளியெழுச்சிப் பாடலாய் அமைகின்றது. பொய்கை விழித்தவுடன் அதிலுள்ள சங்கு

கிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குச் செய்த உபதேசங்கள் தானென்ன? தன்னை சதா நினைத்துக் கொண்டிருப்பதற்கு மாத்திரமல்ல. வில்லையும் கையில் பிடித்து பயந்து நிற்கும் அவனை துணிவுடன் யுத்தத்தி லிறங்கி வெற்றி பெறச் செய்வதற்கே யாகும். அறிவையும் ஆற்றலையும் ஆராதித்து வரும் பரம புருஷர்களிடத்தில் பக்தி காட்டி வரும் நாம், அறிவிழந்து அஞ்ஞானத்தி லாழ்ந்து கிடப்பதின் அர்த்தம் விளங்க வில்லை.

அளவு கடந்த ஆத்யாத்மிக வாதம் ஆபத்துக் கிடமானதாகும் என்பதே இதிலிருந்து அறியக் கிடக்கிறது. அதிலிருந்து விடுதலை பெறும் நாளே இந்தியக் கிராம மககள், உறக்கத்திலிருந்து விழிப்படைந்த நாளாகும்.

கள் சப்திக்கின்றன. அச் சப்தத்தைக் கேட்டு மரங்களிலுள்ள பட்சிகள் கத்துகின்றன. பின் ஊரிலிருக்கும் கோழிகள் கூவுகின்றன. மக்கள் விழித் தெழுகின்றனர்.

அன்ன மென்னடை நன்னீர்ப்
  பொய்கை
ஆம்பல் நாறும் தேம்பொதி
  நறுவிரைத்
தாமரைச் செவ்வாய்த்
  தண்ணறற் கூந்தல்
பாண்வாய் வண்டு நோதிறம் பாடக்
காண்வரு குவளைக் கண்மலர்
  விழிப்பப்
புள்வாய் முரசமொடு பொறிமயிர்
  வாரணத்து
முள்வாய்ச் சங்க முறைமுறை
  யார்ப்ப
வுரவுநீர்ப் பரப்பின் ஊர்துயில்
  எடுப்பி.

[நோதிறம்—ஒருவகைப்பண்—;
  வாரணம்—கோழி.]

காலை :

தலைவனைப் பிரிந்த துயரம், பனியால் ஏற்படும் நடுக்கம். பூமகள் பனியின் நடுக்கத்தை நீக்க இருட்டென்னும் போர்வையை இறுக்கிப் போர்த்திக் கொண்டாள். உடம்பின் நடுக்கம் ஒழிந்தது. பிரிவால் ஏற்பட்ட மன நடுக்கம் நீங்குமா? நெடு நேரம் உறக்கங் கொள்ளவில்லை. கடையாமத்தில் அவளையு மறியாமல் அவள் கண்கள் மூடிக் கொண்டன. அப்பொழுதுதான் கண்ணயர்ந்தாளாகையால் விடியற் காலத்தில் நம்மை எழுப்பிய ஒலிகள் அவள் உறக்கத்தைக் கலைக்கவில்லை. கதிரவன் கீழ்த் திசையில் உதித்தான். பூமகள் போர்த்திருந்த போர்வையைத் தன் கிரணங்களாகிய கரங்களால் விலக்கினான். போர்வை விலகியதும் துள்ளி யெழுந்தாள் பூமகள். அவள் கண்முன் சிரித்த முகத்துடன் தோன்றும் சூரியனைக் கண்டாள். துயரத்தால் ஏற்பட்ட மன நடுக்கம் இப்பொழுது அளவிறந்த ஆநந்தத்தால் ஏற்படும் மன நடுக்கமாய் மாறிற்று. அவள் மனதில் தோன்றிய ஆநந்தம் முகத்தில் மகிழ்ச்சியாய் வெளிபட்டது. உதய சூரியன் பிரகாசத்தில் அவள் உடம்பு பொலிவுற்றது. பூமியில் உள்ள பொருள்களெல்லாம் விளங்கித் தோன்றுகின்றன.

காவிரிப் பூம்பட்டினம் :

மருங்குவண்டு சிறந்தார்ப்ப
  மணிப்பூவாடை யதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித் தொல்கி

நடக்குங் காவிரி கவின் பெற்று விளங்குகின்றது. கடலும் காவிரியும் கலக்கு மிடத்தில் தெரிவது காவிரிப் பூம்பட்டினம். கடற் கரையின் பக்கத்தில் காண்போர்களை மேற் போக விடாமல் தடுக்கும் பல அழகிய மாட மாளிகைகள் தோன்றுகின்றன. தம் ஊரை விட்டு, இவ்வூர் வந்து, பல மொழிகள் பேசினும் ஒற்றுமையுடன் வாழும், வெளி தேசத்து வியாபாரிகள் வசிக்கும் இடங்கள் அவை. அடுத்தாற்போல் நகர வீதிகள் நலம் பெற விளங்குகின்றன. அவற்றில் வண்ணமும் சுண்ணமும், சாந்தமும் பூவும், புகையும் விரையும் விற்பவர் பலர் திரிகின்றனர். பட்டாலும்

பருத்தியாலும், எலிமயிரினு லும், ஆடைகளும் கம்பளங்களும் நெய்யும் சாலியர்கள் வாழு மிடங்கள் சிறப்புடன் திகழ்கின்றன. பட்டும் பவளமும், ஆரமும் அகிலும், முத் தும் மணியும், மாசறு பொன்னும் மலிந்த வணிகர் வீதிகள் வரிசை யாய்த் தோன்றுகின்றன. அவற் றின் அயலில் பலவகைத் தானியங்கள் பரப்பிக் கிடக்கும் கூல வீதி குறை வற்று விளங்குகின்றது. பிட்டு, அப் பம், கள், மீன், உப்பு முதலிய விற் கும் வணிகர் தெரு தனியாய்த் தோன்றுகிறது. வெண்கலம், செம்பு இரும்பு முதலிய உலோகங்களிலும், மரத்திலும் தொழில் செய்யும் தச்சர் கள் தமக்கமைந்த வீதியில் வசிக்கின் றனர். சிற்பிகள், சித்திரக்காரர், காகிதத்தாலும் கந்தைத் துணியாலும் பூவும் பொம்மையும் செய்பவர்கள், பொன், இரத்தினம் முதலியவை களிற் தொழில் செய்பவர்கள் இவர்க ளெல்லோரும் வசிக்கும் வீதிகள் தோன்றுகின்றன. சிறுதொழில்கள் செய்யும் ஏழை மக்களின் எளிய விடு திகள் நிறைந்த வீதிகளும் எழிலுடன் விளங்குகின்றன. இதுவரை நாம் பார்த்தவை மருவூர் பாக்கத்தைச் சேர்ந்தவை.

அதோ சிறு தொலையில் தெரிவது பட்டினப் பாக்கம். அதன் மத்தியில் அகன்று விளங்குவது இராசப் பெருந் தெரு. அதைச் சுற்றித் தேரோடும் வீதிகள் திகழ்கின்றன. கடைத் தெருவுகளும் பெரிய குடிப் பிறப்பை யுடைய வணிகர் வீதிகளும் அடுத்துத் தோன்றுவன. உழவரும், சோதிட ரும், மருத்துவரும் வசிக்கும் வீதி களும், நாழிகைக் கணக்கர், கூத்தர், கணிகையர், விதூஷகர் முதலியவர் கள் இனத்தின் வகை தெரிந்த இருப் பிடங்களும், குதிரை வீரர், யானைப் பாகர், தேர்ப்பாகர், போர் வீரர் முதலியவர்கள் வசிக்கும் வீதிகளும் விளங்கித் தோன்றுகின்றன.

நாளங் காடி :

இரண்டு பெரிய வேந்தர்களுக் குள்ளே பகையேற்படுகிறது. அவர் கள் தத்தம் சேனையுடன் போர் செய்யப் புறப்படுகின்றனர். அவ் விருவரும் தத்தம் நாட்டு எல்லை யில் பாசறை அமைக்கின்றனர். இவ் விரண்டு பாசறைகளுக்கும் இடைப் பட்ட நிலம், இரு வேந்தருடைய வீரரும் கலக்கும் போர்க்களமாய் அமைகிறது. அது போல் மருவூர்ப் பாக்கத்திற்கும் பட்டினப் பாக்கத் திற்கும் இடையேயுள்ள பொது நிலம் இரண்டு பாக்கத்து மக்களும் கூடும் நாளங் காடியாய் அமைந்தது. நெ ருங்கி வளர்ந்த மரங்களின் கால்களே தூணாகக் கூட்டப்பட்ட கடைகள் கொண்டது அது. அங்கே கொடுப் போர் ஓசையும் கொள்வோர் ஓசையும் கடலோசை போல் ஓயாது ஒலிக்கும். முன் சோழ நாட்டை ஆண்ட முசுகுந்தனுக்கு வரும் இன்னல்களை நீக்கிக் காவலாய் அமைய, இந்திரனால் அனுப்பப்பட்ட பூதம் ஒன்று அந்நாளங் காடித்தெரு வில் குடி கொண்டிருக்கிறது.

இருபெரு வேந்தர் முனையிடம்
போல
இருபாற் பகுதியின் இடைநில
மாகிய
கடைகால் யாத்த மிடைமரச்
சோலைக்

கொடுப்போ ரோதையுங்
  கொள்வோ ரோதையு(ம்)
நடுக்கின்றி நிலைஇய நாளங்
  காடியில்
வெற்றிவேன் மன்னர்க் குற்றதை
  யொழிக்கெனத்
தேவர் கோமான் ஏவலிற் போந்த
காவற் பூதம்.........

மன்றங்கள் :

வச்சிர நாட்டு வேந்தன் தந்த முத்துப் பந்தலும், மகதன் தந்த பட்டி மண்டபமும், அவந்தி வேந்தன் உவந்தளித்த தோரணவாயிலும் புகார் நகரத்தில் ஒருங்கே இருந்து விளங்கின. இவை மூன்றும் மயனால் நிறுவப் பட்டவை. வெவ்வேறு நாடுகளில் இருந்த இம்மூன்றும் ஒரு இடத்தில் ஒன்றி யிருக்கும் பெருமையை கரிகாலன் ஆட்சியில் காவிரிப்பூம்பட்டினம் அடைந்தது.

தெய்வ தச்சனால் செய்யப்பட்ட இவையே யன்றி தெய்வீக சக்தி யுடைய ஐந்து மன்றங்களும் அவ்வூரில் இருந்தன..•புகாரின் சிறப்பைப் பார்க்க வந்த புது• மக்களின் பொதிகளைக் களவாடுவார் தலையில் அவற்றை ஏற்றி ஊர்முழுதும் சுற்றவைக்குமே யன்றி, அவர் அப்பொருள்களை அடையவொட்டாமற் செய்யும் வெள்ளிடைமன்றம்ஒன்று. கூனும்குறளும், ஊமையும் செவிடும், நோயும் பெற்றவராய் நொந்த மாக்கள், மூழ்கியவுடன் பிணியைப் போக்கும் இலஞ்சி மன்றம் ஒன்று. மருந்துண்டு மயக்கமுடைந்தோரும், நஞ்சுண்டு நடுங்குந் துயருற்றோரும், அழலும் விடமுடைய அரவால் தீண்டப் பெற்றோரும், பிதுங்கின கண்ணையுடைய பேய் பிடிக்கப் பட்டோரும், ஒரு முறை வலம் வந்து வணங்கியவுடன் உற்றதுயர் அற்றுப் போகச் செய்யும் கல் நாட்டி நிற்கும் மன்றம் ஒன்று. ஆஷாட பூதிகள், அலவற் பெண்டிற், பொய்க்கரி கூறுபவர், புறங் கூறுபவர், நம்பியவரை மோசம் செய்பவர், இத்திறத்தவரைப் பாசக்கயிற்றால் பிணித்து வந்து புடைத்துண்ணும் சதுக்கப் பூதம்ஒன்று. அரசன் அகன்றொழுகினாலும், நியாயம்வழங்குவோர் நீதி தவறினாலும், நாவாற் கூறாது நீறுகுத்துக் கண்ணாற் கூறும் பாவை மன்றம ஒன்று.

இந்திர விழா

காவிரிக் கரையின் இயற்கை யழகும், காண்போர்த் தடுக்கும் மாட மாளிகைகளின் செயற்கை யழகும், தெய்வத் தன்மையுடைய மன்றங்களின் இருப்பும், வரிசை வரிசையாய் விளங்கும் வணிகர் வீதிகளும், நகரத்தின் நடு நாயகமாய் நின்ற நாளாங்காடியும் காவிரிப்பூம் பட்டணத்திற்குச் சீரும் சிறப்பும் அளித்தன. அதன் தன்மைகள் இன்னும் மிக்க மேம்பாடுடையனவாய் இருக்க வேண்டுமென்று எண்ணினான் முனிவன் அகத்தியன். இந்திரவிழாக் கொண்டாடுமாறு அரசனைப் பணித்தான். அவன் ஆணையின்படி, தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்ற சோழ முன்னோன் முதன் முதல் இந்திரனுக்கு விழா வெடுத்தான். விழா நடக்கும் நாலேழ் நாளினும், இந்திரன் முதலிய இமையவரெல்லாம், மண்ணக மறுகி இனிதிருக்கவேண்டுமென, செம்பியன்

விண்ணவர் தலைவனை வேண்டிக்கொண்டான். இந்திரனும் இசைந்தான். அதுமுதல் ஆண்டுதோறும் இந்திர விழா இப்பட்டினத்தில் இனிது நடப்பதாயிற்று.

உலகந் திரியா வோங்குயர் விழுச்சீர்ப்
பலர் புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
வோங்குயர் மலயத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோ ளெடுத்த
நாலேழ் நாளினு நன்கினி துறைகென
வமரர் தலைவ னுங்கது நேர்ந்தது

[மணிமேகலை]

விழாவின் நிகழ்ச்சிகள் :

சித்திரை மாதம். சித்திரை நாள். பௌர்ணமி. அன்றே இந்திர விழா ஆரம்பிக்கும் நன்னாள். மறக்குடி மகளிர் விண்ணுலகு விட்டு, மண்ணுல கடைந்து, காவிரிப்பூம் பட்டினத்தைக் காக்கும் பொருட்டு, நாளங் காடியின் நடுவில் நின்ற காவற் பூதத்திற்குப் பொங்கல் முதலிய படைத்து பூசை செய்தனர். மன்னவன் ஆளும் மாநில முழுவதும் 'பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி' குரவைக் கூத்தும் துணங்கைக் கூத்தும் ஆடினர். ஐம் பெருமன்றங்களினும் பலியிட்டனர்.

சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து
துணங்கையர் குரவையர் அணங்கெழுந் தாடிப்
பெருநில மன்னன் இருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி

[புழுக்கல்-அவரை, துவரை முதலிய; நோலை-எள்ளுருண்டை.]

வச்சிரக் கோட்டத்திலிருந்த முரசை, கச்சை யணிந்த யானையின் பிடரில் ஏற்றினார்கள். அவ் யானையை வெள்ளை யானை விளங்கி நின்ற கோயிலின் முன் நிறுத்தி விழாவின் முதலும் முடிவும் மக்களுக்கு அறிவித்தார்கள். கற்பக விருக்ஷம் கவின் பெற்று நிற்கும் கோயிலிலே மங்கலமான கொடியை வானளாவப் பறக்க விட்டனர். மாட மாளிகைகளும் வீதிகளும் மகர தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டன.

ஐம்பெருங்குழு, எண்பேராயம், சிற்றரசர், செல்வந்தர் முதலியோர் திரண்டுசென்று எழில் மிக்க இந்திரன்

கோயிலை எய்தினர். சங்கமத் துறையிலிருந்து செய்பொற் குடங்களிலே கொண்டு வந்த காவிரியின் குளிர்ந்த நீரால் விண்ணவர் தலைவனை விழு நீராட்டினர்.

பின் பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலிலும், அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலிலும், பலதேவன் ஆலயத்திலும், நீலமேனி நெடியோன் கோயிலிலும், முத்த மாலை யணிந்த வெண் கொற்றக் குடையை யுடைய வாசவன் கோயிலிலும், வேத விதிப்படி ஓமங்கள் நடந்தன. அருகர் பள்ளிகளில் ஆன்றோர் சரிதங்கள் படிக்கப்பட்டன. அறங்கூறும் அவையத்தில் தரும சாத்திரம் போதிக்கப் பட்டது. விழாக் காலத்து விசனிப்பார் ஒருவருங் கூடாதென, சிறைப் பட்டோரை சிறை வீடு செய்தான் செம்பியன். குழல், யாழ் முதலிய இன்னிசைக் கருவிகளின் இயல் புணர்ந்த பாணர், வானவரும், மக்களும் வாய் பிளந்து கேட்குமாறு பல விடங்களில் சங்கீதக் கச்சேரிகள் சிறப்புடன் செய்தினர். பகலிலும் இரவிலும் முழவின்னோசை அடங்குமே யன்றி மக்களோசை மாறாமல் நிலை பெற்ற மாநகர் விழாவாற் பொலிந்தது. மாந்தளிர் மேனி மாதவி மடந்தை

அவரவ ரணியுட னவரவர்
  கொள்கையி
னிலையும் படிதமு நீங்கா மரபிற்
பதினோ ராடலும் பாட்டின்
  பகுதியும்
விதிமாண் கொள்கையின்

வானவரும் வியக்க விளக்கிக் காட்டினாள். மாதவி ஆட்டத்தில் மயங்காதார் இல்லை. இமைத் தலில்லாத இமையவரும் இமைக்குமாறு செய்த மாதவி நடனம் கோவலனை மகிழ்விக்கவில்லை. அவன் முகத்தில் மகிழ்ச்சிக் குறிகளைக் காணோம். விழாவின் பொருட்டு விண்ணை விட்டு வந்த வானவரும், மற்றை மக்களும் மாதவியைப் பார்த்து மகிழ்ச்சி யடைதல் அவனுக்குப் பிடிக்கவில்லை போலும்.

மாதவியும்—கண்ணகியும்

உள்ளக நறுந்தா துறைப்ப
  மீதழிந்து
கள்ளுக நடுங்கும் கழுநீர்
  போலக்
கண்ணகி கருங்கணு மாதவி
  செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ
  ருகுத்தன
எண்ணுமுறை யிடத்தினும்
  வலத்தினுந் துடித்தன
விண்ணவர் கோமான் விழவுநா
  ளகத்தென.

விழா முடிந்தது, விடிந்தால் தீர்த்த தினம். அன்றோடு அந்நகரின் தற்காலிகச் சிறப்பு தீர்ந்து விடும். நடு யாமம். தேனில் தாதுக்கள் ஊறி அக நிறைதலால், விளிம்புவரை நின்று, பின் தேன் வழிந்து சொட்டும் கழுநீர் மலரைப்போல், கூட்டமினமையைக் காட்டும் கண்ணகியின் கருங் கண்களும், மாதவியின் செங் கண் களுங் நீர் உகுத்தன. தேன் மிக் கிருந்தால் தானே வழிந்து ஓடும்.

மனக் கஷ்டம் மட்டுமிருந்தால் கண்ணீரும் தாரை தாரையாய்ப் பெருகும். தாதுக்கள் ஊறிப் பூவை நிறைப்பதால் தேன் விளிம்பு வரை பெருகுகிறது. பின் தாதுக்கள் மேலும் மேலும் ஊற, எஞ்சியுள்ள தேன் துளி துளியாய்ச் சொட்டுகிறது. மனக் கஷ்டத்தை அடக்க அடக்க அது மேலோங்குகிறது. கஷ்டத்தை வெளிப்படுத்தும் கண்ணீருக்கு மனவடக்கம் அணைபோடுகிறது. ஆகவே வெளிப்படுங் கண்ணீர் வீழாமல் விழியிலேயே நிற்கிறது. அடக்கத்தைக் கடந்து துன்பம் மேலோங்கும் போதெல்லாம் இமையில் நிறைந்து நிற்கும் கண்ணீர் துளிக்கிறது. விளிம்பு வரை பெருகிய தேன் தன்னுள் தாதுக்களை யடக்கி யிருப்பது போல், இமை நிரம்பியிருக்கும் கண்ணீரும் மனத்தில் துயரம் அடங்கி யிருப்பதைக் காட்டுகிறது.

அடக்குதலைக் காட்டிலும் ஆராத் துயரத்தை அழுது அழிப்பதே சுலபம். நண்பின் நயந்தவர்க்கு நம் துன்பத்தை வெளிப்படுத்துவதால் நன்மை யுண்டு என ஆன்றோர் கூறுவர். நம் இன்னல்களுக்காக நண்பர்கள் பரிதாபப்படுவது, அவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைக்கிறது. இருந்தாலும் அடக்குவதே ஆண்மை என அவ்வான்றோரே கூறுகின்றனர். கண்ணகிக்கும் மாதவிக்கும் ஆண்மைச் சிறப்பை அடையவேண்டுமென்ற ஆசையில்லை. அவ்வாசை இருக்குமாயின், அவர்கள் அடக்கம் அத்தகைய சிறப்பைத் தரும் அடக்கமேயல்ல. நீர் உகுக்கும் அவர்கள் கண்களே அதற்குச் சான்றாய் அமைகின்றது.

கண்ணகி கண்ணீர் விட்டால் கோவலன் தாய் தந்தையர் கஷ்டப்படுவார்கள். மாதவி கண்ணீர் விட்டால் கோவலன் கஷ்டப்படுவான். மற்றவர்க்குத் தாம் கஷ்டப்படுவதை வெளிப்படுத்த விருப்பமில்லையே யொழிய, தம் துன்பத்தை அடக்க அவர்கள் முயலவில்லை. அதனால் தான் அவர்களையும் மீறி அடுத்ததைப் பளிங்குபோல் அவர்கள் கண்ணீர் கரந்திருக்கும் கடுத்த நெஞ்சத்தைக் காட்டுகின்றது.

களிப்புக் கடலில் காவிரிப்பூம் பட்டினத்தாரை ஆழ்த்திய இந்திர விழா இன்றுடன் முடிந்து விடுகிறதே என்பது மாதவியின் மனக்குறை. மற்றவர்கள் மகிழ்ச்சி பொங்கியவராய் இருக்கத் தான் மாத்திரம் தமியளாய்த் துன்பப்பட வந்த விழா நீண்டு நீன்றதே என்பது கண்ணகியின் குறை. விழாவின் வரவால் மாதவி அடிக்கடி தன்னை ஆடலின் பொருட்டுப் பிரிந்திருக்க நேர்ந்ததே என்பது கோவலன் குறை.

கண்ணீர் உகுத்ததோடு ஒழியாது கண்ணகியின் கருங் கண்களில் இடக்கண் துடித்தது. மாதவியின் செங்கண்களில் வலக்கண் துடித்தது. இவை இனிக் கண்ணகியின் கருங்கண்கள் செங்கண்களாகவும், மாதவியின் செங்கண்கள் கருங்கண்களாகவும், மாறப் போகும் எதிர்கால நிகழ்ச்சியை இப்பொழுதே குறிப்பால் சுட்டி யுரைக்கின்றன.

—"சிவ குமாரன்"

நம்முடைய கிராமங்களும், அதன் மக்களும்

ஒரு தேசத்தின் உயிர் அதன் கிராமங்களில் தானிருந்து வருகிறது. வேறெந்த தேசத்தையும் விட இது இந்தியாவில் மிக உண்மையானதாகும். இங்கு வியாபாரம், வாணிபம், கைத் தொழில் இவைகள் நிறைந்த பெரிய பட்டணங்கள் அதிகமாகஇல்லை.

இந்தியக் கிராமங்களைக் கவனித்து வரும் ஒருவன் அவைகள் நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து வருவதை நன்கு தெரிந்து கொள்ளுவான். ரயில்வே சௌகரியங்களுக்காக பெரிய பெரிய கரைகளெடுக்கப் பட்டு இயற்கையாயமைந்துள்ள வடிகால் முதலியவைகளைக் கெடுத்து வருவதோடு, கிராமத்தின் உயிர் நாடியெனக் கருதப் பட்டு வரும் ஆறு, நதி, சிற்றாறு முதலியவைகளின் இயற்கை ஓட்டத்திற்கும் தடை ஏற்படுகிறது. இதனால் ஜனங்கள் உபயோகப் படுத்தி வரும் ஜலம் அசுத்தமானதாகச் செய்யப் பட்டு பல விதமான வியாதிகளுக்குக் காரணமாகின்றது இவ்விதமாக வியாதிகளேற் படுவதற்குக் காரணங்களேற்பட்டுக் கொண்டிருக்க வைத்திய வசதிகள் குறைந்து கொண்டு வருகின்றது. மேனாட்டு வைத்திய முறையில் பொது ஜனங்களுக்கு மயக்கம் ஏற்பட்டு விட்டதால் ஆங்காங்கிருந்து வரும் நாட்டு வைத்தியர்கள் கவனிக்கப் படுகிறார்களில்லை. இந்த மேனாட்டு வைத்தியமோ எல்லோரும் அடைந்து கொள்ள முடியாத அவ்வளவு கிராக்கியானதா யிருக்கிறது. அதுவுமல்லாமல் அவ்விதமான வைத்தியர்கள் போதுமானவர்கள் கிடைப்பதில்லையென்பதோடு, கிடைப்பவர்களும் போதுமான பயிற்சியுள்ள

கோவலனும் கண்ணகியும் காமனும் இரதியும் போல் கலந்திருந்ததைக் கூறிய பின், ஆசிரியர் 'இவர்கள் இன்பம் நிலைத்து நிற்குமா' என்று ஏக்கப் பட்டார். அவர் ஐயத்திற் கொப்ப கோவலன் மாதவி மையலில் தாழ்ந்து மறுவற்ற மனையாளை மறந்தான். மாதவியும் கோவலனும் கூடியிருக்கும் இக்காலத்தில் மாதவியின் கண் துடிப்பைக் கொண்டு, அவர்கள் இன்ப வாழ்க்கை இடர்ப்படுவதாகச் சித்தரிக்கிறார் ஆசிரியர். இரண்டு முறைகள் இன்ப வீட்டைக் கட்டினார். முடிந்த உடனேயே இரண்டு முறைகளிலும் முடித்த வீட்டை இடித்துத் தள்ளுகிறார். இதைக் காட்டிலும் வேறு எம் முறையில் 'உலகத்தில் இன்பமும் துன்பமும் மாறியே வரும்' எனும் உண்மையை ஆசிரியர் மக்கள் மனத்தில் ஆழ்ந்து பதியுமாறு செய்ய முடியும்?

விக்கிரமன்

வர்களா யிருப்பதில்லை. இவ்வைத்தியப்படிப்பில் எல்லோருக்குமே ஒரு மோகமிருந்து வருவதால் வைத்தியப் படிப்பிற்கு மனுச் செய்து கொள்ளுபவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டு ஏற்கனவே பயின்று வருபவர்களை, திருப்தியான அளவுக்குப் படிப்பில் வரமல் போனாலும் டாக்டராக்கி விடுகிறார்கள். நன்கு படித்துத் தேறியுள்ளவர்களோ, அவர்களின் திறமையினால் எந்த இடத்திலும் அவரது தொழிலில் நிரம்பட விளங்குகிறார்கள். கிராமங்களுக் கெல்லாம் இவ்வகைப் பட்டவர்களின் உதவி கிடைப்பதில்லை. மிகச் சாதாரணமானவர்களுக்குச் சாதகமான இடங்களாய் கிராமங்கள் அமைகின்றன. வியாதியால் பீடிக்கப்பட்டு பலவீனமடைந்த தேகத்தில் இதர வியாதிகளும் எளிதில் பற்றிக் கொள்ளுவது போல், அரை குறைப் படிப்பாளிகள் கிராமங்களில் க்ஷேமத்துச்குப் பதிலாக க்ஷாமத்தை உண்டாக்கி வருகிறார்கள்.

இணையற்ற இயந்திரப் போட்டி கிராமப் பொருளாதாரத்தின் அடிப்படையைத் தாக்குகிறது. கிராமவாசிகளின் தேவைகள் எபபோழுதும் போலிருந்து வர அவர்களின் உற்பத்திச் சக்தி அறவே ஒழிந்து விட்டது அவர்களது தேவைப் பொருள்கள் இதர இயந்திர சாலைகளிலிருந்து கொண்டு வர வேண்டிய திருக்கிறது. இதனால் உள் நாட்டிலேயே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்த பணம் வெளியேறி திரும்ப வராமலே போய் விடுகின்றது. கிராமத் தொழிலாளிகள் அவர்களது கைத் தொழில்களை விட்டு விட்டு வயிற்றுப் பிழைப்புக்கு, அவர்களது பிழைப்பைக் கெடுத்த அடுத்துள்ள இயந்திர சாலைகளை நாட வேண்டியதாயிற்று. ஆண் பெண் வித்தியாசமில்லாது ஒரேயடியாய் கூலிக், கூடாரங்களில் அடைக்கப்படுவதும், தொழிற்சாலையின் ஒரே விதமான வெறுப்பைத் தரக் கூடிய வேலையும், ஜன சமூகத்தின் ஆரோக்கியத்தையும் ஆசாரங்களையும் அழித்து வருகின்றன.

கிராமத்தின் சமுதாய வாழ்வும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாய் கிராமங்களிலுள்ள ஜமீந்தார்கள் தான் ஜனங்களின் பழக்க வழக்கங்களுக்கும் அவர்களது வாழ்க்கைத் தரத்திற்கும்காரணஸ்தர்களாயிருந்து வருகிறார்கள். அவர்களும் நகரங்களின் நாகரிகங்களில் மூழ்கி கிராமங்களை விட்டு நகரங்களில் வசிக்க ஆரம்பிக்கின்றனர். ஆகையால் அவர்கள் நேரில் இருந்தால் கிடைக்கக் கூடிய நியாயங்களும் கிராம ஜனங்களுக்குக் கிடைக்காமற் போகிறது. குடியானவர்களிடமிருந்து குத்தகையோ அல்லது வாரமோ வசூலிக்கும் பொறுப்பு சிறு உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. அவ்வுத்தியோகஸ்தர்களும் குடியானவர்களின் அறிவில்லாமையையும் ஆதரவற்ற தன்மையையும் அறிந்து அதிகார மற்ற தொகைகளையும் கூட அநீத முறையில் வசூலித்து வருகின்றனர். ஆகவே ஜமீன்தாரித்துவம் ஜனங்களால் வெறுக்கப்பட்டு அம்முறையை அழிப்பதற்கான தீவிரமான கிளர்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன.

தனக்காதரவாயிருந்த ஜமீந்தார் போனதினால் கிராமப் புனித வாழக்கைக்கும், உயர் நோக்குக்கும் காரணமாயிருந்த கிராம குருவின் செல்வாக்கும் போய் விடுகிறது. அந்தஸ்தானத்திற்கு போலி உபாத்தியாயர்கள் தோன்றுகின்றனர். இவர்கள் உபாத்தியாயர் தொழில் மட்டிலுமல்லாது லேவா தேவித் தொழில், லாயர்களுக்குக் கேஸ் பிடித்துக் கொடுக்கும் தொழில் ஆகியவைகளும் செய்கின்றனர். இவ்வித பல வேலைகளிலீடுபடுபவர்களாயிருந்தாலும் அவர்களது ஜீவனோபாயத்திற்கு ஜில்லா போர்ட்டார்கள் கொடுக்கும் தொகையையே நம்பியிருக்கிறார்கள். ஆகவே இவர்கள் அந்த போர்ட் அங்கத்தினர்களை (ஆங்காங்குள்ள பணக்காரர்களும் செல்வாக்குள்ளவர்களும்) அவர்கள் அறிவில் குறைந்தவர்களேயானாலும் ஆராதிக்க வேண்டியவர்களாகின்றனர். இப்பள்ளிக் கூடங்களுக்கு வரும் மாணுக்கர்களோ ஆங்கிலப் படிப்பிற்குப் பணம் கொடுக்க முடியாதவர்கள். அப்படியே கொடுக்கக் கூடியவர்களாயிருந்தாலும் வாழ்க்கையில் பரந்த நோக்கமில்லாதவர்கள். இந்நிலையில் பழங்கால அறிவும் ஆற்றலும், குறைந்து நசித்துக் கொண்டு வருவதில் ஆச்சரியப் படுவதற்கில்லை யல்லவா?

இவ்விதம் படித்த சிலர் மேல் படிப்பிற்காக பட்டணங்களுக்குச் செல்லுகின்றார்கள். அங்கு படித்துத் தேறி உத்தியோகத்திலமர்ந்து விட்டால் அங்கேயே ஸ்திரமாக வாழ ஆரம்பிக்கிறார்கள். அதாவது கல்யாணம் முதலிய காரணங்களைக் கொண்டு சொந்தக் கிராமங்களுக்கு வர நேர்ந்தாலும் நகரத்தின் சுகவாழ்வு அவர்களை அதி சீக்கிரத்தில் அங்கிழுத்துச் செல்லுகிறது. நகரத்திலெங்கும் உத்தியோகம் கிடைக்காமலோ அல்லது கிடைத்தும் வாழ முடியாமலோ ஆகும் சந்தர்ப்பங்களில்தான் தன் பரம்பரையான ஊரை நினைத்து அங்கு வந்து கஷ்ட வாழ்வு வாழ்ந்து தன் ஆயுளை முடித்துக் கொள்ளுகிறார்கள்.

கிராம மக்களின் தேவைகளும் அறிவில்லாமையும், அவர்களைப் பெருமையையும், நியாயத்தையும் மறக்கச் செய்து ஓயாத வழக்குகளில் ஈடுபடச் செய்கிறது. பக்கத்து தாலுகா கோர்ட்டிலுள்ள வக்கீல் குமாஸ்தாக்களுக்கு கிராமங்கள் தகுந்த மார்க்கெட்டாய் விளங்குகின்றன. கிராமங்களில் பழக்கமுள்ள ஒருவனுக்கு எவ்வளவு துச்சமான ஒரு காரியத்துக்கு, எவ்வளவு அல்பமான ஒரு சம்பவத்துக்கு, எவ்வளவு கேவலமான ஒரு காரணத்துக்கு வழக்குகள் ஆரம்பிக்கப் படுகின்றனவென்பது நன்கு தெரிய வரும். இந்த வழக்கில் தரகர்களால் கிராமங்களில் பொய் சாட்சி சொல்லுவதே தொழிலாய்க் கொண்ட ஒரு கூட்டத்தார் சதா நியாய ஸ்தலங்களிலிருந்து வருவதைக் காணலாம். அதோடு கூட தங்களுடைய கேஸ்களை பலப்படுத்தக் கூடிய விதத்தில் தஸ்தாவேஜுகள் தயார் செய்யக் கூடிய கள்ளக் கையெழுத்திடும் கூட்டத்தாரும் உற்பத்தியாயுள்ளனர். இவ்விதமாக நீதி மன்றங்கள் துர்வாடிக்கைகளை உண்டு பண்ணிக் கிராமங்களுக்கு மனுப்பி ஜனங்களின் ஜீவியத்தைப் பாழ் செய்து வருகின்றன. வழக்கென்னும் தொத்து வியாதி கிராமங்களிலெல்லாம் பரவி யிருப்ப

தைப் பார்க்கும் பொழுது யாராவதொருவர் அங்கு போனால் கூட பற்றிக் கொள்ளுமோ வென்று பயப்படக் கூடிய நிலையை அடைந்துள்ளது.

மேதாவிகள் இந்நிலையை சீர்படுத்த முடியாதா வென்று ஆலோசித்து வருகிறார்களென்றாலும், நோயாளி, அவனது நன்மைக்காக மருந்து ஊட்டும் விரலையே கடித்து விட்டாலோ என்று பயப்படுகிறார்கள். செல்வாக்கு அதிகம் படைத்த ஒரு கூட்டத்தாரின் பொறுப்பில் ஒரு சமூகத்தின் வாழ்க்கை யிருக்கிறது. அக் கூட்டத்தாரின் எண்ணங்களும் வழிகளும் நல்லதா யிருந்தால் சமூகம் முன்னேறும். இல்லையேல் என்னவாகுமென்று சொல்ல வேண்டியதில்லை. இப்பொழுதைய கிராமப் பிற்போக்குக்குக் காரணம், அறிவு, ஆற்றல், செல்வம், ஒழிவு நேரம் இவைகள் பெற்ற மத்திய வகுப்பார் இல்லாதது தான். முன் காலத்தில் அவ்வித வகுப்பாரிருந்து வந்தனர். அவர்களிப்பொழுது கிராமங்களை விட்டுச் சென்று விட்டனர். அவர்களைத் திரும்பக் கொண்டு வந்து சேர்க்க வேணும். வருடம் பூராவும் சாதாரணமாய்ப் போய் வரக் கூடியதான ரோடுகள் நகரங்களுக்கும் நாட்டுப் புறங்களுக்கு மிடையே அமைக்க வேண்டும்.

கிராம அபிவிருத்திக்கான மற்றுமோர் விஷயம் அவைகளுக்கு மின்சார வசதி ஏற்படுவதே யாகும். ஒவ்வொரு கிராமங்களிலும் அல்லது பல கிராமங்கள் சேர்ந்து ஒவ்வொரு வீட்டுக்கும் குறைந்த சார்ஜில் மின்சார சக்தி கிடைக்கக் கூடிய வழிகளை யோசித்து முடிவு செய்ய போர்டுகள் அமைக்க வேண்டும். நிலக் கரியும் நீர் வீழ்ச்சியும் உள்ள பிரதேசங்களில் இதனை எளிதில் செய்து கொள்ளலாம். ஏனைய பிரதேசங்களிலும் இதற்கான திட்டங்கள் வகுத்து வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். குறைந்த விகிதத்தில் குடிகளுக்கு மின்சாரம் கிடைப்பதினால் குடிசைத் தொழிலபிவிருத்திக்கு இடமிருக்கிறது. கிராமங்களில் முந்திய சுறுசுறுப்பும் ஏற்படலாம். இவ்விதம் தொழில் கிடைக்கும் பட்சத்தில் நகரத்தொழிற் சாலைகளில் அசௌகர்யத்தால் அவதியுறும் கிராம மக்கள் அவைகளை விட்டு கிராமங்களிலேயே சிறு சிறு தொழில்கள் செய்ய ஆரம்பிப்பார்கள். மேலும் மின்சார சக்தி கிடைப்பதால் கிராமங்களில் ஸினிமாக்களும், ரேடியோக்களும், டெலிபோன் வசதி முதலியவைகளும் ஏற்படலாம். இவைகள் நகர வாழ்க்கையை வெறுக்கும் பணக்காரர்களையும் கூட கிராமங்களுக்கு இழுத்துச் செல்லும்.

கிராம முன்னேற்றத்துக்கு அதி முக்கியமானது கல்வியறிவு. அதுவும் அதனுடைய நிர்வாகம் அந்தந்தஸ்தல நிர்வாகிகளிடமிருக்க வேண்டும்; ஒரே அதிகாரிகளிடமிருந்து வருவதானது நன்மையைச் செய்வதைக் காட்டிலும் தீமையையே விளைவித்துள்ளதென்பது அனுபவத்தில் கண்ட விஷயம். கல்வி போர்டில் அனுபவசாலிகள் அங்கம் பெறுவதுடன் சர்க்காரின் பிரதிநிதிகளும் இருந்து வர வேண்டும். இப் போர்டார் கைத் தொழிலுக்

—"கமலநாதன்"

ஆதி மனிதர்கள் நெருப்பைக் கண்டு பிடித்தது எப்படி?

இந்தக் காலத்திலே காலணாவுக்கு ஒரு நெருப்புப் பெட்டி. பைசாவுக்கு ஒரு பெட்டி கிடைக்கிறதென்றுங் கூட சொல்லலாம், ஆனால் நம்முடைய முன்னோர்கள் இந்த நெருப்பை எப்படிக் கண்டு பிடித்தார்கள் என்பதை நாம் தெரிய வேண்டாமா? இதை யெல்லாம் தெரிந்து நமக்கு என்ன ஆவது என்று சில பேர் நினைக்கலாம். அவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை. இதைத் தெரியாதிருந்துதான் அவர்கள் கண்டதென்ன? நேற்று, அல்லது சில வருஷங்களுக்கு முன்னே நாமே செய்த ஒரு காரியத்தை இன்று ஞாபகப் படுத்திப் பார்த்தால், நமக்கு ஒரு ஆச்சர்யமும் சந்தோஷமும் ஏற்படுகிறதல்லவா? நம்முடைய முன்னோர்கள் நெருப்பை எப்படிக் கண்டார்கள். எப்படி உபயோகித்து வந்தார்கள் என்பதைப் பற்றி அழகான ஒரு கற்பனையை நான் சமீபத்தில் படித்தேன். அதை நாம் யாவரும் படித்து ரசிப்போமே.

ஐம்பது அறுபது ஆயிர வருஷங்களுக்கு முந்திய விஷயம். மத்திய தரைக் கடலுக்கு வடபாகத்தில் சிலர் குகைகளிலே வசித்துக் கொண்டிருந்தனர். இரவு நேரம். நல்ல வெயில் காலம். பெரும்புயல் அடித்தது. மேகங்கள் முழங்கின. இடையிடையே மின்னல்கள் ஜொலித்தன. பயத்தால், அந்தக் குகைவாசிகள் தங்கள் குகைகளுக்குள்ளே நன்றாக ஒளிந்து கொண்டனர். விடிந்தது. சூரியன் உதயமானான். விழித்தார்

கென பிரத்தியேகமான தொகைகள் ஒதுக்கி வைத்து தகுந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கொடுத்து அவர்களுக்கு அத்துறையில் ஊக்க மூட்டுவிக்க வேணும். பொதுவாக பட்டம் பெறும் படிப்பினைக் காட்டிலும் அறிவைப் பெருக்கி உபஜீவனத்துக்கு வழியைக் காட்டும் படிப்பினைப் போதிக்கும் கல்வி முறையைக் கண்டு பிடிக்க வேண்டும். கிராம மக்களே பட்டம் பெறுவதினால் மட்டும் உலகத்தில் சுகமாக வாழ முடியாதென்றும் அறிவைப் பெருக்கிக் கொண்டு தொழில்களில் ஈடுபடுவதே சாலச் சிறந்ததென்றும் அனுபவத்தில் தெரிந்து கொள்வார்களாதலால் ஆரம்பத்தில் சிரமமா யிருந்தாலும் இத்திட்டங்களுக்கு காலக் கிரமத்தில் மிகுந்த ஆதரவு கிடைக்குமென்பதில் ஐயமில்லை.

கள் ஜனங்கள் தங்கள் குகைகளை விட்டு வெளியே வந்தனர். பல மரங்கள், பல கிளைகள் எரிந்து கிடப்பதைக் கண்டனர். அப்படியே ஆச்சர்யத்தால் ஸ்தம்பித்து விட்டார்கள். இந்த நெருப்பால், அம்மரத்திலிருந்த பறவைகளிற் சில கரிந்து இறந்து கிடப்பதை அவர்களில் ஒருவன் பார்த்தான். அவைகளை யெடுத்துத் தின்னலா மென்பது அவன் ஆசை. காலை நேரம். பசி அதிகம். கிட்டப் போகப் பயம். அக்கால மனிதர்கள் நெருப்புக்கு அவ்வளவு பயந்தவர்கள். இவர்களிலே ஒருவன் கொஞ்சம் தைரியமாக இறந்து கிடக்கிற பறவைகளின் அருகே சென்றான். கையிலெடுத்தான். அவற்றின் மீது படிந்திருக்கும் சாம்பலைத் துடைத்தான். வாயிலிட்டுத் தின்றான். அவன் அடைந்த சந்தோஷத்தை என்னென்பது? இதுவரை பச்சை மாமிசத்தைப் பல்நோவக் கடித்தவனுக்கு இவை மிகவும் மிருவோயிருந்தன. ருசியும் வேறாயிருந்தது. கொஞ்சத்தைத் தன்னுடைய சிநேகர்களுக்கும் கொடுத்தான். அவர்களும் தின்றனர். இவ்விஷயம் அங்கங்கு பரவிற்று யாவரும், இவ்விதம் எரிந்து கிடக்கும் பறவைகளைத் தேட ஆரம்பித்தனர். மரங்களிலே நெருப்பு எரிந்து கொண்டிருந்தன. இந்நெருப்பின் காரணமாகவே, இப் பறவைகள் எரிந்திருக்க வேண்டு மென்றும், இதனாலேயே இம் மாமிசம் இவ்வளவு ருசியாயும் மெதுவாயும் இருக்கிறதென்றும் எண்ணினர். ஆனதால் இந்த நெருப்பை யெடுத்துப் பத்திரப் படுத்த வேண்டுமென்பது அவர்களது ஆசை. சரி, கிட்டப் போவது யார்? இந்த நிலைமையில் ஒருவன் கொஞ்சம் தைர்யமாக கிட்டச் சென்று ஒரு நெருப்புத் துண்டை ஒரு கல்லின் மேல் வைத்துக் கொண்டு குகைக்குச் சென்றான். கொஞ்ச நேரத்தில் நெருப்பு அணைய ஆரம்பித்தது. அவன் என்ன செய்வான் பாவம், பக்கத்திலிருந்த சருகுகளை அதன் மீது தள்ளினான். நெருப்பு அணையாமல் மட்டும் இருக்கவில்லை. ஜாஸ்தியாகவே பிடித்துக் கொண்டது! அவன் அடைந்த சந்தோஷத்திற்கு எல்லை யுண்டோ! நெருப்பைக் காப்பாற்றும் வித்தையையும் மனிதன் கற்றுக் கொண்டான்.

வெற்றி யென்பது என்ன?
அது முயற்சியின் உருவம்.

—சுதர்சன்.

மூன்றாவது வருஷம்

"ஜோதி"யின்

பைண்டு வால்யூம்

இரண்டு புஸ்தகங்களாக
தயாராகிவிட்டது.

விலை ரூபா 4—8—0

தபால் செலவு

பர்மாவுக்கு 0-6-0 இந்தியாவுக்கு 0-8-0
மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு ரூ. 2

தபால் செலவுடன் மணியார்டர் செய்யுங்கள்

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்,
47, 31-வது வீதி, இரங்கோன்.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932ம் ௵ ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளிவருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள் சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய சகல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறாமல் மலர்வது.

வருஷ சந்தா :

உள் நாடு : ரூ. 4-0-0
பர்மா : ரூ. 4-8-0
வெளிநாடு: ரூ. 6-0-0

தனிப் பிரதி அணா ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,
மயிலாப்பூர் : : : : மதராஸ்